வேளாண்மையும் பண்பாடும்

CONNEMARA PUBLIC LIBRARY
6 - JUN 1978
MADRAS

VELANMAIYUM PANPATUM

வேளாண்மையும் பண்பாடும்

CONNEMARA PUBLIC LIBRARY
6 - JUN 1978
MADRAS
CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

இல. செ. கந்தசாமி, எம். ஏ.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர் (மொழித் துறை),
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.

KANTACAMI (Ila Ce)

20353

வெளியீடு :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயமுத்தூர்

1974

6 JUN 1978
MADRAS

அணிந்துரை

தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழி. அம்மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களே அதன் தொன்மைக்குச் சான்றாகும். அந்நூல்களுள் கூறப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்களுள் வேளாண்மை பற்றிய குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. அவை வாழ்க்கையோடு ஒட்டியதாகவும் வாழ்க்கையின் விளக்கமாகவும் அமைந்துள்ளன.

வேளாண்மை நம் நாட்டின் மிகப் பழமையான தொழில். மனிதன் உண்ணவும், உடுத்திக் கொள்ளவும், வீடு அமைத்துக் கொள்ளவும் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களனைத்தும் வேளாண்மையைச் சார்ந்தவையே. இவ்வடிப்படையில் வேளாண்மையின் சிறப்பையும், அதன்வழி அறிந்து போற்ற வேண்டிய பண்பாடுகளையும் விளக்குவதே 'வேளாண்மையும் பண்பாடும்' என்னும் நூலாகும்.

தமிழ் மொழியின் மிகப் பழமையான சங்க இலக்கியம் தொடங்கி 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களாகிய பாரதியார், பாரதிதாசன் வரையான நூல்களிலுள்ள வேளாண்மைத் தொடர்பான கருத்துக்கள் பலவும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. அக்கருத்துக்களை, வேளாண்மைக்கு அடிப்படையாக விளங்கும் ஆதாரப் பொருள்கள், வேளாண் விளை பொருள்கள், வேளாண் துணைப் பொருள்கள், வேளாண் சார்புப்பொருள்கள் எனப் பாகுபாடு கொண்டு, அவற்றின் வழி அறியக்கிடக்கும் மக்கட் பண்புகள் பல ஆராயப்பட்டுள்ளன.

நிலம் காட்டும் பொறுமை, பயிர்கள் விளக்கும் பணிவுடைமை, வயல்கள் விளக்கும் வாழ்வியல் உண்மைகள், மரஞ்செடிகொடிகளின்

வளர்ச்சியில் இலைமறைவு காய்மறைவாகக் காணக்கிடக்கும் பண்புகள், கால் நடைகளும், காட்டுவிலங்குகளும், கடல்வாழ் உயிரினங்களும் விளக்குபவை, உழவன் நிலத்தை உழும்போதும், விதைக்கும்போதும், அறுவடையின் போதும் அறிந்து கொள்பவை எனப் பல்வேறு சூழலில் பண்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் பண்டைத் தமிழ் மக்கள் வேளாண்மையில் கொண்டிருந்த ஈடுபாட்டையும், அத்தொழிலையே ஆசானாகக் கொண்டு அரிய பண்பாடுகளை வளர்த்துக் கொண்டதையும், இன்றைய மக்கள் அறிந்து கொள்ள வழிகோலுவதுடன், இன்றைய வேளாண்மைச் செய்திகள் இலக்கியங்களாக மலரவேண்டும் என்பதற்கும் ஒரு தூண்டுகோலாக உதவுகிறது எனலாம்.

வேளாண்மையோடு தொடர்புடைய இத்தகைய இலக்கிய நூல்களை வெளியிடுவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது. 'வேளாண்மையும் பண்பாடும்' என்னும் இந்நூலை எழுதிய தமிழ்த்துணைப் பேராசிரியர் திரு. இல. செ. கந்தசாமி அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இந்நூலை வேளாண் பெருமக்களும், மாணவர்களும், அறிஞர்களும், மற்றும் ஏனையோரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்பதே எனது விருப்பம்.

கோயமுத்தூர்-3,
5-10-1974.

கோ. அரங்கசாமி,
துணைவேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 JUN 1978
MADRAS

ஆய்வுரை

தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடும் பயிற்சியும் உடையவர்கள் பலரும் அவற்றில் காணப்பெறும் இலக்கிய நயங்களையே கண்டு களிக்கின்றனர். ஒரு சிலர் தாம் கண்ட நயங்களைப் பற்றிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளனர். ஒரு சமுதாயத்தில் தோன்றிய இலக்கியம் அச் சமுதாய மக்கள் தம் வாழ்வில் கண்டு தெளிந்த குறிக்கோள்கள், அவர்தம் நாகரிகம், பண்பாடு என்பனவற்றின் கண்ணாடியாகும் எனத் திறனாய்வாளர் கூறுகின்றனர். என்றாலும், தமிழருடைய வாழ்வு, நாகரிகம், பண்பாடு என்பனவற்றை ஆராய அவர்களுடைய இலக்கியங்களை ஒரு கருவியாகக் கொண்டு பலரும் ஆராய்ந்து நூல்கள் வெளியிட்டதாக அறியக்கூடவில்லை. அதிலும் சிறப்பாகத் தமிழர் பண்பாட்டினைத் தமிழ் இலக்கியத்திற் காணப்பெறும் வேளாண்மை பற்றிய குறிப்புக்களைக் கொண்டு யாரும் இதுவரை நூல் ஒன்றும் எழுதவில்லை. பேராசிரியர் இல. செ. கந்தசாமி அவர்கள் தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடும் பயிற்சியும் உடைமையினாலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற் பணிபுரிவதனாலும் இப்பணியைச் செய்ய முற்றிலும் தகுதி பெற்றவராகிறார்.

‘வேளாண்மையும் பண்பாடும்’ என்ற இந்நூலின் ஆசிரியர் இப்புது முயற்சியில் ஈடுபட்டது பெரிதும் வரவேற்கத் தக்கதாகும். வேளாண்மை என்ற சொல்லுக்கு மிகவும் விரிந்த பொருளைக் கொண்டுள்ளார் இவ்வாசிரியர்.

மனித வரலாற்றை ஆய்பவர்கள், மருதத்திணை என்று பண்டையோர் கூறிய வேளாண்மைத் துறையின் வளர்ச்சியில்தான் அவனுடைய அறிவு முழுவதையும், முயற்சி முழுவதையும் பயன்படுத்தினான் என்பதை

அறிய முடியும். இந்த மருதநில வாழ்க்கையில்தான் சமுதாயமாகக் கூடி வாழ்வதன் இன்றியமையாமையை அவன் அறிய முடிந்தது. இக் கூட்டு வாழ்க்கையில்தான் நாகரிகம், பண்பாடு என்பவை தோன்றலாயின.

வேளாண் வாழ்க்கையில் பெரிதும் பயன்பட்ட மாடுகள் கூட மனிதனுக்குச் சிறந்த படிப்பினையைக் கற்றுத்தந்தன. தம் உழைப்பின் பயனை மனிதனுக்கு வழங்கிவிட்டு இம் மாடுகள் அவனுக்கு வேண்டாத வைக்கோலை விரும்பியுண்டன. இதனைக் கண்ட தமிழன் 'உழுத நோன் பகடு அழிதின்றாங்கு' என்று கூறும்போது 'தானும் பிறர் பொருட்டாக வாழவேண்டும்' என்ற ஒப்புயர்வற்ற பண்பாட்டை அறிந்துகொண்டான்.

மனிதன் முதன் முதலாக வயலில் கற்றுக்கொண்ட இப் பால பாடமே நாளாவட்டத்தில் அவனைத் 'தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளனாக' ஆக்கி, வெறும் ஆத்மாவாக இருந்த அவனை மகாத்மாவாக ஆக்கவும் உதவிற்று. மாட்டுடனும், பயிர்களுடனும் அவன் கொண்டிருந்த அன்புத்தொடர்பு மேலும் வளர்ந்து ஓரறிவு படைத்த புல் பூண்டிற்கும் ஆறறிவு படைத்த தனக்கும் ஒரு தொடர்பு இருப்பதை அறிந்தான். எனவே அவன் முழு வளர்ச்சிபெற உதவியது வேளாண் தொழிலேயாகும்.

இவ் வுண்மையை நன்கறிந்த பழந்தமிழ்க் கவிஞர்கள் இயற்கை, வேளாண்மைத் தொழில் இவற்றைக் கொண்டே அம் மானிட சமுதாயத்தின் பண்பாட்டை உணர்த்தினர். இக் கருத்தை மனத்தில் வாங்கிக் கொள்ளாமல் பிற்காலத்தார் அக்கவிதைகளைப் படிக்கும்பொழுது அவற்றை வருணனைகளாகவும், சொல்லோவியங்களாகவும், உவமைகளாகவுமே கண்டனர்.

இந் நூலாசிரியர், இதன் எதிராக வருணனை, சொல்லோவியம், உவமை முதலியவற்றைப் புதிய கண்ணோட்டத்தில் காண முற்படுகின்றார். 'அரைத்த மாவை அரைப்பதைக்' கலையாக வளர்த்துவிட்ட தமிழகத்திற்கு இம் முயற்சி சிறந்த முன்மாதிரியாகும். இந் நூலை வேளாண்மைப் பல்கலைக்

கழகமே வெளியிடுகிறது என அறிகிறேன். 'மனிதன் ரொட்டித் துண்டால் மட்டும் வாழவில்லை' என்பதை உணர்ந்து, உடம்பை வளர்க்கும் உபாயமாகிய உணவைப் பெருக்கும் பல்கலைக் கழகம் உள்ளத்தை வளர்க்கும் இதுபோன்ற பணிகளிலும் புகுந்தமைக்காக அப் பல்கலைக் கழகத்தையும் அதன் துணைவேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்களையும் பாராட்டுகிறேன்.

புது முயற்சியில் ஈடுபட்டுள்ள திரு. இல. செ. கந்தசாமி அவர்களின் மூலம் இதுபோன்ற இன்னும் பல நூல்கள் வெளிவருமெனத் தமிழ் உலகம் எதிர்பார்க்கும் என நம்புகிறேன்.

சென்னை-28,
12-9-1974.

அ. ச. ஞானசம்பந்தன்

CONNEMARA PUBLIC LIBRARY
6 JUN 1978
MADRAS

முன்னுரை...

CONNEMARA PUBLIC LIBRARY
6 JUN 1976
MADRAS

தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினைக் கொண்டவர்கள். இயற்கையின் நுட்பங்களை நன்கு அறிந்தவர்கள். அவற்றின் தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி, ஒவ்வொன்றிலும் கருத்து செலுத்தியவர்கள். அவ்வியற்கைக் கூறுகளை வாழ்க்கையோடு இணைத்துக் காணுவதில் மகிழ்ச்சி அடைந்தவர்கள். இயற்கையின் உயர்பண்புகள் தம் வாழ்க்கையிலும் இலங்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்கள்.

தமிழர்களின் தலையாய தொழில் வேளாண்மை. அஃது ஓர் இயற்கைத் தொழில். பயிர்கள் வளர்ப்பதும் மரங்கள் வளர்ப்பதும் கால்நடைகள் வளர்ப்பதும் இயற்கையை முறைப்படுத்தி வளர்ப்பதே. அங்கொன்றும் இங்கொன்றுமாக வளர்ந்த மரங்களைத் தங்கள் தோட்டத்தில் வரிசை வரிசையாக வைத்து வளர்ப்பதும், அவ்வாறே காடுகளில் திரிந்த கால்நடைகளைப் பழக்கிப் பயன்கொள்வதும் இயற்கையை முறைப்படுத்துதல் தானே? ஆதலின், அவர்களின் வாழ்வின் பெரும்பகுதி இயற்கையுடனேயே கழிந்தது. தம்முடன் இருக்கும் உயிர்களையும் பயிர்களையும் ஆராய்வதும், அவற்றின் பண்புகளை எண்ணிப் பார்ப்பதும் பொதுவான இயல்பே. உழவுத் தொழிலை உயிர்த் தொழிலாகக் கொண்ட பண்டைத் தமிழர்கள் தாம் வளர்க்கின்ற ஒவ்வொரு பயிரிலும், பேணுகின்ற ஒவ்வோர் உயிரினிடத்தும் உள்ள சிறப்பான பண்புகளைக் கண்டு அவற்றை வாழ்க்கையில் மேற்கொண்டனர்.

வேளாண்மை பரந்து விரிந்த தொழில். ஒரு நாட்டை ஆளும் அரசன் முதல் அந்நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதன் வரை ஏதேனும் ஒருவகையில் அத்தொழிலோடு தொடர்பு கொண்டேயாக வேண்டும். மன்னன் மக்களுக்குக் கூறும் அன்புரையில், புலவர் மன்னனுக்குக் கூறும் அறிவுரையில், ஆசான் மாணாக்கர்க்குக் கூறும் கருத்துரையில், தலைவன் தலைவிக்குக் கூறும் காதல் மொழியில், தலைவி தன் காதல் இன்பத்தைத் தோழிக்குக் கூறும் மகிழ்வுரையில், குடி மக்கள் பேச்சுக்களில், ஏன், முற்றும் துறந்த முனிவர்கள் கூறும்

JUN 1978

ஆசிமொழிகளில், இன்ன பிறவற்றில், வேளாண்மை பற்றிய குறிப்புக்களைக் காணலாம். அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் உவமைகள், சொல் வழக்குகள், பாடல்கள் ஆகிய அனைத்திலும் பயிர்த்தொழில் சார்பான செய்திகள் கலந்திருப்பது கண்கூடு. அச்செய்திகள் பண்பாட்டை விளக்கும் பாங்கினையும் காணலாம்.

'வேளாண்மையும் பண்பாடும்' எனும் இந்நூல் தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை வழி அறியக்கிடக்கும் பண்பாடுகளை ஆராய்கின்றது. நிலத்தையும் நீரையும் கொண்டு கூறிய பண்பாடுகள், வித்தையும் விளைவையும் காட்டாகக் கொண்டவை, பயிர்களையும் பிற உயிர்களையும் கொண்டு கூறியவை, தாம் தோன்றி வளர்ந்த வரலாற்றல் விளக்குபவை, மரங்களும் மலர்களும் உணர்த்துபவை, காய்களும் கனிகளும் குறிப்பவை, கானும் மீனும் காட்டி நிற்பவை எனப் பல்வேறு நோக்கில் நின்று ஆராயப்பட்டுள்ளது. இறுதியாக உள்ள ஐந்து தலைப்புகளில் 'சிலப்பதிகாரம்' என்பது பண்டைத் தமிழகம் முழுமையும் பரவியிருந்த வேளாண்மை வளத்தை விளக்கிக் காட்டுகிறது. அடுத்த இரண்டும் வேளாண்மை பற்றிக் கூறும் இரண்டு நூல்களைப் பற்றிக் கால அடிப்படையில் ஆராய்கின்றது. அடுத்த ஒன்று 20ஆம் நூற்றாண்டில் உழவர்கள் நிலைபற்றி விளக்குகின்றது. வேளாண்மை வரலாறும் பண்பாட்டை விளக்கும் ஒருவழிமுறை யாதலின் அவ்வரலாற்றுக் கட்டுரைகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதிக் கட்டுரை எதிர் காலத்தில் பண்பாட்டின் நிலை என்ன என்பதைத் தொலைநோக்காகக் காணுகின்றது.

இவ்வாறு வேளாண்மையையும் பண்பாட்டையும் இணைத்துக் காணுவதால் விளையும் நன்மை யாது? என்ற கேள்வி எழுதல் கூடும். மனிதன் செய்யும் செயல் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு நன்மை விளைய வேண்டும். அவ்வடிப்படையில் இந்நூலும் ஒரு பயன் விளைக்க வேண்டும். வாழ்க்கையில் நிகழும் அல்லது காணும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி வாழ்க்கையையே மாற்றும் பெருந்திருப்பமாக அமைந்து விடுகின்றது. அது

போல் இந்நூலில் கூறப்பட்டுள்ள காட்சிகள், கருத்துரைகள், விளக்கங்கள் ஆகியவை உள்ளுணர்வைத் தூண்டி வாழ்வைச் செம்மைப்படுத்தும். இதற்கு முன்னர் இயற்கைப் பொருள்களைக் கண்டதற்கும் இந்நூலைப் பயின்ற பிறகு காண்பதற்கும் சிறிதளவு வேறுபாடு தோன்றுமாயினும் அதுவே இந்நூலின் வெற்றியாகும்.

இந்நூல் வெளிவரும் களம் வேளாண்மைப் பல்கலைக் கழக மாதலின் கருத்திற்கும் களத்திற்கும் ஏற்ப தலைப்பு மேற் கொள்ளப்பட்டது. இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வேளாண்மை இலக்கிய வரிசையில் இரண்டாவது நூல். முதல் நூல் **திருக்குறளில் வேளாண்மை** என்பது. வேளாண்மை வளம் பெருக்குவதோடன்றித் தாய்மொழிக்கும் தொண்டு செய்யும் இப்பல்கலைக் கழகத்தை வாழ்த்துவதன்றிப் பிறிதொன்றில்லை.

தமிழுக்கு ஆக்கம் தரும் இத்தகையதொரு நூலை எழுத ஆர்வமூட்டியும் அணிந்துரை வழங்கியும் சிறப்பித்த ஆற்றல்மிகு துணைவேந்தர், **டாக்டர் கோ. அரங்கசாமி** அவர்கட்கும், நூல் முழுமையும் அச்சிடுமுன்பே பார்வையிட்டுச் செப்பம்செய்து, வடிவமைத்துக் கொடுத்த தமிழறிஞர், திறனாய்வாளர், **பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம்** அவர்கட்கும் எனது பணிவார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூல் உருவாக்கத்திற்குப் பல்லாற்றானும் உதவிய மொழித் துறைத் தலைவர் திரு. ஆர். சுதர்சனம் அவர்கட்கும், விரிவுரையாளர்கள் திரு. துரை. செகநாதன், திரு. மு. அப்துல்ரகீம், திரு. பா. தமரவடிவேலு, திரு. பி. பொன்னுசாமி ஆகியோர்க்கும், இந்நூலைப் பல்கலைக்கழக வெளியீடாக்கிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினர்க்கும் பெரிதும் நன்றியறிதலுடையேன்.

கோயமுத்தூர்-3
24-9-1974

இல். செ. கந்தசாமி

பொருளடக்கம்

...ARA PUBLIC LIBRARY
6 - JUN 1978
MADRAS

வேளாண்மையும் பண்பாடும்

1 பண்பாடு 1
2 பண்பாட்டுப் பயிர் 12
3 வாழிய நிலனே! 17
4 நீர்உயர... 24
5 ஓரேர் உழவன் 30
6 வித்தும் விளைவும் 37
7 நிலத்துக்கு அணி 43
8 உழைப்போம் உயர்வோம் 51
9 கழனியும் காவலனும் 56
10 இலக்கியக் கரும்பு 61
11 கரும்பும் காதலும் 69
12 வருமுன் காப்போம் 74
13 ஓரறிவுயிர்கள் 80
14 வெண்ணிற மலர்கள் 86
15 காயும் கனியும் 93
16 பால்வளம் 99
17 கடற்செல்வம் 105
18 மாண்புள்ள மரங்கள் 111
19 சிலப்பதிகாரம் 117
20 ஏர் எழுபது 130
21 முக்கூடற்பள்ளு 137
22 உழுவோரும் உலகோரும் 144
23 தொலைநோக்கில் பண்பாடு 150

CONNEMARA PUBLIC LIBRARY
6 - JUN 1978
MADRAS

1. பண்பாடு

I

மனிதன் தோன்றி வளர்ந்து நாகரிகம் பெற்ற வரலாறு சுவையுடையது. முதன் முதலில் அவன் மலைமுகடுகளில் தோன்றிக் காய், கனி, கிழங்குகளை உண்டு வாழ்ந்தான். விலங்குகளை வேட்டையாடி உண்டும், பின்னர் அவற்றைப் பிடித்துப் பழக்கி அவனுடைய வாழ்விற்குப் பயன்படுத்தியும் வாழ்ந்து வந்தான். அந்நிலையை நாடோடி வாழ்க்கை என்பர். அவனுக்கு அனுபவமும் அறிவும் வளரவளர நிலையான ஓரிடத்தில் வீடமைத்து வாழத் தொடங்கினான். பல வீடுகள் சேர்ந்த ஒரு பகுதி நகரம் எனப் பெயர் பெற்றது. அந் நகர வாழ்வே நாகரிக வாழ்வு எனப் போற்றப்பட்டது. அவனது உணவிலும் உடையிலும் உறைவிடத்திலும் தெளிவும் திருத்தமும் காணப்பட்டன. நிறைவாக உண்டு, சீராக உடுத்து, அளவாக உறங்கிக் காலம் கழிப்பது என்பது ஒருவகையில் புறவாழ்க்கையே. புறவாழ்வில் வளர்ச்சி ஏற்பட்ட பிறகு அவனது அகவாழ்விலும் சில பண்புகள் அரும்பத் தொடங்கின. கூடி வாழவேண்டும் என்ற கூட்டுணர்ச்சி ஏற்பட்டது. தான் உண்டு எஞ்சியிருப்பதை உணவின்றி இருப்பார்க்கும் கொடுக்கும் மனநிலை உண்டாயிற்று; அன்பு வளர்ந்தது.

தன் கூட்டத்தில் உள்ள பலருக்கும் உணவு இல்லாதபோது இருப்பதைப் பகிர்ந்து உண்ணும் பரிவுடன் பண்பு வளர்ந்தது.

இவ்வாறு பரிவில் தோன்றிய மனநெகிழ்ச்சி தன்மீது அன்புடையார்க்கும், தான் அன்பு கொண்டோர்க்கும் ஏதேனும் ஒரு சிறு துன்பம் நேரினும் அதை எதிர்க்கும் மனமாக மாறியது. இம் மனவளர்ச்சியுடன் தொழிலிலும் கலையிலும் அறிவு வளர்ச்சியும் நிகழ்ந்தது. இவ்வுணர்வுகள் எல்லாம் முதன் முதலில் கட்டுக்கடங்காத நிலையில் இருந்தன. அவலம் எனின் அளவு கடந்த அவலம்; வீரமெனின் முரட்டுத்தனமான வீரம்; ஈகை எனின் எதையும் கொடுப்பது என்பன போன்ற நிலை இருந்தது. இவ்வுணர்வுகள், தன்மைகள், குணங்கள், பண்புகள் என்பவை அறிவின் துணையுடன் செம்மைப் படுத்தப்பட்ட நிலையே பண்பாடு என்றாயிற்று. ஆதலின் நெறிப்படுத்தப்பட்ட மனித உணர்வுகளே பண்பாட்டின் தொடக்கம் எனின், அது பொருந்துவதாகும். புலன்களை நெறியல்லா நெறியில் செல்லவிடாமல் உரிய நெறியில் செலுத்துவதே புலனடக்கம் என்பார் திரு. வி.க.[1] அதுபோலக் கட்டுக்கடங்கிய, திருந்திய மனித உணர்வுகளே பண்பாடு ஆகும். இத்திருத்தத்தின் முழுமையே பண்பாட்டின் வளர்ச்சி பெற்ற நிலை. அதுவே நிறை நிலை.

பண்பாடு என்னும் சொல் ஒரு கூட்டுச் சொல்லாகும். சங்க காலம் தொடங்கிப் பண்பு, பண்புடைமை, பண்புடையாளர் என்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளதே ஒழியப் பண்பாடு என்னும் சொல் சங்க இலக்கிய வழக்கில் இல்லை. அது பிற்கால வழக்காகும். அதனால் பண்பாடு எனும் சொல் கல்ச்சர் (Culture) என்ற ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பு என்பர் சிலர்.[2] அது பொருந்தாது என்பதற்குக் காரணங்கள் உண்டு.

இரண்டு அடிச்சொற்கள் சேர்ந்து ஒரு சொல்லாதல் தமிழில் உண்டு. அதனைக் கூட்டுச்சொல் என்பர். எடுத்துக்காட்டாகக் குறிக்கோள் என்ற சொல்லைக் கூறலாம் குறித்தல் + கொள்தல் என்ற சொற்களின் விகுதிகள் மறைந்து குறி—கொள் என நின்றுப் பின் வருமொழி முதல் நீண்டு குறி + கோள் = குறிக்கோள் என்று

யது போல,[3] பண்பு + படுதல் என்ற இரு சொற்கள் விகுதிகள் குன்றிப் பண், படு என நின்றுப் பின் வருமொழி முதல் நீண்டுப் பண்பாடு என்றுயிற்று எனக் கொள்வது பொருந்துவதாகும். இதற்கு எடுத்துக் காட்டாக மேம்பாடு (மேன்மை + படுதல்) கடப்பாடு (கடமை + படுதல்) என்ற சொற்களையும் கொள்ளலாம். அடிப்படைப் பண்புகளின் திருந்திய வளர்ச்சியே பண்பாடு என்றாற்போல பண்பாடு என்ற சொல்லும் திருந்திய வடிவம் கொண்டு அமைவு பெற்றுள்ளது என்பது ஈண்டு கருதத்தக்கது.

பண்பு, பண்பாடு என்ற சொற்களுக்கு அறிஞர்கள் பலர், பலவாறு விளக்கம் கூறியுள்ளனர். 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்'[4] என்பது கலித்தொகை ஆசிரியர்களுள் ஒருவரான நல்லந்துவனார் கூறும் விளக்கம். அதற்கு 'எல்லாருடைய இயல்புகளையும் அறிந்து ஒத்து நன்னெறியில் ஒழுகுதலே பண்பு' என்று உரை வகுப்பார் நச்சினார்க்கினியர். 'மக்களது அறிவுநலம் கருத்துநலம், குணநலம், கொள்கைநலம், ஒழுக்கநலம், வாழ்க்கை நலம் முதலியன மேன்மேலும் திருந்தி வரும் நிலையே பண்பாடு' என்பார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.[5] 'பண்பாடு என்பது 'மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் பெறுகின்ற அறிவு, நம்பிக்கை, கலை, அறம், சட்டம், பழக்க வழக்கங்கள், இன்னபிற திறன்கள் யாவும் ஒருங்கே அடங்கிய முழுமைக்கூறே பண்பாடு' ஆகும் என்பார் ஈ. பி. டெய்லர் என்ற அறிஞர்.[6] (Culture is that complex whole which includes knowledge, belief, art, morals, law, custom and any other capabilities acquired by man as member of society) ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு, அது ஒரு சந்ததியாரிடமிருந்து பெற்ற நடத்தையாகும் என்பர் மானிடவியல் சமூகவியல் அறிஞர்[7] (Culture is the embodiment in customs, traditions etc. of the learning of a social group over the generation) இவ்வாறு பலரும் தத்தம்நோக்கில் நின்று பண்பாட்டை விளக்க முற்படினும் அவர்களின் அடிப்படைக் கருத்து ஒன்றாக இருப்பதைக்காணலாம். அது மனிதனின் விழுமிய வாழ்க்கை நிலையைப் (Perfection in life) பண்பாடு என்று தெளிவுறுத்துவதைக் காணலாம்.

நாகரிகம், பண்பாடு என்ற சொற்கள் பெரும்பாலும் மயக்க நிலையிலேயே ஆளப்பட்டு வருகின்றன. நாகரிகம் என்ற சொல் தொடக்கத்தில் பண்பாடு என்ற பொருளைக் கொண்டிருந்தது.

'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'

நற்றிணை - 355

என்பதை, பழகிய நண்பர்கள் நஞ்சையே கொடுப்பினும் அதை உண்பதே பண்புடையார்க்கு அழகு என்ற பொருளில் ஆளுகின்றார் நற்றிணை ஆசிரியர். காலத்திற்குக் காலம் சில சொற்கள் பொருளில் மாற்றம் பெற்றுப் பெற்றுப் புதிய பொருளை ஏற்பது மொழியியலுக்கு ஏற்புடையதொன்றாகும். அவ்வகையில் நுண்பொருளில் வழங்கிய நாகரிகம் என்ற சொல் இன்று பருப் பொருளில் வழங்குகின்றது. 'புதுமை' எனும் நுண்பொருளில் வழங்கிய விருந்து முதலாய சொற்கள் இத்தகைய பருப்பொருளை ஏற்றுள்ளன.

இன்றைய நிலையில் நாகரிகம் (civilization) என்பது புறத்தோற்றத்தையும் பண்பாடு (culture) என்பது அகத்தோற் றத்தையும் விளக்குவதாகக் கொள்வது பொருந்துவதாகும். டாக்டர் சச்சுதேவ், வித்தியபூசன் என்னும் இரு சமுதாயவியல் பேராசிரியர்கள் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் கொடுக்கும் விளக்கம் ஈண்டு மனங்கொள்ளத்தக்கது. "நாகரிகம் என்பது வெளித் தோற்றத்தையும் மரபுவழி இயக்கத்தையும் குறிப்ப தாகும். பண்பாடு என்பது உள்ளார்ந்த உணர்வுகளையும் உயிர் வழி இயக்கத்தையும் உணர்த்துவதாகும்."• ("Civilization is external and mechanical while culture is internal and organic") ஆதலின் உணவு, உடை, உறையுள், தொழில், கருவி, கலை, சமுதாய அமைப்பு முதலிய புறநிலைக் கூறுகள் நாகரிகத்திற்கும், இவற்றுள் ஏற்பட்டுள்ள மேம்பாடு நாகரிக வளர்ச்சிக்கும் எடுத் துக்காட்டுகளாகும். காதல், வீரம், கொடை, அருள், அறம், ஒழுக் கம், கடமை முதலிய அகநிலைக் கூறுகளாகிய உணர்வுகளின் உயரிய நிலையே பண்பாடாகும்.

தமிழர்களின் பண்பாடு வரலாற்றுச் சிறப்புடையது. உலகின் பல பகுதிகளில் மனித இனம் தோன்றி வளர்வதற்கு முன்னரே தமிழினம் தோன்றிவிட்டதாக வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். பன்னெடுங்காலமாக, வழிவழியாக வாழ்ந்து அனுபவமும் தெளிவும் பெற்ற பிறகே அவர்கள் பண்பட்ட நிலையை எய்தியிருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு. அதற்குச் சான்றாக மிளிர்பவை தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலம்பு, மேகலை, முதலாய இலக்கண இலக்கியங்களே. அத்தொன்னூல்கள் கொண்டு அவர்தம் பண்பாட்டினை ஒருவாறு மதிப்பீடு செய்யலாம்.

பண்டைத் தமிழ் மக்கள் பெருமையும் ஆற்றலும் உடையவர்களாக விளங்கினர். அவ்வாறு விளங்க வேண்டும் என்பதே அவர்கள் கொள்கையாகவும் இருந்தது. அவர்கள் பழிபாவங்கட்கு அஞ்சும் நாணமாகிய உணர்வைக் கொண்டிருந்தனர். ஒரு பொருள் மீது அளவுகடந்த விருப்புடையவர்களாக இருந்தாலும் பழியொடு வருவதாயின் அப் பொருளால் வரும் இன்பத்தை விரும்பாதவர்கள். பிற உயிர்கள் இன்பமாக இருத்தலைக் கண்டு மகிழும் பேருள்ளம் படைத்தவர்கள். அவர்கள் வீரத்தின் விளைநிலங்களாக இருந்தனர். மறச்செயல்களிலும் அறக்கோட்பாட்டைக் கொண்டிருந்தனர். தம்மோடு ஒத்த வலிமையுடையவர்களோடு போரிட்டனர். போருக்கு ஆற்றாதாரைப் புறங்கண்டு மகிழாதவர். வலியர் எனச் சிலரிடம் வழிமொழிதலையும், மெலியர் எனச் சிலரைத் தாழ்த்துவதையும் விரும்பாதவர்கள்.[10] வீரத்தோடு ஈரம் நிறைந்தவர்களாகவும் வாழ்ந்தனர். கொடுப்பதை மேலானதாகவும் கொள்வதை இழிவானதாகவும் கருதினர். முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் ஈந்த செயல்கள் அவர்தம் ஈர நெஞ்சிற்கு எடுத்துக் காட்டுகள். நன்னெறியில் பொருள் சேர்த்து அறஞ்செய்து மகிழ்வோடு வாழ்வதே அவர்கள் வாழ்வு நெறியாகும்.

தமிழர் வாழ்வில் பெண்ணினம் போற்றுதற்குரியதாக விளங்கியது. பெண்கள் கற்பின் செல்விகளாக விளங்கினர். உயிரைக்

காட்டிலும் நாணமும், நாணத்தைக்காட்டிலும் கற்பும் வலியுறுத்தப் பட்டன. 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகைசான்ற சொற் காத்துச் சோர்வு இல்லாதவர்களாக,' பழிவந்தவிடத்துப் புலி எனப் பாயும் வீரஉணர்வு மிக்கவர்களாக வாழ்ந்தனர். ஈன்று புரந்தருதலையும், விருந்தோம்புதலையும் வருவாய்க்குத் தக வாழ்தலை யும் கடமைகளாகக் கொண்டிருந்தனர். அதனால் 'பெண்ணின் பெருந்தக்கது இல்', 'மனைக்கு விளக்கம் மடவார்' என்று புகழ்ந் துரைக்கப்பட்டனர்.

மன்னனை மக்கள் தெய்வமாகப் போற்றினர். மன்னனே மக்களை உயிராகக் கருதினன். 'காட்சிக்கு எளியனாகக் கடுஞ் சொல் அற்றவனாக, ஆட்சி செய்தான்'.[11] அறிஞர்கள் தீமையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்று விளங்கினர். புலவர்கள் பொய்யைப் பாடாத நாவினராக வாழ்ந்தனர். அதனால் அவர் களுடைய நாவைச் 'செந்நா' என்று புகழ்ந்தனர். [12] வீரர்கள் புரந்தவர் கண்ணீரைப் பெறத் தம் உயிரையும் கொடுக்க அணிய மாக இருந்தனர். உழவர்கள் உயரிய நிலையில் வாழ்ந்தனர். உழவுத் தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த் தொழிலாகப் போற்றப்பட்டது. வணிகர்கள் கொடுப்பதும் குறையாமல், கொள் வதும் மிகாமல் 'நெடுநுகத்து ஆணிபோல நடுநின்ற நல்நெஞ்சின ராக வாழ்ந்தனர்,. [13] உழவும் வாணிகமும் இருகண்கள் எனப் போற்றப்பட்டன. இத்தகைய காட்சிகளே பண்டைத் தமிழர்களின் பண்பாட்டை விளக்கும் காட்சிகளாக இலக்கியத்தில் காணப்படு கின்றன. தமிழ்கூறும் நல்லுலகில் தமிழ்மக்கள் அனைவரும் இத் தகையதொரு உயரியநிலையில் இருந்தார்கள் என்பதைக்காட்டிலும், இத்தகையதொரு உயரிய நிலையை அடைய முன்னேக்கிச் சென்று கொண்டிருந்தனர் எனக் கொள்வது பொருந்துவதாகும்.

II

இத்தகைய பண்பட்ட நிலையை அடைய விரும்பிய தமிழர் களின் பண்பாட்டு வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ள புறப்பாடல்கள் இரண்டினை இங்கே குறிப்பிடுவது மிகவும்

பொருத்தமாகும். பண்புடையாளர்கள் இருப்பதால்தான் உலகம் நிலைபெற்று இருக்கிறது; இன்றேல் இவ்வுலகு என்றோ மண்ணோடு மண்ணாக அழிந்தொழிந்து போயிருக்கும்[14] என்ற வள்ளுவர் கூற்றிற்கு விடைகாண முயல்கின்றான் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன். பண்புடையாளர்களின் பண்பாட்டுக் கூறுகள் கவிதையாக மலர்கின்றது.

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. உணவு இன்றேல் பண்பாடும் இல்லை; பழம்பெருமையும் இல்லை. "பசிவந் திடப் பத்தும் பறந்துபோம்"[15] என்பது உலகறிந்த உண்மை. பசிப் பிணி என்னும் பாவி கல்வியை, அறிவை, தகுதியை, பிற நற்பண்பு களை அழித்துவிடும் ஆற்றல் பெற்றவன். ஆதலின் உணவுப் பொரு ளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைப் பெருக்கினர். தனித்து உண்ணல் பண்பாகாது; பகுத்து உண்டலே பண்பாடு என்று கருதினர். அமுதமாயினும் பழஞ்சோறாயினும் பகுத்து உண்ணும் நிலை ஏற்பட்டது. அதனால் பசித்த வயிறு இல்லாத நிலை உருவாகியது. பண்பாடு நிலைத்தது.

பசி நீங்கிய பின்னர் மனிதன் இன்பம் தேடுவது இயல்பே. தான் அடைய முயலும் இன்பத்திற்கு இடையூறு நேரும்போது வெறுப்பு உண்டாதலும் இயற்கையே. ஆனால் நேரிய வழியில் கொள்ளும் இன்பத்திற்கு இடையூறு உண்டோ! எனவே அறவழி யில் இன்பம் அடைந்தனர்; ஒருவர் இன்பத்திற்கு மற்றவர் தடையாகவும் இருந்ததில்லை. அதனால் யாரும் யாரையும் வெறுக்கவு மில்லை. அத்தகையதொரு நிலை ஏற்படவுமில்லை. அஞ்சாமை என்பது ஒரு பெருங்குணம். 'அச்சம் தவிர்'[16] என்றது இளமையில் கற்றது. எனினும் அஞ்சாமை அனைவர்க்கும் வாய்த்தல் அரிது. உண்மையும் நேர்மையும் உள்ள இடத்தில் அஞ்சாமை பிறக்கும். ஆதலின் பிறர் அஞ்சுவதற்கெல்லாம் பண்பாளர் அஞ்சவேண்டு வதில்லை. தமிழர் அத்தகைய அச்சமற்ற வாழ்வைப் பெற்றிருந்தனர். அச்சமின்மையால் துணிவுடன் செயலாற்றித் தேவையானது கிடைத்துவிட்டது என்ற வெற்றி எக்களிப்பில், இனி நாம் எதனை யும் தேட வேண்டியதில்லையெனச் சோம்பி இருப்பதும் அவர்தம் இயல்பன்று; தளராத ஊக்கமுடையவர்கள்.

உலகம் புகழுக்கு அடிமை. எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலை எய்தியபோது மக்கள் புகழ்மேல் ஆர்வம் கொள்ளல் தவிர்க்க முடியாத ஒன்றே. பிறரிடம் இல்லாத ஒன்று அல்லது பிறரால் செய்யவியலாத சீரிய செயல் திறம் தன்னிடம் இருப்பதே புகழுக் குரிய ஒன்ருகும். ஆதலின் புகழ்பெறுதற்குத் தங்கள் உயிரையும் பணயமாக வைத்தனர். ஆனல் இதனினும் சிறப்பு வாய்ந்த ஒன்று, உலகமே கிடைத்தாலும் அதனல் பழிவந்து சேருமாயின் அத் தகைய செயலைச் செய்யாது இருப்பதே பண்புடையார்க்கு அழகு என்பதை உணர்ந்திருந்ததாகும். பழியை வெறுத்துப் புகழை ஈட்ட விரும்பியவர்களும் அதற்காக ஏங்கவோ தளர்ச்சி கொள் ளவோ இல்லை; அயர்வின்றி வாழ்ந்தனர். புகழைத் தேடிச் செல் லாமல் புகழ் தேடிவரும்படியான நிலைத்த கொள்கை உடையவர் களாக இருந்தனர்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாகத் தமக்கென எதையும் முயலாமல் மற்றவர்க்காக வாழவேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டிருந்தனர். தமக்கென வாழும்பொழுது வெற்றியும் தோல்வி யும் அவர்களை வெகுவாகப் பாதிக்கும். பிறர்க்கென வாழும் பொழுது வெற்றி தோல்விகள் அவர்களைப் பாதிப்பதில்லை. அதனல் வாழ்வில் சோர்வுக்கு மாருக ஊக்கமே பிறக்கின்றது. இத்தகைய அரும் பண்பாடுகள் நிறைந்த மக்கள் வாழ்கின்றமையாலேயே இவ் வுலகம் இன்றும் நிலைபெற்றிருக்கின்றது என்று பாடுகின்ருன் பாண்டிய மன்னன் இளம்பெருவழுதி எனின், தமிழ்ச் சமுதாயம் அன்று கொண்டிருந்த பண்பாட்டுக் கொள்கைகளை எண்ணி வியக்காமல் இருத்தற்கில்லை.

உண்டால் அம்ம! இவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

புறம் - 182.

(துஞ்சல்-சோம்பல், அயர்வு-மனக்கவலை, நோன்தாள்-முயற்சி)

இப்பண்பாட்டுக் கூறுகள் எல்லாம் தமிழர்கள் வகுத்துக் கொண்டவை என்றாலும், எல்லா மக்கட்கும் பொருந்துவதாகிய பகுத்துண்ணல், அன்புடைமை, அஞ்சாமை, ஊக்கமுடைமை, பழிக்கு அஞ்சல், புகழ்பட வாழ்தல், கவலையற்றிருத்தல், தன்னலமின்மை, பொதுநலநோக்கு ஆகிய இவை எல்லா நாட்டினர்க்கும் பொருந்துவதன்றோ! இது ஒரு நிலை.

III

இதனினும் மேலான உலகம் அளாவிய நிலையையும் தமிழர்கள் கண்டுள்ளனர். அஃது உலகப் பண்பாடு. நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம், மொழிக்கு மொழி உள்ள வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து உலகம், உலகர் என்ற பொதுநிலைப் பண்பாட்டை வளர்க்கவும் விரும்பினர். இன்றில்லை என்றாலும் என்றேனும் ஒருநாள் 'ஒன்றேகுலம், ஒருவனே தேவன்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', என்ற அந்நிலை வாய்த்தல் உறுதி. அந்நிலையே பண்பாட்டின் விழுமிய நிலையாகும். அந்நிலையை அடைய முயலும்பொழுது நமக்கு வரும் இன்ப துன்பங்கட்குக் காரணம் நமது செயல்களே என்ற தன்னிலை ஆராய்ச்சியை மேற்கொள்வோமாயின் பிறர்மேல் குற்றம் சுமத்த வேண்டிய நிலை ஏற்படாது. பிறப்பவர் என்றேனும் ஒருநாள் இறந்தே தீரவேண்டும் என்ற உண்மையை உணர்ந்து செயல்பட்டால் அழிவதற்குள் ஏன் இந்த ஆட்டம் என்ற எண்ணம் தோன்றும். அதனால் தீமைகள் குறைந்து நன்மைகள் பெருகும். வாழ்தல் இனிமை என்று மகிழ்ச்சி கொள்வதும், ஏதேனும் ஓர் இடையூறு நேர்ந்த பொழுது 'என்ன உலகம் இது' என்று வெறுப்புக் கொள்வதும் நிகழாது. நிலையாமையை உணர்வதோடு நிகழ் காலத்தை உணர்ந்தும் நடக்கவேண்டும். நிகழ்கால நிறைவாழ்வே வருங்கால வாழ்விற்கு அடித்தளம். ஆதலின் இஃது இன்றியமையாத ஒன்று.

இடியும் மின்னலும் நிறைந்த பெருமழை. வெள்ளம் நிறைந்து ஆற்றுநீர் வேகமாகச் செல்கின்றது. செல்லுகின்ற வேகத்தில் பெரும் பெரும் கற்களையும் உருட்டிக் கொண்டு செல்கின்றது. அவ்

வாற்றில் சிக்கிக்கொண்ட ஒரு தெப்பக் கட்டையின் நிலை அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்றது. நீரின் போக்கிலே செல்லுமாயின் அக்கட்டைக்குப் பழுதும் நேராது, பாதிப்பும் வராது. எதிர்த்துச் செல்ல முயலுமாயின் கவிழ்ந்து மூழ்கிவிடுவதற்கு வாய்ப்பு உண்டு. அதுபோல் இவ்வுலகில் பண்பாடு நிறைந்த வாழ்வு வாழ விரும்புவோர் இயற்கை விதிகளை மீருமல், உலகின் போக்கில், உயர்ந்தோரின் நெறிப்படி—'முறைப்படிச்' செயலாற்றி வாழவேண்டும். முறைமாறிச் செல்வார்களாயின் இறுதி வாய்ப்பது உறுதி என்பதை அறியவேண்டும்.

அவரவர் செயல்களிலேயே பெரியர், சிறியர் ஆகின்றனர். 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'[11] என்பது வள்ளுவம். மாட்சிமைப்பட்ட பெரியோர்கள் எல்லோரும் முறையாகத் தத்தம் கடமையை ஆற்றி வாழ்ந்தவர்களே. முறைமையில் செல்லாது, அவரவர் கடமையை மறந்தவர்களே சிறியவர்கள் ஆயினர். இப் பெருமைக்கும் சிறுமைக்கும் உரிய காரணம் தெளிவாகிவிட்டமையின் 'இவர் பெரியர்' என்று வியப்பதும், 'இவர் சிறியர்' என்று இகழ்வதும் அறியாமையின்பாற் படுவதாகும். முதலில் மாட்சிமைபெற அவரவர் கடமையினைச் செவ்வனே செய்தல் வேண்டும். அவ்வாறு உயிர்கள் முறைவழிப்படின், தீமைகள் வாரா; இதனல் நோதல் இல்லை; பிறரை முனிதலும் இல்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்து விரிந்த நிலை ஏற்படும்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர்தர வாரா!
நோதலும் தணிதலும் அவற்ருேர் அன்ன!
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்
இன்னது என்றலும் இலமே. மின்னெடு
வானம் தண்துளி தலைஇ ஆனது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம், ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே;

புறம்—192

(தணிதல் - தீர்தல், முனிவு - வெறுப்பு, தலை இ - பெய்து, ஆனது - அமையாது, மல்லல் - வளமிகுந்த, முறைவழி - செயல்வழி, படுஉம்- செல்லும். இரங்கும் - ஒலிக்கும்)

இதுவே உலகு அளாவிய பண்பாடு. இப் பண்பாடு பெற முதலில் செய்யவேண்டியது வறுமையை ஒழிப்பதுதான். அதற்கு அடிப்படை வேளாண்மை. இத் தொழிலால் பண்பாட்டை நிலை நிறுத்துவதோடு, இதன் வழி அறியவேண்டிய பண்பாடுகளையும் அறிதல் வேண்டும். அவற்றுள் சில வருவன.

மேற்கோள் விளக்கம்

1. கலியாண சுந்தரனார், திரு. வி.. பெண்ணின் பெருமை, புரித நிலையம் வெளியீடு, சென்னை, 1973. பக்கம்—136
2. வையாபுரிப் பிள்ளை, எஸ். தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1968, பக்கம்—5
3. தமிழாசிரியர் மன்ற பதின்மூன்றும் மாநில மாநாட்டு மலர். சேலம். 1972 'குறிக்கோள்' பக்கம்—178
4. கலித்தொகை. பாடல். 133, வரி. 8
5. வையாபுரிப்பிள்ளை. எஸ். தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1968. பக்கம்—6
6. Taylor. E. B., 'Primitive Culture' Page—1
7. Lapiere, Sociology, Page—68
8. Dr. Sachdeva and Vidya Bhushan, 'An introduction to Sociology' Kitab Mahal, Allahabad, 1974. Page—521
9. 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' தொல்-பொருள். களவு—3
10. 'வலியர்என வழிமொழியலன்
மெலியர்என மீக் கூறலன்' புறம்—239 வரி 6, 7
11. குறள். 386
12. புறம். பாடல் 22. வரி 31
13. பட்டினப்பாலை. வரி 206, 207
14. குறள். 996
15. நல்வழி. பாடல் 26 மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்.
16. பாரதியார் கவிதைகள், புதிய ஆத்திசூடி—1
17. குறள். 505

2. பண்பாட்டுப் பயிர்

காடு மேடாகக் கிடக்கின்ற நிலங்களை வெட்டித் திருத்துகின்றோம். உழுது உழுது உழவுத் தொழிலுக்கு உரியனவாக ஆக்குகின்றோம். வரப்பும் வாய்க்காலும் அமைத்துப் பயிரிடப் பக்குவப் படுத்துகின்றோம். இவ்வாறு பக்குவப் படுத்தப்பட்ட நிலத்தைப் பண்படுத்தப்பட்ட நிலம் என்று கூறுகின்றோம். ஆனால் இந்நிலையிலும் அந் நிலம் ஓரளவு பண்படுத்தப்பட்டு இருக்கிறதே ஒழிய, அஃது இன்னும் முழுமையும் பண்பட்ட நிலமாகவில்லை. ஒருமுறை, இருமுறை, பலமுறை பயிரிடுகின்றோம். பயிர்கள் செவ்வனே செழித்து வளர்ந்து நல்ல விளைச்சலைத் தருகின்றன. அந் நிலம் எருவையும் நீரையும் ஏற்று, இட்டது விளையும் நன்னிலமாக மாறுகின்றது. இனி இந்நிலத்திற்கு எவ்விதத் திருத்தமும் தேவையில்லை என்ற நிலையில்தான் அந் நிலத்தைப் "பண்பட்ட நிலம்" என்று கூறுகிறோம்.

மனிதனும் நிலம் போன்றவன்தான். கரடு முரடானவன் தான். அவன் உள்ளத்தில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் முதலான இயல்பான மேடுபள்ளங்கள் உண்டு. அவற்றைச் சீர்திருத்திச் செப்பம் செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும். பொறாமையைப் பொறுமையாக மாற்றவேண்டும். ஆசையை அளவான ஆசையாகக் குறைக்க வேண்டும். வெகுளியை வெகுளாமையாக, இன்னாச் சொல்லை இன்சொல்லாகத் திருத்தியும் மாற்றியும் அமைக்க வேண்டும். இச் சீர்திருத்தம் நடைபெற்ற பிறகே அவன் முழுமையான மனிதனாகிறான். ஆதலின் மனிதனிடத்தில் இயல்பாகத் தோன்றும் தீய குணங்களைக் களைந்து,

நல்ல குணங்களைத் தோற்றுவிக்கவேண்டும். இந்த நல்ல குணங்களின் தொகுதியைப் பண்பு என்கிறோம். இப்பண்புடைமைகளைப் பெற்றவன் பண்பட்டவன் ஆகிறான். பயிர்களைப் பேணி வளர்ப்பது போலப் பண்பாட்டையும் பேணி வளர்க்கவேண்டும்.

தமிழ்மக்கள் பண்பாடு மிக்கவர்கள்; தங்களைப் போலவே தங்கள் மக்கட் செல்வங்களையும் பண்பாட்டோடு வளர்க்க வேண்டும் என்று எண்ணுபவர்கள். அவர்களுக்குப் பண்பாட்டை ஊட்டி வளர்க்கக் கதைகளையும் கவிதைகளையும் புனைந்தார்கள். காவியங்களையும் ஓவியங்களையும் தீட்டினார்கள். தொழிலையும் நடைமுறை வாழ்க்கையையும் பாடமாக்கிக் கற்பித்தார்கள். அவற்றுள் ஒன்று தான் பயிர்த்தொழில் வழியாகப் பண்பாட்டைக் கண்டு உணர்த்தியது.

இதோ பாருங்கள் விளைநிலம் தயாராகிவிட்டது! மனிதனுக்கு இன்றியமையாத பண்புகளுள் ஒன்று இன்சொல் பேசுவதாகும். இன்சொல்லால் நன்மையே விளையும்; தீமை விளையாது. இன்சொல்தான் அவ்விளைநிலம். நிலம் தயாராகி விட்டால் போதாது; அதில் பயிரிடவும் வேண்டும். என்ன விதைகளை விதைப்பது? மண்ணுக்கு ஏற்ற விதைகள் வேண்டுமல்லவா! பொறுக்கு விதைகளைப் பொறுக்கி எடுக்கிறார் கவிஞர். ஈதல் என்னும் பண்புதான் அவ் விதைகள். ஈதலாம் விதைகளை விதைத்தாயிற்று. பயிர்கள் செழித்து வளர்கின்றன. கூடவே களையும் வளர்கின்றது. என்ன களை? கொடுஞ்சொல் என்னும் களை; பயிரிட்ட வயலில் களைகள் தோன்றுவது இயல்பெனினும், அக்களைகளை அவ்வப்போது களைந்துவிட வேண்டுவது பயிர்செய்வோர் கடமையாகும். வன் சொல்லாம் (கடுஞ்சொல்) களையைக் களைந்தாயிற்று. எவ்வளவு உழுதாலும் எருவிட வேண்டுமல்லவா? 'ஏரினும் நன்றால் எருவிடுதல்' என்பது வள்ளுவர் கட்டளையாயிற்றே! அதிலும் களையெடுத்த பிறகு எருவைத்து நீர்பாய்ச்சுவது சாலச் சிறந்ததாயிற்றே! இந்தப் புதுமையான நிலத்திற்கு உண்மை என்னும் எரு போடப்படுகிறது. இவ்வளவும் செய்தாலும் தண்ணீர் பாய்ச்சுவது இன்றியமையாதது அன்றோ! அன்பாகிய நீரைப் பாய்ச்சும்படி கவிஞர் அறிவுரை கூறுகின்றார். களை எடுத்து, எருவைத்து, நீர் பாய்ச்சி முறையாக வளர்த்த இப்பயிரில் என்ன விளையும்? 'அறம்' என்னும் கதிர்கள் அன்றோ விளையும்! ஆம்! அறம் என்ற சிறந்த கதிர்கள் விளைகின்றன.

உயிர் சிறக்க இத்தகைப பயிரைச் செய்யவேண்டும். அதனையும் பருவமறிந்து செய்யவேண்டும். மனித மனம் பண்படுவதற்குரிய காலம் இளமைதான். ஆதலின் இத்தகைய பண்பாட்டுப் பயிரை இளமைக் காலத்திலேயே செய்யவேண்டும். இக் கருத்தினை அறநெறிச் சாரம் எனும் நீதி நூல் அழகுபடக் கூறுகின்றது.

"இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருஅட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்".

அறநெறிச் சாரம். பாடல்—16

'பருவத்தே பயிர்செய்' என்பது பழமொழி, ஆதலின், பருவமறிந்து பயிர் செய்வதோடு பருவத்திற்கு ஏற்ற பயிரையும் செய்யவேண்டும். இளமைக் காலத்தில் அறக்கதிர் விளைவித்தாயிற்று, வளமைக் காலத்தில் காதல் பயிர் வளர்கின்றது. காதல் பண்பாடுகளை அறிவுறுத்தவும் பயிர்கள்தாம் முன் நிற்கின்றன. இருவரும் மாறிப்புகும் இதயங்களாகிய காதல் நெஞ்சங்களே நெல்வயல்கள். சிறு வயல்களில் விளைபவை சிறிய அளவாகவே இருக்குமாதலின் நிறை விளைச்சல் பெறப் பெரிய வயல் கொள்ளப்பட்டது. அதில் அன்பு எனும் விதையை விதைக்கின்றனர். அவர்கள் விதைத்தது அன்பு எனும் நெல் ஆதலின் முன்னரே உழவுசெய்து விட்டனர். பயிர் நடுவதற்கு முன்னர் அடியுரமாகத் தழையுரம் போட்டு நடுகிறார்கள். ஊர்மக்கள் இக்காதலரைப் பற்றிப் பேசுகின்ற பேச்சுக்களே அவ்வுரம். நெற்பயிருக்கு நாள்தோறும் நீர் பாய்ச்ச வேண்டுமன்றோ? இக் காதலைப்பற்றி ஊரார் பேசிய பேச்சுக்கள் போதாதென்று அன்னை நாள்தோறும் கடிந்துகொண்டே இருக்கின்றாள். 'மகளே! உன்னைப்பற்றி இப்படி எல்லாம் பேசப்படுகிறதே! இஃது உண்மைதானா?' என்று நினைந்து நினைந்து கேட்கிறாள். அக்கடிந்துரையே நீராகின்றது. இவ்வாறு அன்புநெல் வளர்ந்து புடைவிட்டு அன்னம் பிடித்துக் காதலாம் கதிர்களை ஈனுகிறது.

அறுவடை நடந்து விட்டது. நெல் மணிகளை அளந்து அளவு கூறிவிடலாம். ஆனால் காதல் மணிகளுக்கு அளவேது? அளக்கும் கருவிதான் ஏது? அதனால் கவிஞர்கட்கே இயல்பாயுள்ள அளவு கூறப்படுகிறது. அவ்வளவு கடல். கடல் அளவு காதல் விளைந்தது.

அதைக் கண்ணும் கருத்துமாக விளைத்த உழவன் கண்ணன் எனும் கடவுள். அவனுக்குக் கிடைத்த 'பெருஞ்செய்' ஒரு பெண்ணின் உள்ளம். இதனைக் கண்ணன்மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் தோழிக்குச் சொல்லுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்மடுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த
காரமர் மேனிநம் கண்ணன் தோழி! கடியனே

திருவாய்மொழி, நம்மாழ்வார், 5—3. 4

உண்மைக் காதல், பிறர் ஏச்சுக்களையும் அன்னையின் கடிந்துரைகளையும் ஒரு பொருட்டாகக் கருதாது. அவற்றையே எருவாகவும் நீராகவும் கொண்டு வளர்ந்து விளையும் மனத்திட்பமாம் காதற் பண்பினை இவ்வழகிய மொழியால் விளக்குகின்றார் கவிஞர்.

இளமையும் வளமையும் செல்லச் செல்ல முதுமை தோன்றுதல் இயல்பு. முதுமையில் இறையுணர்வு மிக்கிருப்பது கண்கூடு. அறக் கதிர்களையும் அன்பாம் காதல் பயிரினையும் வளர்த்த கவிஞர்கள் காலத்திற்கும் நிலத்திற்கும் ஏற்ற பக்திப் பயிரினை விளைவிக்கின்றார்கள்.

இங்கும் மனித உள்ளமே வயல்; இவ்வயலில் அறமும் அன்பும் விளைவித்ததால் நிலம் பண்பட்டு விட்டது. பக்திப் பயிர் விளைக்கத் தகுந்த நிலம். உண்மை எனும் உழவு செய்யப்படுகின்றது. பலசால் உழுதாயிற்று. மண்கிளர்ந்து கிடக்கின்றது. அதில் விருப்பம் எனும் விதை விதைக்கப்படுகின்றது. பயிர் வளரக் களையும் வளர்கின்றது. அக்களை 'பொய்' எனும் களை. அதைக் களைகின்றான் உழவன். களையெடுத்துப் பின் நீர்பாய்ச்சாவிடின் பயிர் வாடிவிடுமன்றோ? பொறுமை என்னும் நீர் பாய்ச்சப்படுகின்றது. விளையும் வரை அப் பயிர்களைக் கால்நடைகளும் பிற விலங்குகளும் அழிக்காவண்ணம் காக்க வேண்டும். நீரினும் காப்பு இன்றியமையாதது என்பதை வள்ளுவரும் கூறியுள்ளார். ஆதலின் வேலி போடப் படுகின்றது. அவ்வேலி தகுதி என்னும் வேலியாகும். மனித உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் புகுந்து விடும். தகுதிக்கு ஏற்ற எண்ணங்கள் முகிழ்க்க வேண்டும். தரக் குறைவான எண்ணங்கள் தோன்றாதவாறு தகுதி என்னும் வேலி

யிட்டுத் தடுக்கப்படுகின்றது. இவ்வாறு உழவு செய்து களை நீக்கி நீர் பாய்ச்சிக் காவல் செய்து தொழில் செவ்வனே நிகழுமாயின் பெறுதற்கரிய பேருகிய வீடு பேறு - அஃதாவது இன்ப துன்பங் களிலிருந்து விடுதலை பெறுகின்ற பேறு, எதுவாயினும் அதனை இயல்பு என்று ஏற்றுக்கொள்கின்ற மனப் பக்குவமாகிய வேண்டுதல் வேண்டாமை ஆகிய வீடுபேறு[3] என்னும் கதிர்கள் விளையும். பக்திப்பயிர் வளர்த்துப் பக்குவமாய்க் கதிர் அறுக்கிறார் திருநாவுக்கரசர்.

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறைஎனும்
நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையுமன்றே

திருநாவுக்கரசர் திரு. 4. பதி 76. பா. 2

இவ்வாறு பயிர்த் தொழிலைப் பண்பாட்டோடு இணைத்துக் கண்ட இனம் தமிழினம். பயிர்களின் விளைபொருள்கள் உடலையும் உயிரையும் வளர்ப்பது போலப் பண்பாடாம் உயர் பண்புகள் மனித மனத்தையும் இனத்தையும் வளர்க்கும் ஆற்றல் பெற்ற வையாகும்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்' என்பது வள்ளுவம்[4]

ஆதலின் பயிர்த்தொழில் செய்யும் முறையை அறிந்து பயிர்களைப் பேணி வளர்ப்பது போல இன்சொல், ஈதல், உண்மை, அன்பு, பொறுமை முதலிய பண்பாட்டுப் பயிர்களையும் பருவ மறிந்து பேணி வளர்க்க வேண்டும் என்பது கருத்து.

மேற்கோள் விளக்கம்

1. குறள். 35. அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
   இழுக்கா இயன்றது அறம்.
2. குறள். 1038.
3. குறள். 363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
   யாண்டும் அஃது ஒப்பது இல்.
4. குறள். 996.

௩. வாழிய நிலனே!

நிலத்தைப் பெண்ணாக உருவகித்துக் கூறுவர் கவிஞர்[1]. பெண் உயிர்களைத் தோற்றுவித்து வாழ்விக்கின்றாள். மண்ணும் அப்படித்தான். மண்ணில் தோன்றி வாழும் உயிர்கள் கோடானு கோடி. ஆதலின் மண்ணைப் பெண்ணென்று கூறியது உருவகங்க ளுள்ளும் ஓர் உயரிய உருவகமாகும்.

நிலம் என்னும் நல்லாளைப் பண்டைத் தமிழர்கள் இயற் கைச்சூழலுக்கு ஏற்ப நான்காகப் பகுத்தனர். குன்றுகள், மலைகள், அவற்றைச் சார்ந்த இடங்கள் ஆகியவற்றைக் குறிஞ்சி என்று குறித்தனர். காயும், கனியும், கிழங்கும் மிக்குள்ள இப்பகுதியில் தோன்றும் குறிஞ்சி மலருக்குத் தனிச்சிறப்புண்டு. சமவெளியான நீர்வளம் மிகுதியும் இல்லாத பகுதியை முல்லை என்று அழைத் தனர். முல்லைச் செடிகள் பயிராகும் பகுதி இது. வான்நோக்கி வாழும் புன்செய்ப் பயிர்கள் இங்கு நன்கு பயிராகும். நெல்லும், கரும்பும், இஞ்சியும், மஞ்சளும் பயிராகும் நீர்வளஞ்சான்ற பகுதிக்கு மருதம் என்று பெயரிட்டனர். ஆறுகள் பாயும் பகுதி யாதலின் இங்கு மருத மரங்கள் மிகுதியாக இருக்கும். கடற்கரை யோரப் பகுதிகள் நெய்தல் எனப்படும். இப்பகுதிகளில் தென்னை மிகுந்திருக்கும். இங்குள்ள உப்பங்கழிகளில் நெய்தல் மலர்கள் பூத்து நிற்கும்.

இவ்வாறு மண்ணின் தரத்திற்கு ஏற்ப நிலம் நான்காகப் பகுக் கப்பட்டது.[2] மக்கள் தொகை பெருகப் பெருக குறிஞ்சியிலுள்ள மரங்களெல்லாம் வெட்டப்பட்டு நிலமாக்கப்பட்டது. முல்லையில்

கிணறு வெட்டி நீர்வளம் உண்டாக்கினர். மருதத்தில் இயல்பாகவே நீர்வளம், நிலவளம், இரண்டும் உண்டு. நெய்தலை முழுமையும் பயிரிடுவதற்கு ஏற்றதாக ஆக்க முடியவில்லை. தென்னை' சவுக்கு போன்ற அந் நிலத்தில் பயிராகும் மரங்களை வளர்த்தனர். காலஞ் செல்லச் செல்ல இந்நால்வகைப் பகுப்பும் மாறி நீர்வளம் நிறைந்ததை 'நன்செய்' என்றும் நீர்வளம் குறைந்ததைப் 'புன்செய்' என்றும் கொண்டனர்.

இந்நால்வகை நிலங்களும், எத்தகைய மாற்றங்களைச் செய்தாலும், வெட்டினாலும், திருத்தினாலும், அழித்தாலும், ஆக்கினாலும் அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்கின்றன. தம்மால் நல்லது விளையவேண்டும் என்று கருதுகின்றவர்கள் நிலம் போன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்; பிறரின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் பொருட்படுத்தக் கூடாது எனக் கூறுகின்றார் வள்ளுவர். பொறுமை எனும் பண்பாட்டை, "நீங்கள் பிறந்த மண்ணிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்" என வேண்டுகின்றார் உலக நூலை ஆக்கிய உரவோர். அப்பண்பே பிற பண்புகளைக்காட்டிலும் தலையாய பண்பு என்பதையும் அறிவுறுத்துகின்றார்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை' குறள்-*151*.

குறிஞ்சி நிலத்தில் விளைந்த தினைக் கதிர்களைக் கிளிகள் கொய்து செல்லா வண்ணம் ஒரு தலைவி அவற்றைக் கடிந்து கொண்டிருந்தாள். வேட்டையாட வந்திருந்த காளை யொருவன் வேட்டம் முடிந்து அப்பக்கமாக வந்தான். யாருக்கும் வணங்காத மாவீரனவன். போர்க்களத்தில் அவன் விளைக்கும் வீரத்தைக் கண்டு பகைவரும் அஞ்சுவர். எதிர்பாரா வண்ணமாக இக் கிளிமொழியாளைச் சந்திக்க நேர்ந்தது. அவளது நெற்றியின் அழகில் ஈடுபட்டுத் தன்னை மறந்தான் அத் தலைமகன்.[3] நெஞ்சங்கள் உறவாடின. நெடுநேரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே செயலற்று நின்று விட்டனர். திடீரென மழை பெய்யத்தொடங்கிவிட்டது. அன்பு மழையில் நனைந்த அவர்கள் வானத்து மழையில் நனைவதை உணரவும் இல்லை. மழை மிகுதி

யாகவே, இருவரும் ஒரு மரத்தடியில் ஒதுங்கினர். வாய்ச் சொற்கள் ஏதுமில்லை. வழிந்தோடும் மழைநீரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நீருக்கு நிறமில்லை என்பார்கள். ஆனால் அம் மழை நீரோ செந்நிறமாகி ஓடிக்கொண்டிருந்தது. தலைவன் பேச அமைதி கலைந்தது.

'என் தாயும் உன் தாயும் ஒருவரை ஒருவர் அறியார். என் தந்தையும் உன் தந்தையும் எத்தகைய உறவுடையவரும் அல்லர். நீயும் நானும் இதற்கு முன் சந்தித்தது மில்லை. ஆனால் செந்நிலத்தில் பெய்த மழைநீர் செந்நிறம் பெற்றுச் செல்வதுபோல் நான் உன் வண்ணம் ஆகிவிட்டேன். இறுகிக் கிடந்த மண் மழையால் இளகி விடுவதுபோல் உன் உள்ளம் இளகி என்னை ஏற்றுக் கொண்டு விட்டது. நிலமும் நீரும் இயைந்தது போல நம் உள்ளங்கள் இணைந்து விட்டன' என்று தலைவியிடம் கூறினான்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.

குறுந்தொகை—*40*

காதல் வாழ்விலும், இல்லற வாழ்விலும் ஆணும் பெண்ணும் தத்தம் தனித்தன்மை மறைந்து, தன்னலம் குறைந்து, ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுப் போற்றவேண்டும் என்பதை; நீர் தனித்து நின்று நீராகவும், நிலம் வெற்று நிலமாகவும் இருந்து பயனில்லை, இரண்டும் இணைந்தாலன்றிப் பயன்விளையாது என்பதை; வாழ்க்கை, பாறையின் மேல் பெய்த மழையாக இராமல் மண்மீது பெய்த மழையாக இருக்கவேண்டும் என்பதை; செந்நிலத்தில் பெய்த மழைநீர் கொண்டு விளக்கி, வாழ்வில் கொள்ளவேண்டிய பண்புகளை அறிவுறுத்தும் திறம் போற்றுவதற்குரியது.

ஒரு நாட்டின் நிலம் காடாகவோ, கழனியாகவோ மேடாகவோ,பள்ளமாகவோ இருந்தாலும் கவலையில்லை. அந்நாட்டு மக்கள் இத்தகைய உயரிய நெஞ்சம் உடையவர்களாக வாழ்வார் களாயின் அந்நிலம் வாழும் நிலமேயாகும்[4]. அத்தகைய நிலத்தை

நன்னிலமாக்கப் பல உயிர்கள் முயல்கின்றன. அவற்றுள் ஒன்று உழவர்களின் நண்பனுன நாங்கூழ்ப் புழு.

நிலத்தில் பசிய புற்கள் தலைகாட்ட, அழகிய செடி கொடிகள் முளைக்க, நெடிய மரங்கள் தோன்ற, மண் பண்பட வேண்டும். எம்மண்ணையும் நன்மண்ணுக்கிப் பண்படுத்தித் தாவர உயிர்களை முளைக்கச் செய்வது மண்புழு. காய்ந்து கிடக்கும் மண்ணில் மழைத் துளி விழுந்தவுடன் செயலற்றுக் கிடந்த மண்புழு செயலாற்றத் தொடங்குகிறது. எளிய உயிராக இருப்பினும் அதன் வாழ்வு தான் எத்தகைய உயரிய வாழ்வு! உழைப்பின்றி உரிமைக்குப் போராடும் உலகிற்கு அதன் வாழ்க்கை ஓர் அறைகூவல்; உழைக் காது சோம்பித் திரிவோர்க்கு ஓர் எச்சரிக்கை. மண்புழு நாளெல்லாம் ஓய்வு ஒழிவின்றி உழைக்கின்றது. உழைத்தால் மட்டும் போதாது; அவ்வுழைப்பில் ஓர் உயரிய நோக்கும் இருத்தல் வேண்டும். உலகம் வாழ நாம் உழைக்கின்ருேம் என்ற மன நிலையோடு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக உழைக்க வேண்டும். சலியாத உழைப்பு விழுமிய நிலையை நோக்கிச் செல்ல வேண்டும்[5]. (where tireless striving stretches its arms towards perfection,...In to the heaven of freedom, My Father let my country awake) மண்புழுவின் உழைப்பு அத்தகைய விழும்ய நோக்குடைய உழைப்பாகும்.

உழைக்கிற தொழில்களில் மிக உயர்ந்த தொழில் உழவுத் தொழில் என்பர் உலகோர். மண்புழு உழுவோர்க்கு உதவிசெய் வதன்மூலம் உயர்ந்து நிற்கிறது. உழவர்கள் பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணை மட்டும் பண்படுத்தி உழவு செய்கிருர்கள். இப்புழுவோ பயன்படாது என்று ஒதுக்கப்பட்ட மண்ணையும் விருப்பு வெறுப் பின்றி நன்மண்ணுக்கி விடுகிறது. மக்களைக் காக்கும் மன்னன் போல மண்ணைக் காக்கும் விழுமிய வேந்தாக விளங்கு கிறது. உழைப்புக்கெனவே பிறந்த பிறவி. 'என் கடன் பணி செய்து கிடப்பதே'[6] என்பதே அதன் கொள்கை.

"மக்களே மண்ணைப் பாருங்கள்; பின் என்னைப் பாருங்கள்" என்பது போல அது செயலாற்றுகின்றது. தன் உடலால் உழுது உழுது பின் மண்ணைத் தன் வாயிலிட்டு உமிழ் நீரைச் சேர்த்து வேதியியல் மாற்றம் செய்து, வெளியில் அனுப்புகின்றது. மண்புழு ஓர் வேதியியல் சோதனைக் கூடம் எனினும் மிகையன்று. மண்ணை

உண்டு கழிவுப் பொருளை வெளியேற்றுவது போலத் தோன்றி னாலும் அதன் செய்கையால் அம்மண் வளம் பெறுகின்றது. தான் உருட்டித் தள்ளும் மண் தன்னையே மறைத்து விடுகின்றது. அதன் குழியை மூடிவிடுகின்றது. உழைப்போர் சிலர் புகழ்ச்சியை விரும்பமாட்டார்கள். அத்தகையோர் புகழுக்காக உயிரையும் கொடுக்கும் நல்லோரினும் மேலோராவர். அவர்களைக்காட்டிலும் இந்நாங்கூழ்ப் புழு பன்மடங்கு மேம்பட்டு விளங்குகிறது. புகழ் வேண்டாப் பெருந்தகைமை வாய்ந்தது. உலக மக்கள் இதனை உற்று நோக்கி இத்தகு பண்புகளைக் கற்றுக் கொள்ளல் ஆகாதோ?

ஓகோ நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே, உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.
எம்மண் ணுயினும் நன்மண் ணுக்குவை
விடுத்தனை இதற்கா, எடுத்த உன்யாக்கை
உழுதுஉழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேருய் வேதித்து உருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்

மனோன்மணீயம் (3—2—66—75)

அறத்திற்கும் மறத்திற்கும் என்றும் போராட்டம் நிகழ் வதுண்டு. நன்மை செய்வோர்க்குத் தீமை செய்வோர் நாட்டில் தோன்றுவது இயல்பு. அஃது ஓர் இயற்கை விதியாகவே அமைந்து விட்டது. உலகிற்கெனவே உழைக்கின்ற இப் புழு வினத்திற்கு ஊறுசெய்வன பலப்பல. எறும்புகள் அவற்றைக் கடிக்கின்றன. பிற புழுக்களும் பூச்சிகளும் அவற்றைத் துன்புறுத்து கின்றன. எனினும் மண்ணில் பிறந்த அவ்வினம் மண்ணின் பொறுமையைப் பெற்றுத் திகழ்கின்றது. பிற உயிர்கள் அவற் றிற்குத் தீங்கிழைத்தாலும் அவை பிறவற்றிற்குத் தீங்கிழைப் பதில்லை; மாருக நன்மையே செய்கின்றன. "இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்ற வள்ளு வரின் வான் குறளுக்கு இலக்கியமாக விளங்குகின்றன. அவை களுடைய உயர்ந்த ஒழுக்கமும் பொறுமையும் உலக மக்களுக்குக் கொஞ்சமேனும் உண்டோ? இல்லை என்பதே உண்மை நிலை.

அதனைப் பற்றிய உண்மைச் செய்திகளைக் கூறினாலும் அது புகழ்ச்சி என்று கருதி மனிதர்களைக் கண்டதும் மண்ணுள் மறைந்து விடுகிறன்து. ஆம்; மனிதர்களில் பலர்க்கு, புகழ்வதும், புகழ்ச்சி யைக்கேட்டு மகிழ்வதும் தொழில் என்பதும் இப் புழுவிற்கும் தெரிந்து விட்டது போலும். புகழ்ந்து பிறரைக் கெடுக்கின்றவர் களும், புகழ்ச்சியால் மகிழ்ந்து கெடுகின்றவர்களும் தன்னைப் பார்த்தேனும் திருந்தவேண்டும் என்பதை அறிவுறுத்த எண்ணி அச் சொற்களைக் கேளாமல் மறைந்து விடுகின்றதோ? ஆம்; ஆம் இச்சிற்றுயிர் உழைப்பில் பெறும் மகிழ்ச்சியையும் உயிர்கள் பால் கொண்ட அன்பையும் அறியாத மனிதர்களின் வாழ் நாள் வீண் நாள்தான். ஓ! என்றன் நாங்கூழ்ப் புழுவே! உன்னைக் கண்டு உலகெல்லாம் திருந்தட்டும்; உலகம் உழைப்பில் மகிழட்டும்,

இப்புல் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி உண்டாம்? எண்ணுது உனக்கும்
குறும்புசெய் எறும்பும் கோடி கோடியாய்ப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமாறு என்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?
விழுப்புகழ் வேண்டலை அறிவோம் ஏன்இது?
துதிக்கலம். உன்தொழில் நடத்துதி ஆ! ஆ!
எங்கும் இங்ஙனே இணையிலா இன்பம்
பங்கமில் அன்பும் தங்குதல் திருந்தக்
காணுர் பேணும் வாழ்நாள் வீணே.

மனோன்மணீயம் *3—2—76—85.*

மண் தரத்தால் நான்காக வேறுபடுவது போல மனிதர் களும் தங்கள் தன்மையால் வேறுபடுகிருர்கள் என்பதை நானிலப் பிரிவு சுட்டுகிறது. மண் எதனையும் தாங்குகிறது. அதுபோல இன்ப துன்பம் எதனையும் ஏற்றுப் பொறுமையுடன் வாழவேண்டும் என்பதை அதன் பண்பு உணர்த்துகின்றது. நிலத்தோடு நீர் சேர்ந்து உலகைச் செழிக்கச் செய்வதுபோல, இல்லற வாழ்வு இணைந்து விளங்கவேண்டும் என்பதையும், மண்ணேயன்றி மண்ணில் தோன்றும் உயிர்களும் கொண்டுள்ள ஓயாத உழைப்பை, உயரிய ஒழுக்கத்தை, விழுமிய நிலையை, உலகம் உணர்ந்து நடக்க

வேண்டும் என்பதையும் நிலம் காட்டும் பண்பாடாகக் கொள்வதில் தடையும் உண்டோ? அதனால் வாழிய நிலனே என வாழ்த்தி வாழ்ந்திடுவோம்.

மேற்கோள் விளக்கம்

1. சிலப்பதிகாரம் 15.138, 16.40. மண்மகள், மண்ணக மடந்தை.
2. தொல்காப்பியம், பொருள், அகத்திணை - 3
   "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
   சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.
3. குறள். 1088. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே! ஞாட்பினுள்
   நண்ணாரும் உட்குமென் பீடு.
4. புறம். 187.
5. டாக்டர் மு. வரதராசன், 'கவிஞர் தாகூர்', பாரிநிலையம், சென்னை, 1967, பக்கம் 72. கீதாஞ்சலி 35.
6. திருமுறை. 5, அப்பர் தேவாரம், பதிகம். 133, பாடல். 9.
7. குறள். 987.

4. நீர் உயர...

புகழோடு வாழவேண்டும் என்று எல்லோரும் விரும்பு கிருர்கள். ஆனல் சிலர் மட்டும் புகழோடு வாழ்கிருர்கள்; பலர் புகழோடு வாழ முடிவதில்லை. புகழ் பெற இயலாதவர்கள் தங்கட்கு ஏன் புகழ் சேரவில்லை என்று சிந்திப்பார்களாயின் உண்மை புலப் படும். கடினமான உழைப்பும், நல்ல மனமும், தூய ஒழுக்கமும் உடையவர்களே புகழ் அடைவார்கள். உழைக்காது சோம்பித் திரி பவர்களும் ஒழுக்கக் குறைபாடு உடையவர்களும் புகழ் அடைதல் என்பது இயலாத ஒன்றே. இந்நாளில் சிலர் உழைக்காமலே புகழ் அடைகிருர்களே என்ற எண்ணம் எழலாம். அவ்வாறு எழுதல் இயல்பே! உழைக்காது அடைகின்ற புகழ் எல்லாம் புகழ் அல்ல; அவை விளம்பரங்களே. அவை நிலைத்த தன்மை உடை யனவும் அல்ல. விளம்பரங்கள் உள்ளவரை அவர்கள் புகழ் பெற்று விளங்குதல் போல் தோன்றுவார்கள். விளம்பரங்கள் நின்றுவிட்டால் அவர்கள் புகழும் மறைந்துவிடும். இதற்கு மாருக நிலைத்த புகழ் ஒன்று உண்டெனின் அஃது உழைப்பால், உண்மை யால், ஒப்புரவால் வரும் புகழே ஆகும்.

புகழை எதிர்பார்த்து உழைப்பதைக் காட்டிலும் உழைப்ப தால் இயல்பாகப் புகழ் வரும் எனின் அதுவே போற்றுதற் குரிய தாகும். எனினும், எவ்வெவ் வகையில் உழைத்தால் புகழ் வரும் என்ற ஆராய்ச்சி ஒன்று நடந்தது. சிறந்த கல்வியும் அஞ்சா மையும் ஒழுக்கமும் கொடையும் புகழ் பெறுதற்குரிய வழிகள்; அதனல் பெருமித உணர்வும் தோன்றும் என்ற தொல்காப்பியரின் கருத்துக்கள் எடுத்து மொழியப்பட்டன.

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.

தொல் - பொருள் - மெய்ப்பாடு -9

(தறுகண் - அஞ்சாமை, வீரம். இசைமை - புகழ் பெருமிதம் - பிறரை விடத் தாம் உயர்ந்தவர் என்ற மனஉணர்வு (செருக்கு அல்ல).

அன்னசாலைகள் வைத்தல், ஆலயங்கள் நிறுவுதல், ஏழைக்கு எழுத்தறிவித்தல்,[1] தனக்கென வாழாது பிறர்க்கென வாழுதல்[2], பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்[3] முதலாய நற்செயல்களே புகழை அடைதற்குரிய சீரிய வழிகளாகும் என்பது ஒருசாரார் கருத்தாக இருந்தது. நல்ல மனைவியைப் பெற்று வாழ்பவனே சிறந்த புகழுடையவனுவான்; ஏறுபோல் பீடுநடையும் இல்லறப் பயனும் எல்லா நலனும் மாண்புடைய மனைவியால் பெற முடியும்; இல்லாளின் தன்மையைப் பொறுத்தே எல்லாம்; வள்ளுவரும் 'இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென் இல்லவள் மாணுக்கடை'[4] என்று கூறியுள்ளார். ஆதலின், மனைக்கு விளக்க மாக விளங்கும் மனையாளைப் பெறுவதே புகழுக்குரிய வாயில் என்பது பிறிதொரு சாரார் கருத்து.

மூன்ருவதாக ஒரு கருத்துத் தோன்றியது. நல்ல நீர் நிலைகளை அமைப்பவனே சிறந்த புகழுக்குரியவன் ஆவான் என்பதே அக்கருத்து. நல்ல மனையாளை விட, நல்ல பிற செயல்களை விட நாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது; உணவுப் பொருள் களைப் பெருக்கி, மக்களை வாழ வைப்பனவாகிய நீர் நிலைகளே. நீர் இன்றேல் உலகு இல்லை. 'நீரின்றி அமையாது உலகம்'[5] என்பது ஆன்ருேர் வாக்கு. ஆதலின் நீர் நிலைகள் அமைப்பதே புகழுக்குரிய சீரிய செயலாகும் என்பது மற்ருெரு சாரார் கருத் தாகும். இம்மூன்று கருத்துக்களும் ஒத்துக்கொள்ளக் கூடியனவே என்ற முடிவு ஏற்பட்டது. அக் கருத்துக்களைத் தொகுத்துக் கவிதையாக வடித்தார் கவிஞர் நல்லாதனர் என்னும் அருந் தமிழ்ப் புலவர்.

மண்ணின்மேல் வான்புகழ் நாட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் - உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்.

திரிகடுகம் - 16

நற்செயல்களாலும், நல்ல மனைவியினாலும் அழியாப் புகழ் பெறலாம் என இரண்டு கருத்தோடு நிறுத்தி, நீர் நிலைகள் அமைத்தலை நற்செயலோடு சேர்த்து இருக்கலாமே, அதனைத் தனித்துக் கூறவேண்டிய இன்றியமையாமை என்ன என்ற ஐயம் தோன்றியது. இவ் வையத்தைப் போக்குதற்குரிய கருத்துக் களைப் பழந்தமிழ்ப் புலவர்கள் கூறியுள்ளனரா என ஆராயும் போது, அதனை அகற்ற முன்வருகின்றார் குடபுலவியனார் என்னும் புறநானூற்றுத் தமிழறிஞர்.

மக்களின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதன மூன்று. அவை உணவு, உடை, உறையுள் என்பன. இவை மூன்றும் அடிப் படைத் தேவைகள். இம்மூன்றினுள்ளும் முதன்மையானது உணவு. அவ்வுணவுப் பொருட்கு இன்றியமையாதது நிலமும் நீரும் வித்தும் பிறவும். நீரின்றி உலகமில்லை; உயிர் வாழ்க்கையுமில்லை. நிலமும் நீரும் சேர்ந்தால் அன்றோ விளைவு? விளை பொருள்களே உணவுப் பொருள்கள். உணவால் வளர்வதே உடம்பு. உடம்பின்றி உயிர் இயக்கம் இல்லை. நிலத்தையும் நீரையும் சேர்த்துப் பயிர் விளை விப்பவரே உடம்பையும் உயிரையும் சேர்த்தவராவார். அவரே உலகை வாழ்விப்போர் ஆவர்.

'நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதி கேள்! இனி மிகுதி யாள!
நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே'

புறம் - 18.

(நல்லிசை - நற்புகழ், மிகுதியாள - பெரியோய், யாக்கை - உடம்பு. உணவின் பிண்டம் - உடம்பு, புணரியோர் - ஒன்று சேர்த்தவர்கள். படைத்திசினோர் - படைத்தவர்கள்)

எவ்வளவு பரந்து பட்ட நிலமாக இருந்தாலும் நீர் வளம் இல்லாத நிலம் சிறப்புடைய தாகாது. "நஞ்சை வரும்படி இராச வரும்படி" என்பது பழமொழி. விதைத்துவிட்டு வானத்தை நோக்கும் நிலையில் உள்ள நிலம் எப்பொழுதும் பயன்தரும் என்று கூறுவதற்கில்லை. நிலையாகப் பயன்தராத ஒன்றை எதிர்பார்த்து மன்னனோ, மக்களோ வாழ்தல் என்பதும் இயலாது. ஆதலின் பள்ளத்தாக்கான பகுதியைத் தேர்ந்து நீர்வளம் பெருகும்படி ஏரி, குளம், கிணறுகளை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தோர் நிலைத்த புகழ் பெற்றவராவர். அவ்வாறு செய்யாதோர் நீருள் தோன்றும் மொக்குள் போலத் தோன்றி மறையும் தன்மையுடை யோரே. வாழ்க்கை வரையறையுடையது. புகழோ வரையறை யற்றது. புகழுக்கு இறுதி என்பதும் கிடையாது. வரையறை உடைய வாழ்வில் வரையறையற்ற புகழைப் பெற முயலுவதே அறிவுடைமையாகும்.

வித்தி வான்நோக்கும் புன்புலம், கண்ணகல்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்மஇவண் தட்டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே!

புறம் - 18.

(வித்தி - விதைத்து, புன்புலம் - புன்செய், கண்ணகல் - இட மகன்ற, இறைவன் - அரசன், தாட்கு - முயற்சிக்கு, வல்லே - விரைந்து, நிலன்நெளி மருங்கு - நிலம் பள்ளமான இடத்தில், தட்டோர் - தடுத்து நிறுத்தியவர், தோண்டியவர்; தள்ளாதோர் - தடுத்து நிறுத்தாதவர்)

ஆதலின் நற்செயல்கள் பலவாயினும், அவற்றுள் நீர் நிலை அமைத்தல் மற்ற செயல்களினும் உயர் செயலாக, உயிர்ச் செய லாக விளங்குதலின அதன் சிறப்பை விளக்கத் தனித்துக் கூறப் பட்டது என்பது இப்பாடலால் அறியப்பட்டு, ஐயம் தீர்ந்தது. இப்பாடல் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுரையாக வழங்

கப்பட்ட பாடல். பண்டைய அரசர்கள் படைகளைப் பெருக்கு வதையும், போர் புரிவதையும், வானளாவிய கட்டடங்கள் கட்டு வதையும், வறுமையென வந்தோர்க்கு வழங்குவதையும் கொள்கை யாகக் கொண்டிருந்தனர். அவர்கள் கொண்ட கொள்கை சீரியதே எனினும் அவற்றில் உள்ள குறைபாட்டை உணர்ந்தார் புலவர். கொடுப்பவர்கள் என்றும் கொள்பவர்கள் என்றும் இருப்பதைவிட எல்லோரும் உழைத்து உண்ணவேண்டும் என்பதையும் 'எல்லார்க் கும் எல்லாம்' கிடைக்கவேண்டும் என்பதையும் உணர்த்த நினைத்தார். நிலம் இருக்கிறது; நீர் நிலை அமைத்துக் கொடுத்தால் மக்கள் தங்கள் உழைப்பில் வாழும் தகுதி பெறுவார்கள்; தன் மானம் பெருகும். ஆதலின், உழைப்பிற்கு வழிவகை செய்யும் வகையில் நீர் நிலைகளைப் பெருக்குவதே நிலையான புகழையும் நிலைத்த பயனையும் தரும் என்ற கருத்தில் கவிதை புனைந்து இனிய முறையில் எடுத்துரைத்தார். ஔவையார் 'வரப்புயர' என வாழ்த்தியதும் இவ்வடிப்படை கொண்டே என்பது ஈண்டுக் கருதத் தக்கது.

இக்கருத்து இக்காலத்திற்கும் பொருந்துவதாகும். அன்று முடியாட்சி, இன்று குடியாட்சி என்ற வகையில் ஏதேனும் ஓர் ஆட்சி இருந்தே தீரும். ஆளுகின்றவர்கள் தம் புகழை நிலை நாட்டத் தற்காலிகமான செயல்களில் நாட்டம் செலுத்துவதில் பெரும் பயன் விளைந்திடாது. மக்கள் நிலைத்த நன்மை பெற, அடிப் படைத் தேவைகள் நிறைவெய்த, திட்டமிட்டு, எண்ணிச் செயல்பட வேண்டும். "வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண் டொரு பள்ளி" [1] என்றது போல் இன்று அரசு பண்ணையம்தோறும் கிணறுகள் தோண்டி, நீர் வளம் பெருக்கவேண்டும். ஊர்தோறும் ஏரிகள், குளங்கள் எனப் பொது நீர்நிலைகளை உண்டாக்கவேண்டும். வட்டந்தோறும், மாவட்டந்தோறும் நீர்த்தேக்கங்கள், அணைக் கட்டுகள் அமைக்க வேண்டும். நீர்வளம் மட்டும் நிறைந்திருப்பின் எல்லா வளமும் பெருகும். அடிப்படைத் தேவைகள் தீரும்; ஆளு நரும் புகழ் பெறுவர்; ஆளப்படுவோரும் மனம் மகிழ்வர்.

'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ'

கம்பன்-பால-நகர். 73

என்ற கவிக்கோனின் கனவு நனவாகும். தள்ளா விளையுள் பெருகும் தக்கோர் தோன்றுவர். மக்கள் தாழ்விலாச் செல்வர் ஆவர்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (குறள். 731)

என்ற குறிக்கோளுடைய நாட்டை அடைவோம். நீர்வளம் பெருக ஏர்வளம் பெருகும். பயிர் பெருகப் பண்பாடு வளரும்.

மேற்கோள் விளக்கம்

1. பாரதியார் பாடல்கள், வெள்ளைத்தாமரை, பாடல். 9
2. புறநானூறு, பாடல். 182, வரி. 8 - 9
3. குறள். 322
4. குறள். 53
5. நற்றிணை, பாடல் 1, வரி. 6.
6. கம்பன். இந்திரசித்து. 10,
   'இன்றுளார் நாளைமாய்வார் புகழுக்கும் இறுதிஉண்டோ'?
7. பாரதியார் பாடல்கள், வெள்ளைத்தாமரை, பாடல். 6

5. ஓரேர் உழவன்

உவமை தோன்றுவதன் பல்வேறு நோக்கங்களுள் தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்குவதும் ஒரு நோக்கமாகும். புலியைப் பார்த்தறியாத ஒருவனுக்குப் புலியைப் பற்றி அறிவுறுத்த வேண்டுமெனின் அவன் பார்த்த ஒரு பொருளைக் கொண்டே இதுவரை பார்க்காத புலியை அறியும்படிச் செய்ய இயலும். நாய், பூனை, கழுதை முதலிய விலங்கினங்களை அவன் பார்த்திருக்கின்றான். அவ்விலங்கினங்களுள் புலிக்கு ஒப்பானது பூனை ஒன்றுதான். புலி பூனையைப் போன்று இருக்கும் என்று கூறி ஒருவாறு புலியை அறியச் செய்யலாம். அவ்வொப்புமையும் ஓரளவு ஒப்புமைதான். உருவ அளவிலேயே இங்கு ஒப்புமை காட்டப் பெறுகின்றது. புலவர்கள் இதனை உவமை என்று கூறுவார்கள். இன்று பேச்சு வழக்கில் 'மாதிரி' என்று சொல்வதெல்லாம் உவமையை விளக்கும் முயற்சியே. ஆதலின் உலகில் உவமையைப் பயன்படுத்தாதவர்கள் இல்லை என்றே கூறலாம். ஆனால் அவர்கள் உவமையைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பிரித்து அறிவதில்லை.

உவமைகள் பலவகைப்படும். ஒரு செயலுக்கு வேறு ஒரு செயலை உவமையாகக் கூறுவது வினை உவமை எனப்படும். புலி போலப் பாய்ந்தான் என்றால் புலியின் செயல் போன்றது இவன் செயல் என்பது பொருள். ஒரு நன்மைக்கு வேறொரு நன்மையை உவமை கூறுவது பயன் உவமை எனப்படும். மழை போலக்

கொடுத்தான் என்றால் மழை கைமாறு கருதாது பெய்வது போல இவன் கைமாறு கருதாமல் கொடுப்பவன் என்பது பொருள். துடி போலும் இடை என்பது உருவத்திற்கு மற்றோர் உருவத்தை உவமை கூறுவது. தளிர் போலும் மேனி என்பது தளிர் நிறத்தைப் பெண்களின் மேனி நிறத்திற்கு ஒப்புமை கூறுவது.[1] இவைகளே அன்றிக் கருத்துக்குக் கருத்து உவமை கூறுவதும் உண்டு.

இவ்வாறு உவமைகள் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் முதலான அறிஞர்கள் உவமை அணியையே பெரிதும் போற்றுகின்றனர். எத்தகைய கருத்தினை யும் உவமை வாயிலாக விளக்க இயலும் என்பதே அப்போற்றுத லுக்குரிய காரணமாகும். உவமைகள் எடுத்துக் கொண்ட பொருளை யோ, கருத்தையோ விளக்குவதோடு மட்டுமல்லாமல் எடுத்துக் கொண்ட பொருளுக்குச் சார்பான கருத்துக்களையும் விளக்க வேண்டும். சிறந்த உவமை, பொருளின் தன்மையை விளக்குவ தோடு அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும் என்றும் அறிஞர் கூறுவர்.[2] (A perfect simile must both illustrate and ennoble the subject).

தலைவன் ஒருவன் தன் தலைவியைப் பிரிந்து வினைமேல் செல் லுகிறான். சென்றவன் குறித்த பருவம் கடந்தும் வருவதற்கியல வில்லை; வினை நீண்டுவிடுகின்றது. பருவங்கடந்து புறப்படுகின் றான். தனது தலைவி குறித்த பருவம் கடந்ததும் காணாது வருந்து வாளே என எண்ணுகின்றான். அவன் கடந்து செல்லவேண்டிய தூரமோ நெடுந்தூரம். தான் முன்னர் கண்ட காட்சி ஒன்று அவனுக்கு இப்பொழுது நினைவுக்கு வருகின்றது. ஒரே ஏரை வைத்துக் கொண்டிருக்கும் உழவன் மழை பெய்ததும் தன் நிலத் தில் பயிரிட மிக வேகமாக உழுதான். இன்றேல் ஈரம் காய்ந்து விடும். அந் நிலம் புன்செய் நிலமாதலின் அதற்கு நீர் வசதியும் இல்லை. அவ்வோரேர் உழவன் போல என் நெஞ்சம் மிகவும் விரைகின்றது. ஆனால் கடந்து செல்ல வேண்டிய தூரத்தை நினைந்தாலோ நான் பெரிதும் வருந்துகின்றேன் எனத் தலைவியின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டை, தலைவன் தலைவி ஒவ்

வொருவருக்கும் இருக்க வேண்டிய பண்பாட்டை, இவ்வழகிய உவமை வாயிலாக உணர்த்துகின்றான்.

ஆடமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே.

குறுந்தொகை—131

[ஆடமை - அசைகின்ற மூங்கில், நெடுஞ்சேண் - நெடுந்தூரம், ஆரிடை - அரியவழி, செவ்வி - பருவம், பைம்புனம் - மழையீரம் உள்ள முல்லை நிலம், பெருவிதுப்பு - மிக்க விரைவு]

'ஓர் ஏர் உழவன்' என்ற இவ்வழகிய உவமை சில நுண்ணிய கருத்துக்களை விளக்குகின்றது. உழவர்களில் சிலர் ஓர் ஏரை வைத்துக் கொண்டு உழுது வந்தார்கள் என்பதும், அவர்களே பருவத்தில் விதைத்துவிட வேண்டும் என்று மிகவேகமாக உழுதார்கள் என்பதும், ஓர் ஏர்கொண்டு உழும் அளவிற்கே அவர்கட்கு நிலம் இருந்தது என்பதும் அவ்வுவமையால் கருத முடிகின்றது. உழுகின்ற சிலருக்கு நிலம் குறைவாக இருந்தது என்பதை 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பரும் கூறியுள்ளார். ஓர் ஏருக்கு உள்ள அளவு நிலம் வைத்திருப்பவன் தனக்குள்ள சிறிய அளவு நிலத்தைப் பயிரிட்டுக் காப்பதுபோல, தயரதன் அயோத்தியைக் காத்தான் என்பதால் உழுகின்றவர்களுக்கு நெடுங்காலம் முதலே நிலம் குறைவாக இருந்தது என்பதை நன்கு அறியலாம்.

''வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றான்''

கம்பன் பால. அரசு-12

[வறிஞன்-ஓர் ஏர் உழவுக்கு உரிய நிலம் வைத்திருப்பவன்]

பல ஏர்களை வைத்து உழவுத் தொழில் செய்தவர்களும் இருந்தார்கள் என்பதும், அவர்கள் ஓர் ஏர்உழவனைப் போல விரைந்து தொழில்பட வேண்டிய நிலை இல்லை என்பதும், அவர்கட்குப் பரந்துபட்ட நிலம் இருந்திருக்கக் கூடும் என்பதும் அவ்வுவமையின் குறிப்புப் பொருளாகும்.

'ஈரம் பட்ட செவ்வி' என்பது மழை பெய்யும் பருவம் என்னும் பொருளைத் தருவதாகும். மழை பெய்யும் காலத்தில் பயிர் செய்தார்கள் என்பதால் மானாவாரிப் பயிர் செய்யும் முறையினை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை அறியலாம். பருவம் தப்பினால் பயிர் விளைச்சல் சிறக்காது. பருவத்தே பயிர் செய்வதே பயிர்த் தொழிலுக்கு ஏற்றது. காதலிற்கூடச் செவ்வி அறிய வேண்டும் என்பார் வள்ளுவர்.[2] அதுபோல உரிய காலத்தில் பயிர் செய்ய வேண்டும் என்பதைச் 'செவ்வி' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் புலவர். முன் பருவத்து மழையில் விதைத்து விளைந்த பயிர்களை அறுவடை செய்துவிட்டனர். அறுவடைக்குப் பின் சிலகாலம் வெறுமனே கிடக்கின்றது நிலம். அந்நிலத்தில் பசியபுற்கள் முளைத்துள்ளன. அறுவடைக்குப் பின் சிலகாலம் ஆகிவிட்டது என்பதை அப்பசிய புற்களைக் கொண்டு அறியமுடிகின்றது. 'பைம்புனம்' (பசுமையான நிலம்) எனும் சொல் ஒரு பயிருக்கும் அடுத்த பயிருக்கும் கால இடைவெளிவிட்டுப் பயிரிட்டதை உணர்த்துகின்றது.

மழை பெய்ததும் விதைக்க விரைந்தான் என்பதால் அவன் இப்பொழுது எருவிடவில்லை என்றும் எருவிடாமலே நிலம் விளையும் சத்துடையது என்றும் கருதலாம். அன்றியும் முன் பயிருக்கு இட்ட எருவின் சத்துக்களில் ஒரு சில அப்பயிருக்குப் பயன் பட்டிருக்கும். அப்பயிருக்கு வேண்டாத சில சத்துக்கள் இம்முறை இடப்படும் வேறு பயிருக்குப் பயன்தரக்கூடும் என்பதால் எருவிடாமல் இருந்திருக்கவும் கூடும். இதனால் ஒரே பயிரைத் தொடர்ந்து விதைத்தார்கள் என்று கொள்வதற்கில்லை. பயிரை மாற்றி மாற்றிப் பயிரிடும் மாற்றுப் பயிர் சாகுபடி (crop rotation) முறையை மேற்கொண்டு இருந்தார்கள் என்றும் இது கொண்டு ஊகிக்கலாம்.

உழவன் மனம் மிகவும் விரைந்தால் மட்டும் பயனில்லை. அவனது எருதுகளும் விரைந்து செயல்பட வேண்டும். இல்லையேல் குறிப்பிட்ட பகுதியை விரைவில் உழுது விதைத்தல் இயலாது. அவன் விரைவுக்கு ஏற்ப எருதுகள் ஒத்துழைத்தன என்பதால் கால்நடைச் செல்வங்கள் போற்றி வளர்க்கப்பட்டன என்பதை அறியலாம். ஏர் என்ற சொல்லால் உழவுக் கருவிகள்

பற்றிய குறிப்பினையும் உணரலாம். உழவன் என்ற சொல் தொழிலால் தோன்றிய சொல்லாகும். இதுபோல் வாணிகம் செய்வோன் வணிகன்; மருத்துவம் செய்வோன் மருத்துவன்; பறை அறைந்து செய்தி அறிவிப்போன் பறையன் எனத் தொழில் வழிப் பெயர் தோன்றியதே அன்றி, இக்காலத்தில் கருதப்படுவதுபோல உயர்வு தாழ்வு பற்றித் தோன்றியது அன்று என்பதை 'உழவன்' என்ற சொல் உணர்த்துகின்றது. இதனால் அக்காலச் சமுதாய அமைப்பினையும் நன்கு உணரலாம். இவ்வாறு ஓர் உவமையில் பல்வேறு செய்திகள்அடங்கி இருப்பதைஅறிந்து மகிழலாம்.

இதோ மற்றுமோர் உவமை!

இங்குக் காதல் வளர்ந்து விட்டது. இன்னும் திருமணமாகவில்லை. தலைவன் களவில் இன்பம் பெறுவதால் திருமணத்தைப் பற்றிக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் தலைவியோ பெரிதும் வருந்துகின்றாள். ஒவ்வொரு நாளும் இரவில் தவறாது வருகின்றான் தலைவன். வரவில்லை என்றாலும் அவன் பிரிவைத் தலைவியால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. அவன் வரும் வழியோ அஞ்சத்தக்க அரிய வழி.

தலைவிக்கு ஆறுதல் சொல்பவள் தோழி. அவளிடத்தில் தன் துன்பத்தை எடுத்துரைப்பது போலத் தலைவனுக்குத் தன் நிலையை உணர்த்த வேண்டும் என்று கருதுகின்றாள் தலைவி. இரவு வந்தது. அவனைக் கண்டும் காணாததுபோல் தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகின்றாள். "தோழி! ஒருநாள் கடுமையான மழை பெய்தது. செடியில் இருந்த பூக்கள் எல்லாம் உதிர்ந்து கீழே விழுந்துவிட்டன. அவ்வளவு கடுமையான மழை. ஆனால் அது உழவுத் தொழிலுக்கு ஏற்ற காலத்தில் பெய்த நன்மழை. இரவு முழுவதும் பெய்து கொண்டே இருந்தது. நம் ஊரில் உள்ள பெருங்குளமே நிறைந்துவிட்டது. குளத்தின் கரையோ மிகவும் சிறியது. கரை உடைந்து விட்டால் நீரெல்லாம் வீணாகி விடுமே என்று அப்பெருங்குளத்தைக் காப்பவன் இரவில் தூங்காது அதனைக் கவனித்து வந்தான். அக்காவலன் போல என் தாய் தனது உறக்கத்தையும் மறந்து என்னைக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றாள். இனி வெளியில் செல்லவும் முடியாது. ஆதலின் நீர்வழியும் கண்களோடு அவன் வரும் வழியை எண்ணி எண்ணி அஞ்சுகின்றேன். நான் இங்கே தனித்து

இருத்தலை எண்ணியும் ஆற்ற முடியாமல் வருந்துகின்றேன். இனி நான் எங்குச் செல்வேன்" எனக்கூறி அவனுக்குத் திருமணத்தை நினைவூட்டுகின்றாள்.

> "தொழில்மழை பொழிந்த பானாட் கங்குல்
> எறிதிரைத் திவலை தூஉஞ் சிறுகோட்டுப்
> பெருங்குளம் காவலன் போல
> அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே"
>
> அகம். 252

[தொழில் மழை - பயிர்த்தொழிலுக்கு ஏற்ற மழை, பானாள் - நடு இரவு, கங்குல் - இருட்டு, திவலை - துளிகள், தூஉம் - தூவுகின்ற, சிறு கோடு - சிறிய கரை]

இப்பாடலில் "பெருங்குளம் காவலன் போல" என்னும் இவ்வழகிய உவமை அன்றைய நீர் நிலைகள் பற்றிய கருத்தினைத் தொகுத்துக்கூறும் ஓர் அரிய தொடராக விளங்குகின்றது. குளங்கள் சிறுகுளம் என்றும் பெருங்குளம் என்றும் இருவகைப்படும். சிறுகுளத்துநீர் குடிப்பதற்கும் பெருங்குளத்துநீர் பாசனத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. கரிகாலன் காட்டை அழித்து நாடாக்கிய பொழுது குளம் வெட்டி நீர் நிலைகளை அமைத்தான் என்பதைக் "காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினான்"[4] எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. இக்குளத்திற்கும் கரையமைத்து இருந்தார்கள். குளத்தின் நீரலைகள் மோதி மோதிக் கரையைக் கரைத்து விட்டிருந்தன. அது மண்ணால் அமைக்கப் பட்ட கரையாதலின் கடுமையான மழையால் மேலும் கரைந்து சிறியதாகி விட்டது. இக்கருத்துக்களைச் "சிறுகோட்டுப் பெருங் குளம்" என்ற தொடரால் அறிகின்றோம்.

மழை மிகுதியால் இக்குளத்தின் கரை உடைந்து விடுமே எனக் கருதிய காவலன், நள்ளிரவிலும் தன் தூக்கத்தைத் துறந்து குளக்கரை உடையாமல் பாதுகாக்கின்றான். குளத்தைப் பாதுகாப்பதற்கென ஒருவன் இருந்தான் என்பதையும், அவன் கண்களைக் காக்கும் இமைபோலக் குளத்தைப் பார்த்துக் கொண்டான் என்பதையும் 'காவலன்' என்ற சொல்லால் அறியலாம். இப்பொழுது பெய்த மழை பயிர்த் தொழிலுக்கு ஏற்ற மழை ஆதலின் அதனைப் பயன்படுத்திக் கொண்டதோடு, எஞ்சிய நீரைக் குளத்தில் தேக்கி வைத்து மழை பெய்யாக் காலத்து அதனைப் பயன் படுத்திக் கொண்டார்கள் என்பதையும் அறியமுடிகின்றது. குளம்

என்ற சொல்லால் இது மருதநிலம் என்று கூறப்படும் நன்செய் நிலம் என்பதையும் குறிப்பால் அறியலாம்.

பெருங் குளத்தைக் காவல் செய்வது போல என்னை என் தாய் காவல் செய்கின்ருள் என்று ஒப்புமை கூறியுள்ளது ஆழ்ந்து சிந்தித்தற்குரிய ஒன்ருகும். நீர் நிறைந்த குளம் போன்றவள் பெண். குளம் உடைந்தால் நீர் வீணைகப்போய்விடும். குளத்தின் பெருமையும் குன்றிவிடும். அதுபோலப் பெண்ணின் மனத் திண்மை தளர்ந்தால் அவள் கற்புக்கு மாசு ஏற்பட்டுவிடும். நீரற்ற குளம் பயன்படாதது போல நெறியற்ற பெண்ணும் பயன் படாள். இதனுல் நீரின் சிறப்பும் அதன் இன்றியமையாமையும் பெண்ணின் பண்பாடும் விளக்கப்படுவதை நன்கு அறியலாம்.

இவ்வாறு ஒவ்வோர் உவமையிலும் பல்வேறு கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன. ஆங்கில இலக்கியத்தில் மில்டனின் உவமைகளுக்குத் தனிச்சிறப்பு உண்டு. அவை மில்டனின் உவமைகள் (Miltonic similes) என்றே போற்றப்படுகின்றன. அதுபோலச் சங்க இலக்கியத்தில் காணப்படும் இத்தகைய உவமைகள் "வேளாண்மை உவமைகள்" என்று போற்றப்படும் சிறப்புடையன. இவ்வுவமைகளில் செறிந்திருக்கும் கருத்துக் களையும் அதன் வழி உணர்த்தும் பண்பாடுகளையும் அறிந்து போற்றுவது வளர்ச்சியை நோக்கிச் செல்வோர்க்கு இன்றியமை யாததாகும்.

மேற்கோள் விளக்கம்

1. வினை, பயன், மெய், உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமைத் தோற்றம்.
தொல். பொருள். உவமம். 1
2. ஞானசம்பந்தம். அ. ச., இலக்கியக்கலை, கழக வெளியீடு சென்னை. 1964, பக்கம். 177.
3. மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். குறள். 1289.
4. பட்டினப்பாலை, வரி. 283 - 4.

6. வித்தும் முளையும்

'எண்ணித் துணிக கருமம்'[1] என்பது வள்ளுவரின் வாய் மொழி. ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன் அதனைப் பற்றி ஒருமுறைக்குப் பலமுறை நன்கு சிந்தித்துப் பின் செயலாற்றத் தொடங்கவேண்டும். தொடங்கிய பின்னர் எண்ணிப் பார்ப்பது பயனற்றதோடன்றி இழிவையும் தருவதாகும். இவ்வாறு எண்ணாது தொடங்கி இடையில் தோல்வியால் துவண்டு விழுந்தவர்களே உலகில் பலராவர். ஒரு செயலைச் செய்வதற்குக்கூட இந்துணையளவு எண்ணிப்பார்க்க வேண்டுமெனில், பல்லாண்டுகள் நீண்டுசெல்லும் வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருப்பது அறிவுடைமையாகாது. ஏதோ பிறந்தோம், இருந்தோம் இறந்தோம் என்றில்லாமல் தோன்றினோம், வாழ்ந்தோம், மறைந்தோம், எனப்புகழொடு தோன்றி, வளமாக வாழ்ந்து, பிறர் நெஞ்சில் இடம்பெறும் வகையில் இறந்தும் இறவாப் புகழ் எய்த வேண்டும்.

இத்தகைய பெருநிலையை அடைய அவரவர் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினால், பிறர் வாழ்வில் குறுக்கிட்டுக் குழப்பமும் கேடும் விளைவிப்பது குறைந்துவிடும். தம்குற்றம் தமக்குப் புரியும். பிறர்மீது பழிசுமத்தும் மனப் பான்மை மறையும்; நல்லது விளையும்; நாடு நலம் பெறும். ஆயின், நம்மைப் பற்றி எண்ணிப் பார்ப்பது எவ்வாறு? என்ற கேள்வி எழும். அக்கேள்வி எழுவதே சிந்தனையின் தொடக்கமாகும். அச் சிந்தனை தொடர்ந்தால் அவர்கள் வாழ்வு வளர்ச்சி நிலையில் இருக்கிறது என்பது அறியப்படும்.

மானிட வாழ்வில் இளமைப் பருவத்தில் சில ஆண்டுகள் கழிந்து விடுகின்றன. நல்லது எது கெட்டது எது என்று தெரியாமலேயே பல ஆண்டுகள் உருண்டோடி விடுகின்றன. வளமையான காளைப் பருவத்தில் சில ஆண்டுகள் கழிகின்றன. கொடிய நோய்களினுல், எதிர்பாரா இன்னல்களினுல், இடை இடையே காலங்கள் கழிகின்றன. சில காலம் சிலரோடு பழகுவதிலும் பிரிவதிலும் கழிந்து விடுகின்றது. அப் பழக்கத்தில் அவர்களை விட்டுப் பிரிய நேரிட்டு விட்டதே என்று வருந்துவோரும், இப்பொழுதாவது அவர்களை விட்டுப் பிரியும் வாய்ப்புக் கிடைத்ததே என மகிழ்வோரும் உண்டு. இப்படிச் சில காலம் கழிகின்றது. உறக்கத்தில் பாதிக் காலம் கழிந்து விடுகின்றது. சிலர் பெரும் பகுதியை அதற்காகவே கழிப்பதும் உண்டு. இன்னும் சிலருக்குக் கண் விழித்த நேரத்தில் தான் வாழ்க்கை, எஞ்சிய நேரமெல்லாம் தூக்க மயக்கம்தான். இத்தனைக்கும் மேலாக வாழ்க்கையில் அன்ருடம் தோன்றும் சிக்கல்கள், அமைதியைக் குலைக்கும் நிகழ்ச்சிகள். பெரும்பாலோர் வாழ்க்கை இப்படி அமைதியின்றியே கழிந்து விடுகின்றது.

வாழ்க்கை இம் முறையில்தான் கழிகின்றதே, இதற்கேனும் இத்தனை ஆண்டுகள் வரை வாழலாம் என்ற வரையறை அல்லது ஓர் உறுதிப்பாடேனும் உண்டா எனின், அதுவும் இல்லை. இப்பொழுதுதான் நின்று கொண்டிருந்தான், தலைநோகிறது என்று படுத்தான், அதோ! அவன் மனைவி மக்கள் கதறி அழும்படிச் சென்று விட்டான் என்று கூறும் அளவிற்கு நிலையற்ற வாழ்க்கை[2]. இவற்றை எல்லாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்ப்பார்களாயின் இருக்கின்ற நாட்களில் நல்லது செய்தல் இல்லாவிடினும் தீமையாயினும் செய்யாது இருப்பார்கள் அல்லவா?[3] ஆனுல் மக்கள் இவைகளை எண்ணிப்பார்ப்பதாயில்லை. உழவன் விதைக்கு என வைத்திருந்த நெல்லைக் குற்றி உண்பது போல பலர் நன்மையை அழித்து வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிருர்கள் எனப்பாடுகின்ருர் அறநெறிச்சார ஆசிரியர்

தெரிவில் இளமையும் தீப்பிணி மூப்பும்
பிரிவும் துயிலும் உறீஇப் பருவந்து
பத்தெட்டு நாளைப் பயனிலா வாழ்க்கைக்கு
வித்துக்குற்று உண்பார் பலர்.

அறநெறிச்சாரம் - 116

இப்பாடலில் 'வித்துக் குற்று உண்பார்' என்பதே ஈண்டு மணங்கொள்ள வேண்டிய பகுதி. உழவன் எத்தகைய வறுமை நிலை எய்தினும் விதையை மட்டும் உண்ணமாட்டான் என்ற ஆணித்தரமான கருத்தைப் புலப்படுத்துகிறது அத் தொடர். வேளாண்மைக்கு எல்லாவற்றையும் விட விதையே அடிப்படை யானது என்பதே அதன் நுட்பம். நல்ல நீரும் நிலமும் வாய்த்து பருவமும் வாய்த்து, எருவும் பிறவும் வாய்த்தாலும் என்ன பயன்? வித்துக்கள் வேண்டு மன்றோ? ஆதலின் வித்தே அடிப்படை யானது. அதைப் போன்றது அறம். அறம் அழிய வாழ்வது உழவன் விதையை உண்பதற்கு ஒப்பாகும் என விதைகொண்டு வாழ்வில் மேற்கொள்ளவேண்டிய நெறியை நினைவூட்டுகின்றார் ஆசிரியர்.

விதைகளிலும் எல்லா விதைகளும் உயரிய பயன் நிறைந்த வித்துக்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. பனம் பழம் பெரியது; திரண்டது; அதில் உள்ள விதையும் பெரியது. அது அதன் அள விற்குப் பயன் தருவது குறைவு. வானுற ஓங்கி வளர்கின்றது. ஆனால் அதனடியில் ஒருவரும் சென்று தங்க இயலாது. நிழல் தராது. பனையின் விதைபோன்று உள்ள மனிதர்களும் உண்டு. அவர்கள் விளைவிக்கும் பயன் குறைவு.

தேம்படு பனையின் திரள்பழத்து ஒருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழல்ஆ காதே.

நறுந்தொகை-16

ஆனால் ஆலின் பழம் பனம் பழத்தை நோக்க மிகச் சிறியது. அப் பழத்திலுள்ள விதைகளோ மிகமிகச் சிறியவை; சிறிய மீனின் முட்டையைக் காட்டிலும் சிறியவை. அது முளைத்து வளர்ந்து படர்ந்தால் அதனடியில் தேர், யானை, குதிரை, காலாள் படை களுடன் மன்னர்களும் வந்து தங்குவதற்குரிய நிழலைத்தரும். இவ் வாறு ஆலின் விதைபோன்று செயலாற்றிப் பயன்விளைவிக்கும் மனிதர்களே மிக்க பயனுடையவர்கள் ஆவர்.

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையோடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே.

நறுந்தொகை - 17

நிறைந்த பயன் தரும் ஆலின் விதைபோலும் சிந்தனையும் செயல்திறமும் உடைய குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் தீமையை எதிர்த்துப் போர் புரிந்து மாண்டான். மாண்ட செய்தியை அறிந்த புலவர் அவன் பயன் நிறைந்த மனிதனாக வாழ்ந்த வரலாறு வருங்கால மக்கட்குப் பயன் படட்டும் என்று பாடி வைத்தார். பாடல் கையறுநிலைப் பாடல் என்றாலும் அதன் கருத்துக்கள் அத்தனையும் பொறுக்கு வித்துக்களாக உள்ளன.

அம் மன்னன் நாட்டில் எல்லா உயிர்களும் இன்புற்று இருந்தன. ஓர் உயிரால் பிறிதோர் உயிருக்குத் தீங்கு நேர்வதில்லை. கால்நடைகள் எல்லாம் காட்டில் சென்று மேய்ந்து விட்டுத் தாமாகவே வீடு திரும்பிவிடும். காட்டில் அவற்றிற்கு எவ்வித அச்சமும் இல்லை. வேற்றுநாட்டு மக்கள் அவன் நாட்டைக் கடந்து சென்றாலும் அல்லது அவன் நாட்டு மக்கள் ஊர்விட்டு ஊர் பயணம் சென்றாலும் எவ்வித் அச்சமும் இன்றிச் செல்லலாம். வழிப்பறி, கொள்ளை முதலியன அவன் நாட்டு மக்கள் கண்டறியா தவை. அவன் நாடு உழவுத் தொழிலில் சிறப்புற்று விளங்கியது. பசியைப் போக்குவதால்தான் பண்பாட்டை வளர்க்க முடியும் என்பதை நன்கு உணர்ந்தவன் அம்மன்னன். ஆங்காங்கே விளைந் தவை விளைந்தபடிக் கிடந்தன. களத்திலே குவித்தவை குவித்தபடி இருந்தன. அவற்றைக் காக்கவேண்டும் என்ற நிலை இல்லை. மக்கள் பிறர் பொருளை மனதாலும் நினைப்பதில்லை. கால்நடைச் செல்வம், நன்மக்கள், நல்வளம் எல்லாம் ஒருநாட்டில் நிறைந்து இருப்பின் அந்நாட்டின் காட்சி அண்டை நாட்டு மன்னன் மனத்தை உறுத்திக் கொண்டே இருக்கும். ஆதலின் படை எடுக்க முற்படு வானே எனின், அத்தகைய நிலையும் இல்லை. ஏனெனில் இவன் குறுநிலத் தலைவனாயினும் வீரம் செறிந்தவன். இவனது ஆற்றலைக் கண்டு அஞ்சி ஓடுவர் பகை மன்னர். நாடும் பாதுகாவல் உடைய தாக இருந்தது. இத்தனையும் இருந்தால் ஒரு நாட்டின் ஆட்சி அம் மன்னனது விருப்பம் போல் நடைபெற வாய்ப்பு உண்டு. அவன் வைத்ததுதான் சட்டம். அவன் கூறியதுதான் நீதி என்ற நிலை ஏற்படக்கூடும். உலகநாடுகள் பலவற்றில் முடியாட்சி மாறிக் குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலத்திலும் கூட சிற்சில வேளை களில் ஆளுவோர்க்கு முடியாட்சி நினைவு வந்து விடுவதைக் காண் கிறோம். ஆனால் இம் மன்னனோ அத்தகையவன் அல்லன். மக்கள் விரும்பியபடி செங்கோல் செலுத்தினான். அவனது ஆட்சி

நிலையான ஆட்சியாக, குழப்ப மற்ற நிலையில் இருந்தது. அவ்வாட்சியைக் ''கலங்காச் செங்கோல்'' என்று போற்றுகிறார் புலவர். எதிர்பாராத விதமாகப் பெருமன்னன் ஒருவன் மண்ணாசை கொண்டு போர் தொடுத்தான். அவ்வாசை தீது என்று உணர்த்தவும் போராடி மாண்டான் அக்குறுநில மன்னன்.

'கன்றுஅமர் ஆயம் கானத்து அல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்
பொய்யா எழினி பொருதுகளம் சேர'

புறம் - 230

(அல்க - தங்க, வம்பலர் - வழிப்போக்கர், குப்பை - நெற்குவியல், காப்பில - காவலின்றி, வயங்கு - வெற்றி, பொருது - போரிட்டு, களம்சேர - இறந்துபட)

இச்செய்தியைக் கேள்வியுற்ற பொழுதுதான் புலவர் உளம் நொந்து பாடினார். நீதியைஉணர்த்த நினைந்ததால், புலவர் அக்குறுநில மன்னனது உயிரை உண்ட கூற்றுவனை நோக்கிப் பாடுகின்றார். ''ஏ! கூற்றுவனே! தன் குடியோடு அழிந்து போகின்ற உழவன் தான் விதையை உண்ணுவான். அவ்வீழ்குடி உழவனைப் போல நீயும் மதியிழந்து அம்மன்னனின் உயிரைக் குடித்து விட்டாயே! அவன் இருப்பின் இன்னும் எத்தனையோ போர்களை நிகழ்த்துவான். எத்தனையோ வீரர்களை வீழ்த்துவான். அத்தனை உயிர்களும் உனக்கு உணவாகுமே; அதை விடுத்து விதையையே உண்டு விட்டாயே! இனி விளைச்சல் எப்படிக் கிட்டும்?'' எனக் கவன்று பாடுகின்றார் அரிசில் கிழார் என்ற அருந்தமிழ்ப்புலவர்.

வாழ்தலின் வரூஉம் வயல்வளன் அறியான்
வீழ்குடி உழவன் வித்துஉண்டாஅங்கு
ஒருவன் ஆருயிர் உண்ணுய் ஆயின்
நேரார் பல்லுயிர் பருகி
ஆர்குவை மன்னோஅவன் அமர்அடு களத்தே.

புறம் - 230

(நேரார் - பகைவர், ஆர்குவை - உண்பாய், அமர் - போர்)

மனிதன் விதைபோன்று விளங்க வேண்டும். தான் நன் மையின் அடித்தளமாக இருந்து பல நன்மைகளை விளைவிக்க வேண்டும். நல்லொழுக்கமும் எனும் விதை நன்மைகள் பல வற்றை விளைக்கும் என்ற வள்ளுவர் கூற்று இவண் மனங் கொள்ளற்பாலது.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' குறள் - *138.*

வித்துக்கள் வித்துக்களாவே இருந்துவிட்டால் அவை பயனற்றுப் போய்விடும். அவற்றை முளைக்க விட வேண்டும். அதுபோல் மனிதன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். மனிதனும் விதை செயல்களாம் கதிர்களை விளைக்க வேண்டும்.

மேற்கோள் விளக்கம்

1. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
   எண்ணுவம் என்பது இழுக்கு. குறள். 467
2. நின்ருன் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
   சென்ருன் எனப்படுத லால். நலடி. 29, 3. 4
3. நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
   அல்லது செய்தல் ஓம்புமின். - புறம் - 195, 6 - 7

நெல்' (வளைந்த நெல்) எனக் கூறி மகிழ்கின்றார் பிறிதொரு கவிஞர்.[16] விளைந்த நெற்கதிர்கள் பின்னிப்பிணைந்து வரப்பை அளாவிக்கொண்டு கிடக்கின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

நெல்வயல்கள் மிகப் பெரியன. அவ்வயல்களில் விளைந்த நெல்லை அறுவடை செய்யத் தொடங்குவர். நெல் அறுப்பதற்கு முன்னர் நெல் வயல்களில் தங்கியுள்ள பறவைகளை ஓட்டும் வண்ணம் தண்ணுமை என்னும் மத்தளம் போன்ற ஒருவகை இசைக் கருவியை முழக்குவர்.[17] இச்செயல் உழவர்கள் பிற உயிர்கள்பால் கொண்டிருந்த இரக்க உணர்வினைக் காட்டுவதாக உள்ளது. மேலும், அவ்வொலியின் அமைப்புக்கு ஏற்றவாறு அறுவடையும் மிக வேகமாக நடைபெறும். களை பிடுங்கிய போது தப்பிய தாமரை, நெய்தல் போன்ற மலர்கள் விளைவயலில் இருக்கும். அறுவடையின்போது அவற்றை விடுத்து நெல் தாள்களை மட்டுமே அரிவர். நெல் அரிவாளைக் 'குயம்' என்பர்.[18] அதன் கூர் மழுங்குமாயின் அந்நெல் வயல்களில் புதையுண்டு கிடக்கின்ற ஆமை ஓட்டில் அதனைத் தீட்டிக் கொள்வர்.[19]

அரிந்தவைகளைக் கட்டுக்கட்டாகக் கட்டுவர். அக் கட்டுகளைக் களத்தில் அடுக்குவர். அவ்வாறு அடுக்கப்பட்டதற்குச் 'சூடு' என்பது பெயர். அச்சூடு கோடு (மலை) எனத் தோன்றும் அளவிற்குப் பரந்து உயர்ந்து காணப்படும்.[20] அக் கட்டுகளை விடியற்காலந் தொடங்கி அடித்துத் தாம்பு விடுவர். 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று யானைகட்டிப் போரடித்தார்கள்' என்பதையும் அறிகின்றோம். தாம்புவிட்ட நெல்தாள்களைக் குவித்து வைப்பர். அதனைப் 'போர்வு' என்பர். இன்று அதனைப் 'போர்' என்று கூறுகின்றோம். நெல்லைத் தூற்றிக் குவிப்பர்.

புலவர்கள் அரசர்களை வாழ்த்தும்போது, "ஒரு வேலி நிலம் ஆயிரம் கலம் நெல் விளைவதாக" எனக் குறிப்பிட்டுள்ளனர்.[21] ஒருவேலி என்பது $6\frac{2}{3}$ ஏக்கர் அளவாகும். கலம் என்பது $\frac{1}{2}$ மூட்டை அளவைக் குறிக்கும். $6\frac{2}{3}$ ஏக்கரிலும் 500 மூட்டை நெல் விளைந்துள்ளது. அஃதாவது ஓர் ஏக்கருக்கு 75 மூட்டை நெல் விளைவிப்பதை அவர்கள் குறியளவாகக் கொண்டிருந்தனர் என்பதையும், அவ்வளவை எட்டும் அளவில் விளை

வித்தார்கள் என்பதையும் அறிகின்றோம். (இன்றைய கணக்கில் இவ்விளைச்சல் ஒரு எக்டருக்கு 14 டன் ஆகும். இது ஒரு போகத்தின் விளைச்சல்).

களத்திற்குவித்த நெல்லை மூட்டை மூட்டையாகக் கட்டி இல்லத்திற்கு எடுத்துச் செல்வர். அவைகளை உலரவைத்து நெற் கூடுகளில் இட்டுவைப்பர். அக்கூடுகள் வைக்கோல் புரிகளால் சுற்றப்பட்டிருக்கும்.[22] அவர்கள் நெல்லைக் காத்து வைத்திருந்த முறை இன்றும் கடைப்பிடிக்க வேண்டிய தொன்றாகும். நெற்கூடு களில் இட்டு வைத்திருந்த நெல்லை ஓராண்டு வரை வைத்திருந் தனர் என்பதை 'யாண்டு கழி நெல்', 'பழநெல்' என்ற சொற் களால் அறியலாம்.[23] பழைய நெல்லைக் கொண்டுள்ள மனை வளமனை என்பது அன்றைய மக்களின் கருத்தாக இருந்தது.

சங்க இலக்கியத்தில் சிலவகை நெல்லின் பெயர்களே காணப் படுகின்றன. ஐவன நெல், தோரை நெல், கழை நெல் ஆகியவை குறிஞ்சி, முல்லை ஆகிய மேட்டுப்பாங்கான நிலங்களில் விளைவன வாகும். செந்நெல், வெண்ணெல் என்பன மருதத்திலும், ஒருசார் நெய்தல் நிலத்திலும் விளையும் நெல்வகைகளாகும். நெல்லின் பெயர்கள் மிகுதியாகச் சுட்டப்படாவிடினும், அரிசி, முல்லை அரும்பு போன்று சன்னமாகவும், விரல் போன்று நீண்டும், ஒரே அளவினதாக இருந்தது என்பதையும், பொன்னைச் சிறிது சிறிதாக நறுக்கினாற்போன்று நுண்மையானதாக இருந்தது என்ப தையும் அறிகின்றோம்.[24] இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய முக்கூடற் பள்ளு என்னும் நூலில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு வகையான நெற்களைப் பயிரிட்ட வர்கள் நெல் அறுவடைக்குச் சில நாட்களுக்கு முன்னர் அவ்வயல் களில் பச்சைப்பயறு, உழுந்து போன்ற பயறு வகைகளை விதைப் பார்கள். நெல் அறுவடைக்குப்பின் அதனைப் பேணிக்காத்துப் பயன்பெறுவார்கள். இதனை 'அரிகால் பெரும்பயறு நிறைக்கும் ஊர' என்ற தொடரால் அறியலாம்.[25] இம்முறை இன்று தொடர் பயிர் முறை (Relay Cropping) என்று கூறப்படுகிறது. இவ்வா றன்றி நெல் அறுவடைக்குப் பின் அந்நெற்கட்டைகளை உழுது விடுவர். அவை பெரும் பெரும் குடுமிக்கட்டிகளாகத் தோன்றும். அதற்குப் பின்னரும் பயிர் செய்யும் வழக்கமும் உண்டு.[26] இவ்

வாறு மாற்றுப் பயிர்முறை (Crop Rotation) முறையிலும் பயிரிட்டு ஆண்டு முழுவதும் உணவுப் பொருள்களை விளைவித்து வந்தார்கள் என்பதையும் அறியலாம்.

புலவர்கள் வாழ்த்துக் கூறும்போது 'நெல் பல பொலிக' என்றும், 'விளைக வயலே' என்றும் 'வேலி ஆயிரம் விளையுள் ஆக' என்றும் வாழ்த்துவது பண்டைய மரபாகும்.[27] பிற்காலத்தில் 'வரப்பு உயர' என்று ஔவையார் வாழ்த்தியதும் அம்மரபை ஒட்டியே ஆகும். நாட்டில் தள்ளா விளையுள் பெருகி உணவுப் பொருள்கள் நிறைந்து விளங்க வேண்டும், எல்லாரும் வயிறார உண்ண வேண்டும் என்ற பரந்த நோக்கையே அவ்வாழ்த்துக்கள் புலப்படுத்துகின்றன. மேலும், இறை வணக்கத்திற்குரிய பொருளாகவும் நெல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை,

'முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்' *சிலம்பு 9-1*
'நெல்லொடு நாழிகொண்ட நறுவீ முல்லை'
முல்லைப்பாட்டு-9

என்ற தொடர்களால் நன்கு அறியலாம். இன்று தேங்காயும், பழமும் வைத்து வழிபடுவதற்கு மாறாக அன்று நெல்லும், முல்லை மலரும் வழிபாட்டுப் பொருள்களாக விளங்கியமை, நெல் சமூகத்தில் பெற்றிருந்த உயர்நிலைக்கு ஒரு சான்றாகும்.

இத்தகைய இலக்கியச் சிறப்பு வாய்ந்த நெல் தமிழகத்தில் முதன் முதலில் பயிரிடப்பட்டது என்பதைக் காட்டிலும் அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ள தற்காலத்தில், உலக நெல் விளைச்சல் போட்டியில் தமிழகம் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (1973ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் தீவில் 4 போகம் பயிர் செய்து எக்டருக்கு 25 டன் விளைவித்தார்கள். அஃதாவது ஒரு போகத்தில் $6\frac{1}{4}$ டன். தமிழகத்தில் (கோவை, ஈரோடு, சாவடிபாளையம்) 3 போகம் பயிர் செய்து எக்டருக்கு 22 டன் விளைவித்துள்ளார்கள். (அதாவது ஒரு போகத்தில் $7\frac{1}{3}$ டன்) ஆதலின், பெற்ற பெருமையை நிலைநாட்ட மேலும் மேலும் உழைத்து உயர வேண்டும் என்பதே இப்பழம்பெருமையை நினைவு கூர்வதன் நோக்கமாகும். பழம் பெருமையை நிலைநிறுத்துவது பண்பாட்டை நிலைநிறுத்துவதாகும்.

மேற்கோள் விளக்கம்

1. Rice - Charles Douglas. page. 3
2. தமிழின் சிறப்பு - கி.ஆ.பெ. விசுவநாதம் - பக்கம். 44
3. மதுரைக்காஞ்சி - வரி. 247
4. நற்றிணை-310-7, பெரும்பாண். 197
5. புறம் - பாடல். 61
6. அகம் - பாடல். 41
7. நற்றிணை - பாடல். 60
8. மலைபடு கடாம் - வரி. 110
9. புறம் - பாடல். 338
10. நற்றிணை - பாடல். 19
11. ஐங்குறுநூறு - பாடல். 27
12. புறம் - பாடல். 190
13. புறம் - பாடல். 344
14. கலித்தொகை – பாடல். 79
15. நற்றிணை - பாடல். 73
16. பதிற்றுப்பத்து - பாடல். 29
17. நற்றிணை – பாடல். 350
18. பொருநர் - வரி. 242
19. நற்றிணை - பாடல். 195
20. பொருநர் - வரி. 242
21. பொருநர் - வரி. 246
22. நற்றிணை - பாடல். 26
23. ஐங்குறுநூறு - பாடல். 48
24. பெரும்பாண் - வரி. 473
25. ஐங்குறுநூறு - பாடல். 47
26. அகம் - பாடல். 41
27. ஐங்குறுநூறு - பாடல். 1, 2

8. உழைப்போம் உயர்வோம்

நிலவு தன் வெண்ணிறக் கதிர்களால் உலகை ஒளிமய மாக்கிக் கொண்டிருக்கிறது. கவிஞர் ஒருவர் வானத்தை நோக்கு கின்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னை மறந்து நிலவுடன் ஒன்றிவிடுகின்றார். கவிதை பிறக்கின்றது. கவிஞரின் அடி மனத்தில் ஆழ்ந்து கிடந்த கருத்துக்கள் உணர்வு பெற்றுப் பீறிட்டுக் கிளம்புகின்றன. "ஏ நிலவே! உன்னைக் காணுகின்ற போதில் என் உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் அலைமோது கின்றன. அவ்வெண்ணங்களை எல்லாம் வடித்துத தர வார்த் தைகள் கிடைக்கவில்லை. குளிர் நிலவே! ஒளி முத்தே! ஓர் உவமை கொண்டு உன் அழகை அளவிட முற்படுகிறேன். அதுவும் ஒரு முயற்சிதான். முழுமையான அளவாகுமென்று நான் நம்ப வில்லை. என்னருமைத் தமிழ் மக்கள் மாடாய் உழைக்கிறார்கள். உழைத்துழைத்து ஓடாய் உருக்குலைந்து போகிறார்கள். ஆனாலும், உண்ணவும் உடுக்கவும் போதிய உணவும் உடையுமின்றி நித்திய தரித்திரராய் இருக்கிறார்கள். உழைப்பின் பயனை அவர்கள் அடையவில்லை.

பஞ்சமோ பஞ்சம் என்று பரிதவித்துத் துஞ்சி மடிகின்ற நிலையே அவர்களது நிரந்தர வாழ்வாகி, வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள சிறிது கூழ் கிடைத்தாலும் போதும்; பழம் பருக்கையேனும் இருக்காதா என்ற நினைப்போடு தங்கள் சோற்றுப் பானையை நெருங்குகின்ற நேரத்தில், பானை நிறைய வெண் பொங்கல் இருக்குமாயின் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு

250092
0,31,1:9 (J)

அளவுண்டோ? அதுபோல நானும் உன்னைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனாலும் வெண் சோற்றைக் கண்ட அவர்கள் மகிழ்ச்சி பெரியதா?, உன்னைக் கண்ட என் மகிழ்ச்சி பெரியதா? என்ற முடிவுக்கு வர முடியவில்லை என்பது போல 'இன்பந்தானோ' எனப் பாடி மகிழ்கின்றார் கவிஞர்.

உன்னைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சிதனை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை யாரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந்தானோ?

பாரதிதாசன் - கவிதைத் தொகுப்பு-1, பக்கம் 20.

கவிதை சுவையாக இருக்கிறது என்பதைக் காட்டிலும், அவர் ஒப்புமைக்காக எடுத்துக் கொண்ட காட்சி சிந்தனை அற்றோரையும் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது எனலாம். உழைத்து உழைத்து நித்திய தரித்திரராய் வாழ்வதேன்? அவரவர் உழைப்பு அவரவர்கட்குப் பயன்படாமற் போவதேன்? அவர்கள் வயிறு பசியாறாத வயிறாக இருப்பதேன்? என்ற கேள்விகளை எழுப்புகின்றன. இருபதாம் நூற்றாண்டில் பாடிய கவிஞனுக்கு இருபது நூற்றாண்டுகட்கு முன்பு பாடிய காவலன் ஒருவன் மாற்றம் தருகிறான். ஆம்! பின்னர் ஒரு கேள்வி எழும் என்று முன்னரே ஒரு விளக்கம் எழுதிவிட்டுச் சென்றுள்ளான்.

பச்சைப் பசேல் எனத் தோன்றிய நெல் வயல்கள் விளைந்து விட்டதால் இன்று பொன்னிறமாகத் தோன்றுகின்றன. கதிர்கள் தலை சாய்ந்து வரப்பை அளவளாவிக் கிடக்கின்றன. யாருமில்லா வேளை, எலி ஒன்று சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. விளைந்த கதிர்களை அறுத்துக் கொண்டு சென்று தன் வளையில் செறித்து வைத்துக் கொண்டிருக்கிறது. உழவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த உழைப்பாயிற்றே! அவன் விளைத்ததை நாம் திருடலாமா என்று எலி எண்ணவில்லை. நாம் உழைக்காம

லேயே பிறர் உழைப்பை உண்டு வாழலாமா என்றும் எண்ண வில்லை. நெல் அறுத்து வயல் உழுதால் தன் வளையோடு நெல்லும் போய்விடுமே என்ற எண்ணமும் அதற்கில்லை. பிறர் உழைப் பிலே உண்டு வாழ்வோம் என்ற கருத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்ற எலி போன்ற மனிதர்களும் உலகில் பலர் இருக்கிறார்கள். அவர்களால்தான் உழைப்பவர்கள் தாங்கள் உழைத்த பயனை அடைய முடிவதில்லை. ஆதலின், அத்தகையவர் களை, உடனிருந்தே பிறர் உழைப்பை உண்ணும் நயவஞ்சகர்களை விட்டு விலக வேண்டும்; அவர்கள் கூட்டுறவு ஆகாது என்று அறிவுறுத்துகிறான் அக்காவலன்.

‘விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்
எலிமுயன்று அனைய ராகி உள்ளதம்
வளன்வலி உறுக்கும் உ(ள்)ளம்இ லாளரோடு
இயைந்த கேண்மை இல்லாகி யரோ’ புறம்-190

(விளைபதம்-விளைந்த காலம், வல்சி-உணவுத் தானியம், வளன் வலி உறுக்கும் - தம்மிடம் உள்ளவைகளையும் அனுபவிக்காது இறுகப் பிடிக்கும், இயைந்த கேண்மை - கொண்ட நட்பு).

பின்னர் யார் கூட்டுறவு வேண்டும்? யாருடன் நட்பு கொண்டால் உழைத்தவர்கள் உழைப்பின் பயனைப் பெறமுடியும்? அதற்கும் அவனே விடை கூறுகின்றான். காட்சி மாறுகின்றது. நீண்டு வளர்ந்த நெடிய மரங்கள் அடர்ந்த காடு. விலங்குகளின் முழக்கம் கேட்கிறது. பன்றி ஒன்று தனக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடி ஓடுகின்றது. புலி ஒன்று அதன் மேல் பாய்ந்து வீழ்த்துகின்றது. பாவம் அப்பன்றி; இடப்பக்கமாக வீழ்ந்து உயிர் துறக்கின்றது. தன்னால் அடிக்கப்பெற்ற விலங்கு கீழே விழும்பொழுது வலப்பக்கம் விழாமல் தன் இடப்பக்கம் வீழ்ந்தால் அடித்த புலி எத்துணைப் பசித்திருந்தாலும் அதனை உண்ணாது என்பது பழைய இலக்கிய மரபு. அன்று முழுவதும் பசியால் வருந்திய புலி, மறுநாள் அக்காடே அதிரும்படி முழங்கிச் சென்று ஓர் ஆண் யானையை வலப்புறம் வீழ்த்திப் பசியார உண்டு மகிழ் கின்றது. எஞ்சியவைகளை அங்கேயே விட்டுவிட்டு மீள்கின்றது.

நாளை வேண்டும் என்று எஞ்சிய இறைச்சித் துண்டங்களை இழுத்து வந்து குகையில் சேர்த்து வைக்கவில்லை. தனது ஆற்றல் மீது உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையே அதற்குக் காரண மாகும். புலி விட்டுச் சென்றதைப் பிற விலங்குகள் உண்டு மகிழ்ந் தன. இவ்வாறு புலியைப் போன்று ஆற்றலும் முயற்சியும் தன்னலமின்றிப் பிறரும் வாழவேண்டும் என்ற எண்ணமும் உடைய வர்கள் நாட்டில் பெருக வேண்டும். பிறர் உழைப்பை உண்டு தான் மட்டும் வாழ்ந்து, பிறரை வாழ விடாமல் கெடுக்கின்ற எலிபோல் அல்லாமல், தன் உழைப்பால் தானும் வாழ்ந்து பிறரை யும் வாழவைக்கின்ற புலி போன்ற மக்கள் நாட்டில் பெருகின் பசி பறந்திடும்; உழைப்பவர் உயர்வர்; தரித்திரர் செல்வராவர் என் னும் கருத்தைப் பயிர்த் தொழில் வழிநின்று பாருக்கு உணர்த்து கின்றான் சோழன் நல்லுருத்திரன் என்னும் மாக்கவிஞன். எஞ்சிய பாட்டையும் சுவையுங்கள்:

கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ.

புறம் - *190*

(கடுங்கண் கேழல் - அஞ்சாமையுடைய பன்றி, இடம்பட - இடது பக்கமாக, வழிநாள் - மறுநாள், இருங்களிற்று ஒருத்தல் - ஆண் யானை, வலம் படுக்கும் - வலது பக்கத்தில் வீழ்த்தும், மெலிவில் உள்ளத்து - சோர்வற்ற உள்ளமுடன் கூடிய, உரனுடையாளர்- ஆற்றல் உடையவர், கேண்மை - நட்பு, இயைந்த வைகல்-உடைய நாட்கள், உளவாகியரோ - உண்டாவதாக)

நிலவுக் காட்சியில் தோன்றிய ஐயப்பாட்டை நெல் வயலும் நெடு மரக்காடும் தீர்த்து வைக்கின்றன. பயிர்த் தொழில் கற்றுத்

தரும் அறிவுரையை மேற்கொண்டால் பண்பு வளரும்; பரந்த மனம் தோன்றும் என்பது திண்ணம்.

அது மட்டுமல்ல; உழைப்பின் மூலமே பயன் பெற வேண்டும் என்ற பண்பாடு இன்றைய கால கட்டத்தில் மக்கள் மிகவும் அறிந்து கொள்ளவேண்டிய ஒன்ருக உள்ளது ஏனெனில், புகழ்ச்சி மொழிகளாலும், வாய் வல்லமையாலும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற கருத்து பலரிடையே தோன்றி யுள்ளது. இது மாருன எண்ணம்.

உழைப்பே செல்வம்; உழைப்பினுல் கிடைக்கும் பலனே நிலையானது; இதுவே என்றும் உண்மை 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பது ஆன்ருேர் வாக்கு.

9. கழனியும் காவலனும்

சேரன் செங்குட்டுவன் மாமன்னன். இமயத்தில் புலிக் கொடியைப் பறக்கவிட்டவன். குமரி முதல் இமயம் வரை 'ஒருமொழி' வைத்து உலகாண்டவன்'[1] அறிவும் திறனும் வாய்ந்த அப் பெருமன்னனுக்கு அரசாட்சி செய்வது என்பது பெருந் துன்ப மாக இருந்தது. துன்பம் என்று வாயளவில் கூறி வாளா விருந்து கொண்டே அரச இன்பத்தை அனுபவித்தவன் அல்லன். துன்பத்திற்குரிய காரணங்களைக் கண்டு அத்துன்பங்களைப் போக்க அல்லும் பகலும் நினைந்து செயல்பட்டவன். 'நாட்டில் மழை பெய்யாது வளங்குன்றிப் போமாயினும், அளவுக்கு மிகுதி யாகப் பெய்து உயிர்கட்கும் பயிர்கட்கும் அழிவு நேரினும், அரசனே அதற்குப் பொறுப்பாவான். பசியாலோ, பிணியாலோ உயிர்கட்குத் தொல்லை நேரினும் அரசனே அதற்கும் பொறுப்பாவான். குடிகளை இவ்வகைத் துன்பங்களினின்றும் பாதுகாத்தும், யாருக்கேனும் யாதேனுமொரு தீங்கு நேர்ந்து விடின் மன்னனைக் கொடுங்கோலன் என்று பழிதூற்றி விடுவர் மக்கள். ஆதலின் மக்களைக் காக்கும் மன்னர் குடியில் பிறத்தல் துன்பமே அல்லாமல் பிறர் தொழுது வணங்கும்படியான பெரு மைக்குரியது அல்ல என்று கூறினன் சேரன் செங்குட்டுவன்.

'மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவு உண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்'

சிலம்பு - காட்சி 100-104.

(வான்பேர் - மிகப்பெரிய, குடிபுரவுண்டும் - மக்களைப் பாது காத்தும், மன்பதை - மக்கள், நன்குடி - அரச குடும்பம், தொழுதகவு - வணங்குதற்குரிய பெருமை)

ஏன்? அவ்வளவு துன்பந்தரும் ஆட்சியை விட்டுவிடலாமே எனின், அஃது அவ்வளவு எளிதன்று. இன்றுபோல் குடியாட்சி அல்ல; முடியாட்சிக் காலம் அது; தந்தைக்குப் பின் மகன் ஆளும் பரம்பரை ஆட்சி. ஆதலின் அவர்கள் விட்டாலும் மக்கள் விடுவ தாக இல்லை. நிலைத்த ஆட்சியைப் பெற்றிருந்தும் மக்களைப் பற்றியே சிந்தித்து வேண்டுவன வேண்டும்போது செய்து வந்தனர். மன்னனே மக்களுக்கு உயிர்போன்றவன் என்ற காலத்திலும்[2] மக்களையே உயிராக எண்ணி, செங்குட்டுவன் போன்ற பல அரசர்கள் செங்கோல் செலுத்திய தமிழகத்தில், மக்களை மறந்து ஆட்சி செய்த மன்னர்களும் உண்டு. அவ்வாறு ஆட்சி செய்த மிகச் சிலருள் பாண்டியன் அறிவுடை நம்பியும் ஒருவன்.

மக்கட் செல்வத்தின் பெருமையையும், கல்வியின் இன்றி யமையாமையையும் பாடிய அம்மன்னர் கவிவளவன்,[3] எதிர் பாராதவிதமாகக் கொடுங்கோன்மையை மேற்கொண்டான். மலர் தலும் கூம்பலும் இல்லாத அவனது சமநிலையான அறிவு கூம்பிக் கிடந்தது. அறிவை மறந்ததோடு அல்லாமல் அறிவற்ற செயல் களிலும் ஈடுபடலானான். அதற்குக் காரணமும் உண்டு. தரமற்ற நண்பர்களின் சேர்க்கையும், பண்பாடற்றவர்களின் கூட்டுறவும் அவனுக்கு எப்படியோ வந்து சேர்ந்துவிட்டன. நிலத்தின் தன் மைக்கேற்ப நீரின் நிறமும் சுவையும் மாறுபடுவது போலத் தாம் சேர்ந்த இனத்தின் தன்மைக்கேற்ப அறிவும் செயலும் வேறுபடும் என்னும் வள்ளுவர் வாக்கும் பொய்யாகுமோ?

'நிலத்துஇயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்ப தாகும் அறிவு. குறள். 452

மன்னன் அறிவு திரிந்து அடாத செயல்களில் ஈடுபட்டான். நண்பர்களின் கேளிக்கைக்கும், உறவினர்களின் இன்ப வாழ் விற்கும் பொருள் தேவைப்பட்டது. ஒரு சிலரின் இன்ப வாழ்விற் காகப் பெரும்பாலோர் துன்பம் ஏற்க வேண்டியதாயிற்று. வரி கூடிற்று. அன்பற்ற முறையில் வரியைத் தண்டினான் மன்னன். பொருளே அவனுக்குப் பெரியதாகத் தோன்றியது. மக்களின் நல்

வாழ்வைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. மக்கள் மனம் புழுங்கினர். மக்கள் கொதித்தெழுந்தால் மன்னன் வாழ்வதெங்கே?. நாடு கொந்தளிப்பில் மூழ்கியது.

இந்நிலையைத் தொலைநோக்கில் இருந்து கவனித்து வந்தார் பிசிராந்தையார் என்னும் பெருந்தகையாளர். அரசனுக்கு அறிவு கொளுத்த நினைத்தார். அவன் விரும்பாத அறிவுரையைக் கூறி நாம் ஏன் அவனது வெறுப்பை ஏற்கவேண்டும் என்று எண்ணினர் அல்லர். தீயனவற்றை இடித்துக் கூறும் அறிவும் திறனும் வாய்ப்பும் பெற்றிருந்தும், எடுத்துக் கூறின் அனுபவிக்கின்ற சுகத்தை விட்டுவிட நேரிடும் என அஞ்சி வாளா இருக்கும் சிலர் போல அவர் இருந்தார் அல்லர். அவன் விரும்பினும் விரும்பா விடினும் அவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த வேண்டியது அறிஞர்களின் கடமை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.[4] பிசிராந்தையார் அரண்மனை நோக்கி நடந்தார். எவ்வளவுதான் மனம் மாறி அறிவு திரிந்து இருப்பினும் புலவரை வரவேற்பதில் மன்னன் பண்புடன் நடந்து கொண்டான். மன்னன் விரும்பியபடியெல்லாம் நடந்து வந்த அமைச்சும் மன்னனின் இம்மாற்றத்திற்குக் காரணமான நட்பும் சுற்றமும் சூழ்ந்திருந்தன. அரசனிடம் தனித்துப் பேசவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டார் புலவர்.

வற்றாத வளம் கொழிக்கும் வைகை நதிக்கரையோரம் புலவரும் புரவலரும் நடந்து சென்றனர். விளைந்த நன்செய் நிலங்களெல்லாம் இருவரையும் வரவேற்பது போல் அலைஅலையாய் அசைந்து நிமிர்ந்தன. அங்கு நிகழ்ந்த காட்சி ஒன்று அவர்கள் இருவரின் அமைதியையும் கலைத்துவிட்டது. யானையொன்று நெல்வயல்களில் புகுந்து நெற்கதிர்களைத் தின்று கொண்டிருந்தது. அதன் வாயுள் புகும் கதிர்களைக் காட்டிலும் காலால் மிதிபட்டு வீணாகும் கதிர்களே மிகுதியாக இருந்தன. வயல்கள் பல அழிந்தன. யானைக்கு வயிறு நிறைந்தபாடில்லை. நெடுநேரம் அங்குமிங்கும் அலைந்து திரிந்த யானை, வயல்களை எல்லாம் மிதித்து அழித்து வெளியேறிச் சென்றது.

புலவர் பேசத் தொடங்கினர். "மன்ன! இக்காட்சியைப் பார்த்தாயா? அந்த வயல்களில் இருந்த நெல்லை அறுத்துக் கவளம் கவளமாகக் கொடுத்திருந்தால் சிறு 'மா' அளவுடைய வயல்கூட பல நாட்களுக்குப் போதிய உணவைக் கொடுத்திருக்கும். மாருக, யானை புகுந்து விரும்பியபடியெல்லாம் தின்னுமாயின் நூற்றுக் கணக்கான வயல்கள் கூட ஒருநாள் உணவுக்கும் போதாது. அதுமட்டுமன்று; அது உண்பதைவிட காலால் மிதிபட்டு வீணவதே மிகுதியானதாகும். இதை நேரிலேயே கண்டோம். ஆட்சியும் அப்படித்தான். அரசன் அறநெறியின் வழிநின்று மக்களிடம் வரி கேட்பானயின் விரும்பிக் கொடுப்பர். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போலப் பொருள் வளம் பெருகும்; நாடு நலம் பெறும். நெறியற்ற முறையில் பொருளை விரும்பி மக்களைக் கொடுமைக்கு உள்ளாக்கினல், யானை புகுந்த நிலம் போல பொருள்களும் வீணகும்; மக்களும் மாள்வர். மக்கள் இன்றி மன்னன் எங்கே? சிந்திப்பாயாக" என்று கூறி முடித்தார். என்ன நடந்திருக்கும் என்பதை எழுதவும் வேண்டுமோ?

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகுவது அதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போல
தானும் உண்ணது உலகமும் கெடுமே.

புறம். 184

(காய்நெல்-விளைந்த நெல், மா - மூன்று சென்ட் அளவு, செறு-வயலின் பேரளவு, தமித்து - தனித்து, கோடியாத்து - பொருள்

பெருகி, நந்தும் - செழிக்கும், மெல்லியன் - அறிவற்றவனுகி, வரிசை - தரம், கல்லென் - ஆரவாரமுடைய, பரிவுதப - அன்பு கெட, பிண்டம் நச்சின் - பொருட்களை விரும்பிஞல்)

இவ்வாறு 'வினை நிலங்களைக் காட்டி, அறிவு கொளுத்தி, நாட்டை நல்வழிப்படுத்திய புலவரின் பாடலுக்குத் துணை நின்றது வேளாண்மையன்றோ? நெறி தவறிச் சென்ற மன்னனை நெறிப் படுத்தியது நெல் மணிகள் அன்றோ?

மேற்கோள் விளக்கம்

1. 'குமரியொடு வடஇமயத்து
   ஒருமொழிவைத்து உலகாண்ட
   ....
   மின்தவழும் இமயநெற்றியில்
   விளங்கு வில்புலிகயல் பொறித்த நாள்'
   சிலம்பு. வாழ்த்து. உரைமடை 1. 2., 15. 16
2. புறம், பாடல், 186. வரி. 2.
3. புறம், பாடல்கள், 188, 183
4. கம்பன், அயோத்தி. மந்திரப்படலம். 8
   'தம்உயிர்க்கு இறுதிஎண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும்
   வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று உரைக்கும் வீரர்'

வேலை நடக்கும் பொழுது எளியவர்கள் கரும்புக்காகக் கையேந்துவர். வயலில் வேலை செய்யும் மக்கள் வெட்டும் கரும்புகளில் ஒன்றிரண்டை வேலிக்கு வெளியே இருந்து கேட்கும் அம்மக்கட்குப் போடுவார்கள்.[10] இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த இத்தகு நிகழ்ச்சிகளை இன்றும காணலாம்.

கரும்பை வெட்டுவதற்கு இதுதான் பருவம் என்பது ஒன்று இல்லை. நீர்வளம் இடையறாது இருந்தமையின் எல்லாக் காலத்தும் விளைவிக்கும் பயிராகக் கரும்பு இருந்ததால் ஆண்டு முழுமையும் அறுவடை வேலை ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தது. அறுவடைக்குப் பின்னும் 'அரிகால்' ஆகிய கட்டைகள் வளர்ந்து கரும்பாகும். இதுபோல் ஓரிரு முறை கட்டைகளை வளரவிட்டும் கரும்பைப் பயிர் செய்வார்கள். இவ்வாறு செய்வதில் களைகள் மிகுதியும் தோன்றுமாதலால் அக்களைகளைப் போக்குவதற்குக் கலப்பை கொண்டு உழுவார்கள்.

"காலமன்றியும் கரும்பறுத்து ஒழியாது
அரிகால் அவித்து".
பதிற்றுப்பத்து, பாடல். *30,14*

அறுவடைக்குப்பின் கரும்பு ஆலைக்குக் கொண்டு செல்லப் படும். கரும்பிலிருந்து சாறு பிழிவார்கள். கரும்பின் சாற்றினை மக்கள் விரும்பிக் குடிப்பர். பெண்கள் நுங்கின் நீரையும், கரும்பின் சாற்றையும், தென்னை இளநீரையும் அளவாகக் கலந்து பருகி, மகிழ்ச்சி பொங்கக் கடல் நீராடுவர்.

"இரும்பனைக் குரும்பை நீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும் ஓங்குமணல் குவவுத்தாழை
நீரொடு உடன்விராய்" புறம்-*24*

அக்காலத்தில் உணவு நெறியிலும் வாழ்க்கையைச் சுவைத்து மகிழ்வதிலும் எவ்வளவு நுண்ணுணர்வு உடையவர்களாகத் தமிழர்கள் இருந்தார்கள் என்பதற்கு இஃதோர் சிறந்த எடுத்துக்காட்டாகும். கரும்புச் சாற்றின் சுவையைக் காதலியின் இதழ் சிந்தும் சுவைக்கு ஒப்பிட்டு மகிழ்கின்றார் கவிஞர்.[11]

கரும்பு ஆண்டுப் பயிராக இருந்ததால் நாடெங்கிலும் கரும்பாலைகள் மிக்கிருந்தன. கரும்பாலையின் ஒலி ஊர்தோறும் ஒலித்

துக்கொண்டே இருந்தது. ஆலையில் கரும்புகள் உடைபடும் ஒலி பேரொலியாக இருந்தது.[12] அதிகாலையில் சாற்றைப் பிழிந்து அப் பொழுதே காய்ச்சிப் பதம் கெடாது கட்டி செய்வதில் தமிழர்கள் வல்லவர்களாக இருந்தனர்.

'கரும்பாட்டி கட்டி சிறுகாலைக் கொண்டார்' *நாலடி-35.1*

வெல்லம் காய்ச்சும்பொழுது புகை மிகுதியாகி ஆலையைச் சூழ்ந்து கொள்வதும் உண்டு. இன்னும் சில பகுதிகளில் ஆலைகளில் இருந்து தோன்றும் புகைகள் ஊரையே சூழ்ந்து கொள்ளும். அக்காட்சி குன்றுகளைச் சூழ்ந்த மேகம்போல் தோற்றமளிக்கும்.[13] புகை மிகுதிக்குக் காரணம், கரும்பின் கோது (சக்கை) களையும் தோகைகளையும் ஆலை அடுப்பெரிக்கப் பயன்படுத்தியமையே என்பதை அறியலாம். அன்றியும் காய்ந்துபோன கரும்புகளை மூங்கில்களுக்குப் பதிலாக வீட்டு வரிசல்களுக்கும் பயன்படுத்தி உள்ளனர்.[14] கரும்பின் பசுமையான தோகை கால்நடைகட்குத் தீவனமாகவும் பயன்படுத்தப்பட்டது. கரும்பின் எப்பகுதியையும் வீணாக்காமல் பயன்படுத்திய பண்டைத் தமிழர்களின் பொருள் போற்றி வாழும் பண்பு பாராட்டுக்குரியதாகும்.

கரும்பின் சுவையை மக்கள்தாம் உணர்ந்துள்ளார்கள் என்ப தில்லை. விலங்குகளும் அதன் சுவையை உணர்ந்திருந்தன. பிடி (பெண் யானை) ஒன்று கருவுற்று இருந்தது. அது குட்டி ஈனும் தருணமும் வந்தது. பெண்கள் பேறுகாலத்தில் வலியினால் துன் புறுவது போல அவ்வழகிய யானையும் பேற்று வலியினால் (குட்டி ஈனும் காலத்தில் உண்டாகும் வலியினால் ஏற்படும் துன்பம்) துன் புற்றது. தன் அன்புக்குரிய பிடியின் துன்பத்தைப் போக்க எண் ணிய களிறு (ஆண் யானை) அச்சூழ்நிலையில் நல்ல கரும்புகளைக் கொண்டு வந்து கொடுத்தது. கரும்பின் சுவையில் ஈடுபட்ட பிடி தனது வலியை மறந்து இருந்ததாம். என்னே அறிவு! விலங்கினங் கட்குக் கூட கரும்பின் சுவையில் இவ்வளவு ஈடுபாடு உண்டெனில், மனிதர்கட்குச் சொல்லவா வேண்டும்?

"ஓடுங்கா எழில்வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினை
தீங்கரும்பின் கழை வாங்கும்"

குறிஞ்சிக்கலி-4. 26-29

கரும்பை நட்புக்கு ஒப்பிட்டு மகிழ்கிறது நாலடியார் என்னும் நீதி நூல். கற்றறிந்த நல்லவர்கள் நட்பு கரும்பை நுனியிலிருந்து அடிவரை தின்பதற்கு ஒப்பாகும். கரும்பின் நுனியில் சுவை குறைந்தும் போகப்போக அடிப்பகுதியில் சுவை மிகுந்தும் இருப்பது போலத் தொடக்க காலத்தில் இனிமை சிறிதாகவும் பழகப் பழக இன்பம் மிகுந்தும் காணப்படும். கல்லாத கீழோர் நட்பு கரும்பை அடியிலிருந்து தின்பதற்கு ஒப்பாகும். அடிப்பகுதி சுவை மிகுந்தும் நுனிப்பகுதி சுவை குறைந்தும் இருப்பது போல தீ நட்பு தொடக்கத்தில் சுவை மிகுந்தும் பின்னர் சுவையற்றும் போய்விடும் என்று கூறுகின்றது.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ; என்றும்
மதுர மிலாளர் தொடர்பு.

நாலடியார்-211

கரும்பை நசுக்கிச் சாறுபிழிவது போல் கயவர்களைக் கசக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் என்பார் திருவள்ளுவர்.[15]

இத்தகைய இலக்கியச் சிறப்பு வாய்ந்த கரும்பில் இன்று பலவிதமான ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அவ்வாராய்ச்சிகள் வாழ்வை வளப்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனினும் இவ்வாராய்ச்சியால் விளையும் பயன்களை அனுபவிக்கின்ற அப்பொழுதுதான் இனிமையாக இருக்கும்; இன்பம் தருவதாக அமையும். ஆனல் இலக்கியக் கரும்போ என்றென்றும் இனிப்பதாகும். நினைக்கும்தோறும் நெஞ்ச மெல்லாம் இனிக்கச் செய்யும் பெற்றி வாய்ந்ததாகும்,

மேற்கோள் விளக்கம்

1. 'A thing of beauty is a joy for ever' - Keats
2. பேராசிரியர். பாலகிருட்டிணன், கரும்பு, பக்கம். 29
3. கலைக் களஞ்சியம், தொகுதி 3, பக்கம். 265
4. பட்டினப்பாலை, வரி. 9
5. புறநானூறு, பாடல். 16
6. அகநானூறு, பாடல். 116

7. பட்டினப்பாலை, வரி. 242
8. புறநானூறு, பாடல். 35, அகநானூறு, பாடல். 235
9. அகநானூறு, பாடல். 306
10. புறநானூறு, பாடல். 28
11. குறுந்தொகை, பாடல். 267

    'கரும்பின்
    கால்எறி கடிகைக் கண்ணயின் றன்ன
    வால்எயிறு ஊறிய வசையில் தீநீர்'

12. புறநானூறு, பாடல். 322
13. சிலம்பு, புகார்க்காண்டம் 10. 152
14. புறநானூறு, பாடல். 22
15. திருக்குறள். 1078

    சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
    கொல்லப் பயன்படும் கீழ்.

11. கரும்பும் காதலும்

நாணம் என்னும் சொல் பெரும்பாலும் இரண்டு பொருள்களில் வழங்கி வருகின்றது. "அவள் ஆண்களிடத்தில் பேசுவதே மிகவும் அரிது; தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பேச நேர்ந்தாலும் தலை குனிந்து நின்று, கேட்ட கேள்விகளுக்கு மட்டும் அமைதியாகப் பதில் கூறி விட்டுச் சென்றுவிடுவாள்; அப்படிப்பட்டவள் அவள்" என்றால், அந்தப் பெண் மிகவும் நாணமுடையவள் என்பது பொருள். ஒரு ஆண்மகனை எதிர்பாராத வகையில் பெண்ணொருத்தி சந்திக்க நேரிடின், அவள் அவனைக் காண வெட்கப் பட்டுத் தனது கைகளால் முகத்தை மறைத்துக் கொள்ளுதல் பண்டை நாளில் மகளிரிடையே காணும் பெரு வழக்கமாகும். இன்றும் நகர நாகரிகம் எட்டாத சிற்றூர்களில் இப்பழக்கத்தைக் காணலாம். இது நாணத்திற்கோர் எடுத்துக்காட்டு.

பெண்கட்குரிய அச்சம் (அஞ்சத் தகுந்தவைகட்கு அஞ்சி நடத்தல்), நாணம் (பழகாதவர் முன்னிலையில் வெட்கப்படுதல்), மடம் (அறிந்தும் அறியாதவள் போலத் தோற்றமளித்தல்) பயிர்ப்பு (பண்புடன் பழகுந்தன்மை) ஆகிய பண்புகள் நான்கினுள்,[1] நாணம் மிகவும் இன்றியமையாததாகும். இந்நான்கு பண்புகளும் நான்கு படைக் கருவிகளாக இருந்து பெண்களைக் காக்கின்றன என்பது அறிஞர்களின் கருத்து.[2] இவை மூடப் பழக்கங்கள் என்று உடைத்தெறிந்து விட்டதால் இன்று பெண்ணினம் பெண்மைக்குரிய பெருமையை இழந்து விட்டது என்பது உண்மை. ஆதலின் பெண்கள் ஆண்களோடு பேசவும் பழகவும்

கூசி வெட்கப்பட்டுத் தனித்து நிற்கின்ற ஒரு தன்மைக்கு நாணம் என்பது பெயர். இது ஒரு பொருள். எனினும் மேலோட்டமான பொருளே.

அவன் மிகுந்த நாணம் உடையவன் என்றால், பழி பாவங்கட்கு அஞ்சுகிறவன்; தீயன செய்யாத சீர்மையன் என்பது பொருள். நாணுடைமையே சான்றோர்க்கு அழகைத்தருவது; அஃதின்றிப் பழிபாவங்கள் செய்து சான்றோர் எனப் பீடு நடை போட்டுச் செல்வார்களாயின் அப்பெருமித நடை அவர்களுக்கு இழிவையே தரும் என அறுதியிட்டுக் கூறுகின்றார் வள்ளுவர்.

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. *குறள்-1014.*

இது மற்றொரு பொருள். இவ்வாறு நாணம் பெண்களோடு சேர்கின்றபோது வெட்கம் என்ற பண்பையும், ஆண்களோடு சேர்கின்றபோது பழி பாவங்கட்கு அஞ்சுகிற செயல் தன்மையையும் உணர்த்துகின்றது. பொதுவாக நாணம் என்பது மான உணர்வோடு தொடர்புடையது. இச் சொல்லுக்கு 'மான உணர்வு' (தன்மான உணர்வு) என்பதே உயரிய பொருளாகும்.

இந்த நாணத்திற்கு ஒரு சோதனை ஏற்பட்டது. கரும்புத் தோட்டம். நன்றாகச் செழித்து வளர்ந்துள்ளன, கரும்புகள். ஒரு தலைவியும் அவளது தோழியும் கரும்புத் தோட்டத்தில் தோகை கழித்துக்கொண்டே உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள். நான்கைந்து நாட்களுக்கு முன் பெய்த மழையால் கரும்பங்காட்டில் மழை நீர் புகுந்து கரும்புக்கு அணைத்திருந்த கரைகளை எல்லாம் அரித்துக் கொண்டு போய்விட்டது. கரைகளே இல்லாமல் கரும்புத் தோட்டத்தையே சமதரையாக்கி விட்டது மழை வெள்ளம். கரையின்றிக் கரும்புகள் நிற்கின்ற காட்சி தலைவியின் உள்ளத்தில் ஒருவிதமான உணர்வை ஏற்படுத்தியது.

ஆம்; அவள் தன் தலைவனோடு பழகிய இனிய நாட்களை நினைந்தாள். அவன் வரவாலும் போக்காலும் அவள் மகிழ்ந்த மகிழ்ச்சியைப் பலமுறை எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். இந்தக் கரும்பு பயிரிடும்போதுதான் அவள் அவனைச் சந்திக்க நேர்ந்தது.

உக்காங்கு-கரைந்ததுபோல, காமம்-காதல், நெரிதர-நெருக்க, கைந்நில்லாதே-நிற்காமல் தோற்றுப் போய் விட்டது)

கரும்புத் தோட்டத்தை வைத்தே வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு படிப்பினையை நல்கி விட்டார் கவிஞர்.

மேற்கோள் விளக்கம்

1. இறையனார் களவியல், கழக வெளியீடு, சென்னை, 1969, பக்கம். 34
2. நளவெண்பா, பாடல். 20, 'நாற்குணமும் நாற்படையா'
3. பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, மாந்தோப்பில் மணம், 9
4. குறுந்தொகை, பாடல். 3

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

12. வருமுன் காப்போம்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்' குறள் - 435.

என்பது வள்ளுவம். நமக்கு வருகின்ற நன்மை, தீமைகளை அனுபவத்திலும் தீர எண்ணுவதிலும் ஆய்ந்தறிந்து அதற்குத்தக நம் வாழ்விற்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டும். இல்லை எனில் நெருப்பின் அருகில் இருக்கும் வைக்கோல் போர் போல எதிர்பாராதவை ஏற்பட்டு வாழ்வு விரைவில் அழிந்து விடும் என்பது இதன் பொருள். வருமுன்னர்க் காத்துக்கொள்வதே அறிவுடையார் செயல். மழை பெய்தற்குரிய அறிகுறிகள் தோன்றிய பொழுதே மனிதன் தான் நனையாவண்ணம் பாதுகாத்துக்கொள்கிறான். உழவன் தன் வயலில் மழை நீர் தேங்கட்டும் என்று மடைகளை உயர்த்திக் கட்டி வைக்கின்றான். களத்தில் வேலை செய்வோர் துரிதமாகப் பணியாற்றித் தானியமணிகள் நனைந்துவிடா வண்ணம் மூட்டைகளாகக் கட்டி எடுத்துச் சென்று விடுகின்றனர். ஆனால், கால்நடைகள், விலங்குகள், பறவைகள் முதலியன மழைத்துளி உடம்பில் பட்டபிறகுதான் மழைபெய்வதை அறிந்து பாதுகாப்புத் தேடுகின்றன. அவற்றிற்கு மக்களைப் போல என்ன நிகழும் என்பதை முன்கூட்டியே அறியும் அறிவு இல்லை. ஆதலில் மனித இனத்திற்கே சிறப்பாக உள்ள இவ் 'வருமுன் காக்கும் பண்பு' பயிர்த் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பயிர்கட்கு வரும் கெடுதல்களை இரண்டு வகையாகப் பிரிப்பர் அறிஞர். ஒன்று இயற்கையால் வரும் கேடு. மற்றொன்று செயற்கையால் வரும் கேடு. மழையின்மை, மிகுதியாகப் பெய்தல்,

அளவிற்கும் விஞ்சிய காற்று, வெப்பம் முதலியன இயற்கைக் கேடுகளாகும். விலங்குகளால், கால்நடைகளால், பறவைகளால், பூச்சிகளால் வருகின்றவை செயற்கையானவை. இவ்விருவகையாலும் வருகின்ற கேட்டினை அறிந்து பயிர்களைக் காத்துக் கொள்ளின் தள்ளாவிளையுள் உண்டாகும்; தாழ்விலாச் செல்வம் பெருகும். இல்லை எனின் வளங்குன்றி நாடு வறுமை எய்தும்.

•

உழவன் ஒருவன் தன் தோட்டத்தில் எள் பயிரிட்டான். அப் பயிர் விளையுங்காலத்தில் கடுமையான மழை பெய்ததால் காய்களில் உள்ள எள் உருகிப் பதனழிந்து போய்விட்டது. வெறும் தோடு மட்டும் உள்ள 'பொக்குக்காய்' ஆகிவிட்டன. அக்காலம் கார்காலம். ஆதலின் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வுழவனுடைய வீட்டில் எருமை ஒன்று உண்டு. அதற்கெனத் தனிக்கட்டுத்தறி இருந்தாயினும் அது வெட்டவெளியாக இருந்தது. மழையில் நனையாமல் இருக்கக் கொட்டகையோ, பந்தலோ இல்லை. அன்று அடைமழை; காலை முதலே பெய்து கொண்டிருந்தது. எருமைக்கு மழையில் நனைவது இதமாக இருக்குமெனினும், நெடுநேரம் மழையில் நனைந்துவிட்டதால் கட்டுத்தறியைச் சுற்றிச் சுற்றி வந்தது. அதனால் அவ்விடம் முழுமையும் மிதிபட்டுச் சேருகிவிட்டது.

நடு யாமம். மழை 'சோ' வென்று பெய்துகொண்டிருந்தது. குளிர் தாள முடியாது எருமை கத்தத் தொடங்கிவிட்டது. அவ் வீட்டில் இருந்த மங்கை நல்லாளுக்கும் உறக்கம் வரவில்லை. நினைவுகள் அலைமோதப் படுக்கையில் கிடந்தாள். காலக் கணக்கர் வானிலுள்ள கோள்களின் இயக்கத்தைக் கொண்டு காலத்தைக் கணக்கிடுவார்கள். அதுபோல் இப்பெண் மகள் ஒவ்வொரு நொடியாகக் கழிக்க முடியாமல் கழிக்கின்றாள். தலைவனை எதிர்பார்த்த அவளால், தனிமை பொறுக்க முடியவில்லை. தன் தோழியிடம் கூறித் தனது வருத்தத்தை ஆற்றிக் கொள்கின்றாள்.

பழமழை பொழிந்தெனப் பதனழிந்து உருகிய
சிதட்டுக்காய் எள்ளின் சில்பெயல் கடைநாள்
சேற்றுநிலை முனைஇச் செங்கண் காரான்
நள்ளென் யாமத்து ஐயெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும் என்கண்
துஞ்சா வாழி! தோழி காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
நெஞ்புண் ணுற்ற விழுமத் தானே.

குறுந்தொகை - 261.

(சிதட்டுக்காய் - பொக்கான காய், முனைஇ - வெறுத்து, காரான் - எருமை, விழுமம் - துன்பம்).

பாடலில் நிகழ்ச்சிகள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன என்று எண்ணத் தோன்றினாலும், அவைகள் ஆழ்ந்த பொருளோடு பின்னப்பட்டுள்ளன என்பது கூர்ந்து நோக்கின் புலனாகும். மழை பெய்தலைத் தடுக்க முடியாது என்பது உண்மை, எனினும், எள்ளை உரிய பருவத்தில் பயிரிட்டு இருந்தால் கார்கால மழையில் அகப்படாதவாறு காப்பாற்றி இருக்கலாம். காலமோ வழக்கமாக மழைபெய்யும் கார்காலம். இதனை உழவன் அறிந்து அதற்கேற்பச் சற்று முன்னர் பயிரிட்டிருத்தல் வேண்டும் என்ற குறிப்பைப் பயிர்த்தொழிலுக்கு வழங்கி அதன் வழி அரிய பண்பாட்டையும் உணர்த்துகிறது இப்பாடல்.

உழவன் வீட்டுப் பெண்மகள் இப்பொழுது சிதட்டுக்காய் போல் உள்ளம் உருகி இருக்கின்றாள். அன்பு மழையால் தாக்கப்பட்டு விட்டாள். எள்ளை இனி ஒன்றும் செய்ய முடியாது. தோட்டப் பயிர் போய்விட்டது என்றாலும் வீட்டுப் பயிரையாவது காக்க வேண்டுமன்றோ? இனி, தலைவி மேலும் மனம் நெகிழாதவாறு உரிய காலத்தில் மணம் முடித்துக்கொடுத்துவிடல் வேண்டும்; இது பெற்றோர்கள் கடமை என்பதைப் பதன் அழிந்து உருகிய சிதட்டுக்காய் எள் குறிக்கிறது என்பது ஒன்று.

எருமை கட்டுத்தறியை மிதித்து மிதித்துச் சேறாக்கிப் பின் அவ்விடத்தில் நிற்பதையும் வெறுத்துக் குளிர் தாங்கமுடியாமல்

கத்துகின்றது. அது நனையாதவாறு அதற்கொரு பாதுகாப்புச் செய்யப்பட்டிருப்பின் அது கத்துகின்ற நிலையும் ஏற்பட்டிராது; கட்டுத்தறியும் சேருகி இராது. அதுபோல் தலைவி வருமுன் காக்கப்பட்டிருப்பாளாயின், அவள் தான் பிறந்த குடும்பத்தை வெறுக்கும் நிலையும் ஏற்பட்டிராது:, ஊரார் அவர்கள் குடும் பத்தைப் பற்றிப் பேசிக் குழப்பியிருக்கும் வாய்ப்பும் உண்டாகி யிருக்காது என்பது மற்றொன்று. இவ்வரிய உண்மைகளை எளிய நிகழ்ச்சிகள் கொண்டு குறிப்பிக்கும் திறன் போற்றுதற்குரிய தாகும்.

இவ்வாறு இயற்கையே யன்றிச் செயற்கையாலும் பயிர் கட்குக் கெடுதி நேர்வது உண்டு. பறவைகளால், கால்நடை களால், விலங்குகளால், ஏன் மனிதரால் பயிர்கட்கு அழிவு நேர் வதும் உண்டு. எருமை ஒன்று கயிற்றை அறுத்துக்கொண்டு சென்று நெற்கதிர்களை மேய்ந்து விட்டது. அத்தகைய ஊரை உடைய தலைவன் எனக்குப் பெருந்துன்பம் விளைத்து விட்டான் என்பது ஐங்குறு நூற்றில் ஒரு பாடல்.

கருங்கோட்டு எருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனல்முற்று ஊரன் பகலும்
படர்மலி அருநோய் செய்தனன் எமக்கே.

ஐங்குறுநூறு - 95.

இப்பாடலும் உள்ளுறையாக ஒரு பண்பாட்டை உணர்த்தி நிற்கின்றது. எருமை, உழவன் இட்ட தீனியை உண்டு அமைய வேண்டும். அதை விடுத்துக் கயிற்றை அறுத்துக்கொண்டு நெற் கதிர்களை மேய்வது முரண்பட்ட செயலாகும். அன்றியும், கயிற்றை அறுத்துக்கொண்டு செல்லும் அளவிற்கு விட்டு விடுவது உழவனின் கவனக்குறைவையும் காட்டுவதாக உள்ளது. எருமையைத் தலைவ னாகவும் உழவனைத் தலைவியாகவும் கொண்டு வாழ்வியல் பண்பை விளக்குகிறார் கவிஞர்.

தலைவியிடம் இன்பங்கண்டு மகிழ்வதே தலைவனின் குறிக்கோள். அதைவிடுத்து வெளியில் சென்று அலைவது தவறான பண்பாகும். அவன் அவ்வாறு செல்கிறான் எனின் அவனை அன்பால் பிணைக்கும் ஆற்றல் தலைவிக்கு இல்லை என்பதும் ஓர்

குறிப்பு. ஆதலின், உழவன் பயிருக்குத் தீங்குவராமல் எருமையை நன்ருகக் கட்டிவைத்து வயிருரத் தீனியிட வேண்டுவது போலப் பெண்கள் தம் கணவன்மாரை அன்பால் பிணைத்து நிறைவிக்க வேண்டுவது இன்றியமையாக் கடமையாகும். இல்லையெனில் வாழ்வு எருமை மேய்ந்த பயிர்போலாகி விடும்.

இவ்வாறு பயிர்கள் அழியா வண்ணம் காக்க வேலிபோட வேண்டும். கயிற்றை அறுத்துக்கொண்டு கால்நடைகள் சென்ருலும் வேலி இருந்திருப்பின் பயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும். பெரியவர்கள், தாங்கள் பெரியவர்களாக விளங்கவும், தங்களிடம் பழிபாவங்கள் புகாவண்ணம் இருக்கவும் "நாணம்" என்னும் பண்பை வேலியாகக் கொண்டிருந்தனர். அவ்வேலியே அவர்தம் உயர் பண்பாம் பயிர்களைக் காத்தன. அத்தகைய பெரியோர் அவ் வேலியைப் போற்றுவாரேயன்றி அஃதழிய உலகமே கிடைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று வள்ளுவம் கூறுகின்றது.

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். குறள் - *1016.*

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வேலியுண்டு. அதுபோல் உலகம் இன்புற்று விளங்க அறம் வேலியாக அமைய வேண்டும். கம்பன் அவ் வேலியை விளக்கும் காட்சி உலகவர் அறிந்து போற்ற வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். தயரத மன்னன் மகன் இராமன் வீரஞ்செறிந்தவன். அறம் நிலைபெறத் தன் வாழ்வை அவ்வழியில் செலுத்தியவன். அவன் வாலியை மறைந்திருந்து கொன்றுவிடுகின்ருன். இறக்கும் தருவாயில், தன் மீது அம்பு எய்தவன் இராமனே என்பதை அறிந்த வாலி சினந்து பேசுகின்ருன்.

இராமன் அறநூல்களைக் கற்றவன். வசிட்டனின் மாணவன். ஆனல், அவனது இச் செயல் "அற நூல்களைக் கற்றவன் தானு, இராமன்?" என்ற ஐயப்பாட்டை உண்டாக்கிவிட்டது. இராமனது முந்தையோர் அனைவரும் மிகவும் நல்லவர்கள். நன்மையன்றிப் பிறிதொன்றையும் அறியாத ஒழுக்கம் நிறைந்தவர்கள். இயல்பான பண்புகளிலிருந்து சிறிதும் மாருதவர்கள். அம் மாண்பிற்குரிய மரபில் வந்தவன் இராமன். அறத்திற்கு நாயகனுக விளங்க வேண்டியவன். ஆனல், அவனே தன்னைக் கொல்ல முனைந்ததால்,

மறைந்திருந்து அம்பு எய்ததால் அறமாகிய வேலியை அழித்து விட்டான். வேலியே பயிரை மேய்ந்தால்? அதுபோல், அரசனே அறத்தை அழித்தால் குடிகளின் நிலை என்னாகும்? வேலியில்லா விளைநிலத்தில் கண்டவை புகுந்து பயிர்களை அழிக்கும். அறம் காவா மாநிலத்தில் தீமைகள் புகுந்து குடிகளை வருத்தும். இராமன் இத்தகைய அறத்திற்கும் புறம்பான செயலில் இறங்கிய தற்கு இரங்கியதாக, வாலி பேசுகின்ற பேச்சில் வைத்துக் கம்பர் பாடுகின்றார்.

நூல்இயற் கையும் நுங்குலத்து உந்தையர்
போல்இயற் கையும் சீலமும் போற்றிலை
வாலியைப் படுத்தாய் அல்லை மன்அற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே.

கம்பன் - கிட்கிந்தை - வாலி 95.

முள்வேலிகள் பயிர்களைக் காப்பது போல அறவேலிகள் உயிர்களைக் காக்கின்றன. வாழும் மனிதன் ஒருநாள் இறத்தல் உறுதி. உயிரும், உடம்பும் பிரிதல் இயற்கை. அதை உணர்ந்து நம்மிடம் உள்ள குற்றம் குறைகள் முதலியவற்றைப் போக்கி நற் செயல் செய்து வாழவேண்டும். நெற்பயிர் விளைக்கும் உழவன் நெல்லோடு வளரும் களையைக் களைந்து விடுகின்றான். இன்றேல் விளைவு குன்றிவிடும். அதுபோல் இயற்கையாலும்செயற்கையாலும் பயிருக்கு வரும் தீமையையும் வருமுன் காத்தல் வேண்டும். அதற்கு வேலி ஒரு கருவி. அவ்வேலி தனி மனிதப் பயிருக்கு நாணமாகவும், மக்கட் சமுதாயமாம் பயிர்களுக்கு அறமாகவும் அமைந்துள்ளது. நாணமும், அறமும் போற்றப்பட்டால் நாடு நலம் பெறும்; எல்லோர்க்கும் எல்லாம் என்ற நிலை வந்தெய்தும்.

13. ஓரறிவுயிர்கள்

காடுகளில் உள்ள மரங்களை வெட்டி நிலங்களைத் திருத்திப் பயிரிட்டது ஒருகாலம். பல்லாண்டுகளாக அச் செயலையே தொடர்ந்து செய்துவந்ததால் இன்று காடுகள் எல்லாம் அழிந்து போயின. மரங்களெல்லாம் வெட்டப்பட்டு விட்டன. ஒரு நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பர் காட்டியல் அறிஞர். ஆனல் நம் நாட்டில் 17 சதமே காடுகள் உள்ளன. அவற்றிலும் மரங்கள் குறைவு. மழையைக் கூட்டுவிக்கும் மரங்கள் இன்மையால் மழை வளமும் குன்றிப் போய்விட்டது. அதனல் இன்று காடுகளைப் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மரம் நடு விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. எதை எதை, எவ்வெப்பொழுது, எந்தெந்த அளவில் செய்ய வேண்டுமோ அதையதை, அவ்வெப்பொழுது, தேவைக்குரிய அளவில் செய்யவேண்டும். முறை மாறிச் செய்வதால் நன்மையும் தீமையாக முடிந்து விடுகின்றது. இதனை உணர்த்தவே வள்ளுவர்,

> **செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க**
> **செய்யாமை யானும் கெடும்.** குறள் - *466*

எனச் செயல்களின் நன்மை தீமைகள் பற்றிக் கூறியுள்ளார்.

காடுகளை அழிக்கும் செயலை ஓர் அளவோடு நிறுத்திக் கொண்டிருந்தால் இன்று மழை வளம் குன்றியிராது; நாட்டில் "பஞ்சமோ பஞ்சமென்று பரிதவித்துத் துடிக்கின்ற நிலை" ஏற்பட்டிராது. நிலமிருந்தும் நீர் இன்றேல் என்ன பயன்? ஆதலின் இன்று மரங்கள் நடுகிருர்கள். கண் கெட்டபின் ஞாயிறு வணக்கம்.

மரங்கள் வாழ்வின் வளத்திற்குத் துணையாவதுடன் வாழ்வியல் பண்பாடுகளையும் உணர்த்துகின்றன என்பதை இலக்கியங்களின் வழியாக அறியலாம். நாட்டிற்கு மரங்கள் இன்றியமையாதன என்றுணர்ந்த கம்பர் தமது காவியத்தில் மரம் வளர்க்கப் பாடுகின்றார். அம்மரங்கள் வளர்க்கும் வகையில் மக்களுக்குப் பண்பாட்டையும் உணர்த்துகின்றார். மரங்கள் வளர்க்க விதைகள் ஊன்ற வேண்டும். பின்னர் அவை வளர்ந்து நாட்டைச் செழிக்கச் செய்வது போல மக்களிடையே நாகரிகம் வளர்ந்து பண்பாடு செழிக்க வேண்டிக் 'கல்வி' என்ற விதையை ஊன்றுகின்றார் கம்பர். அவ்விதை முளைக்கின்றது. மானிட வாழ்விற்குக் கல்வி ஒன்று மட்டும் போதாது; ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள்; அனுபவ அறிவும் வேண்டும். அதனை நேரிடையாகப் பெறுவதே சிறப்பு. முடியாத பொழுது பெரியார் வாயிலாகக் கேள்வியாம் செல்வத்தைப் பெறல்வேண்டும்.

கல்வி எனும் விதை முளைத்துக் கேள்வி எனும் தளிர்விடுகின்றது. நீரும் எருவும் இட இட அம்மரம் நாளும் வளர்கின்றது. இலை தழைகள் நிறைகின்றன. கல்வியும் கேள்வியும் நிரம்பியவர்கள் அவ்வறிவினால் உந்தப்பட்டு நல்ல முயற்சி உடையவர்களாக விளங்குவார்கள். முயற்சியால் வளம் பல பெறுவார்கள். அதைப் போல விதை முளைத்துத் தளிர்விட்டுக் கோடுகள், கவடுகள் பெருகித் தழைத்துக் குலுங்குகின்றது மரம். இலைகள் போர்த்துப் பசுமையாக நிற்கின்றது. மனிதன் தான்மட்டும் வளர்ந்து வாழ்ந்தால் போதாது. அது தன்னல வாழ்வாக, பொருள் மட்டுமே சேர்க்கும் வாழ்வாக ஆகிவிடும். அவ்வாழ்வு உள்ளீடற்ற வாழ்வே. அதனால், மனிதன் உள்ளத்தில் தன்னலம் மறைந்து அன்பு வளர வேண்டும். அன்புதான் உலகை ஆளும் தன்மையுடையது. 'அன்பின் வழியது உயிர் நிலை' என்பது வள்ளுவம். அன்பு எனும் பிடிக்குள் மலையையும் அடக்கி விடலாம் என்பார் வள்ளலார். மரம் பருவம் வந்ததும் அரும்பத் தொடங்குகின்றது. அன்பு எனும் அரும்புகள் அரும்புகின்றன.

அன்பு எனும் பண்பு மட்டும் உள்ளத்தில் இருந்தால் போதாது; அவ்வன்பு செயல்பட வேண்டும். அன்பின் செயல்பாடு பிறர்க்கு உதவுவதே. தன் முயற்சியால் வந்த பொருளைத் தக்கார்க்கும் வறியார்க்கும் வழங்க வேண்டும். அன்பு அறமாகிச் செயல்பட வேண்டும். அன்பாகிய அரும்பு அறமாக மலர்கின்றது. மலர்

என்றும் மலராக இருப்பதில்லை. அது பருவம் வரக் காயாகிக் கனியும். இம்மரமும் அதற்கு விதி விலக்கு அன்று. காய்கள் கனி கின்றன. அக்கனிக்கு 'இன்பக் கனி' என்பது பெயர். போகம் எனும் கனி பழுத்துக் குலுங்குகின்றது. விதை முளைத்து, வளர்ந்து, தழைத்து, அரும்பி, மலர்ந்து, காய்த்து, கனியாகி விளங்குவது போல மனிதனும் வாழ்வில் கற்று, கேட்டு, உழைத்து, பெற்று அன்பு பூண்டு, அறஞ்செய்து வாழ்வை இன்பமானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதைக் கம்பர் அழகுபடக் கூறுகின்றார்.

ஏகம் முதல்கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதல்திண் பணைபோக்கி அருந்த வத்தின்
சாகம் தழைத்து அன்புஅரும்பித் தருமம் மலர்ந்து
போகக் கனியொன்று பழுத்தது போலு மன்றே

கம்ப - பால - நகர் - 75

மனிதர்க்குப் பண்புகள் கூறச் சிலர் பயிர்களைக் காட்டாக் கினர். பயிர்களைக் காட்டாக்கியதன் நோக்கம், இந்தப் பருவத்தில் இப்பண்பு வளரவில்லை என்றாலும் அடுத்த பருவத்தி லாவது பார்ப்போம் என்ற நம்பிக்கை காரணமாக இருந்திருக்க லாம். ஆனால் கம்பர் பயிர்களைக் கூறாது மரத்தைக் கூறியதில் ஓர் நுண்மை உண்டு. பயிர்கள் பருவம் முடிந்ததும் அறுவடை செய்யப்படுகின்றன. ஆனால் மரமோ மனிதனைப் போல நெடிது நாள் வாழ்க்கை உடையது. ஒருமுறை பழுத்ததோடு அதன் வாழ்வு முடிந்து விடுவதில்லை. பல ஆண்டுகள், பலமுறை பழுத்துப் பயன் தருவது. ஆகையால் மனிதனும் ஏதோ ஒரு முறை அன்பு கொண்டு அறம் செய்தால் மட்டும் போதாது. வாழ்வு முடியும் வரை கற்றும் கேட்டும் அன்புற்றும் அறஞ் செய்தும் வாழ வேண்டும் என்னும் கருத்தில் பயிர்களை விடுத்து மரத்தைக் காட்டாகக் கொண்டார் எனக் கருதலாம்.

வாழ்வில் ஒவ்வொரு பொருளும் ஏதேனும் ஒருவகையில் பண்பாட்டை உணர்த்திக்கொண்டே இருக்கின்றது. அவற்றை வாழ்வில் கடைப்பிடிக்கின்றவர்கள் உயர்கிறார்கள். கைக்கொள் ளாதவர்கள் தாழ்கிறார்கள். இது மரந்தானே என்று எண்ணாமல், எள்ளாமல் அதனையும் ஓர் உயிராகக் கொண்டால், அதனை வளர்க்கவும் அதனால் பயனும் பண்பாடும் பெறவும் வாய்ப்புகள் உண்டு. மரங்கள் தனி மனிதனுக்கன்றி நாட்டிற்கும் உலகிற்கும்

வளர்ந்து பயன் தருபவை; காய்த்தும் கனிந்தும் பயன் தருபவை; ஏன்! காய்ந்தும் பயன் தருபவை. மனிதனைவிட இவ்வகையில் இவை மேலானவை. அதனால் அன்றோ மரங்களைக் கற்பகத் தரு என்று கூறுகின்றனர்.

இந்நுட்பத்தை உணர்ந்த பண்டைய மன்னர்கள் மரங்களைச் சிறப்பாகப் போற்றி வளர்த்தனர். ஒவ்வொரு மன்னனும் தனக் கென ஒரு மரம் வளர்த்தான். அதற்குக் காவல் மரம் என்று பெயர்கூறுவர். அதனைத் தம் உயிரினும் மேலாகப் போற்றி வளர்த் தனர். அன்றியும் அக் காவல் மரத்தைத் தங்கள் வீரத்தின் சின்னமாகவும் கருதினர். பகையரசன் அம்மரத்தை வெட்டி விடு வானாயின், மரம் வளர்த்த மன்னன் தோற்றுப்போய் விட்டதாகப் பொருள். ஆதலின் அதற்குப் பழுது நேரா வண்ணம் பெரும் பாதுகாப்பும் அதன் வளர்ச்சிக்குப் பெரும் கவனமும் செலுத்தப் பட்டது. அரசன் எவ்வழி, அவ்வழி அன்றோ குடிகள்! அரசனைப் போலவே மக்களும் தங்கட்கு விருப்பமான பயன் தரும் மரங்களை வளர்த்தனர். ஆலும் வேம்பும் நிழல் தந்தன. தென்னையும் பனையும் நீர் தந்தன. மாவும் பலாவும் கனி தந்தன. இவற்றின் பெருமையை, “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே” எனப் பாடி மகிழ்ந்தார் வள்ளலார். பெற்றோர்கள் செய்வதை அப்படியே பின்பற்றுவது பிள்ளைகள் இயல்பன்றோ!

காவியத் தலைவி ஒருத்தி மரம் வளர்த்த கதை ஒன்று சுவை யாக உள்ளது. வளமான குடும்பத்தில் பிறந்த அவள் சிறுமியாக இருந்த பொழுது அவளை ஒத்த சிறுமிகளுடன் ஒன்றுசேர்ந்து அவள் வீட்டிற்கு அருகிலுள்ள மணல் வெளியில் விளையாடுவது வழக்கம். சிறுமிகள் எல்லோரும் சேர்ந்து ஒருநாள் விளையாட்டோடு விளை யாட்டாகத் தாங்கள் மணலில் புதைத்து வைத்த புன்னை விதையை மறந்து போனார்கள். நாட்கள் சில கழிந்தன. புன்னை விதை முளைத்து வெளி வந்தது. தாங்கள் விளையாடும் போது மறந்து விட்டிருந்த விதையை அதன் முளைக்குருத்து நினைவூட்டியது. அச் சிறு செடியைக் கண்ட சிறுமிகள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அதைப் பேணி வளர்ப்பாராயினர். அப்புன்னைச் செடியின் மீது அளவு கடந்த அன்பு செலுத்தினர். சிற்சில சம யங்களில் தண்ணீருக்குப் பதிலாகத் தாங்கள் உண்ணும் பாலையும் நெய்யையும் கூட அதற்கு ஊற்றி வளர்த்தனர்.

புன்னை வளர்ந்தது. அவ்வீட்டுப் பெண் மகளும் வளர்ந்தாள். பருவ எழில் குலுங்கும் பருவ மலரானாள். மலரை நாடி வண்டுகள் வருவது இயல் பன்றோ? காளை ஒருவன் களி வண்டானான். கன்னியும் காளையும் அன்பு கொண்டனர். அடிக்கடி சந்தித்தனர். ஒருநாள் தலைவி யைச் சந்திக்க இயலவில்லை அத்தலைவனுக்கு. எப்படியும் சந் தித்தே தீருவது எனத் தலைவன் அவள் வீட்டுப் புன்னைமர நிழலில் ஒதுங்கி இருந்தான். தலைவி தலைவனிடம் வந்தாள். புன்னையை அவள் மரம் என்று கருதவில்லை. தன்னைப் போல ஓர் உயிராக, அதுவும் ஒரு பெண்ணாகவே கருதினாள். அவளது தாய் ஒருமுறை கூறியதும் நினைவுக்கு வந்தது. 'புன்னையை நீ போற்றி வளர்க் கின்றாய் ஆதலின் அது மரமன்று; அது உனக்குத் தங்கை போன்றது' என்று கூறினாள்.

'உயிரே! நீங்கள் என்னைச் சந்திக்க வேண்டுமெனின், இனிப் புன்னை மரத்தடிக்கு வரவேண்டாம். இது நான் வளர்த்த புன்னை. என்னோடு வளர்ந்த புன்னை. இதை நான் மரமாகக் கருதவில்லை. என்னருமைத் தங்கையாகக் கருதுகிறேன். தங்கை யின் முன்னிலையில் பேச நாணம் அடைகிறேன். ஆதலின் வேறு மர நிழலும் இங்கே உண்டு' என்று கூறினாள். ஓரறிவுயிராகிய மரத்தையும் 'தவ்வை' என உறவுகொள்ளும் உயரிய பண்பைவிட வேறு பண்புடைமை யாதுளது?

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப
நும்மிலும் சிறந்தது; தவ்வைஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம! நாணுதும் நும்மொடு நகையே;
....
துறைகெழு கொண்கநீ நல்கின்,
நிறைபடு நீழல் பிறவுமார் உளவே.

நற்றிணை - 172

[காழ் - விதை, அகைய - தழைக்க, தவ்வை - தமக்கை, நிறைபடு நீழல் - நிறைந்த நிழல்]

நம்மை நாம் பேணிக் காத்துக்கொள்வது போல நாம் வளர்க்கும் மரஞ்செடி கொடிகளையும் பேணி வளர்க்க வேண்டும்; உயிராய் மதிக்க வேண்டும் என்பதை இப்பழம் பாடல் குறிப்பாக உணர்த்துவதை அறியலாம். அதனாலன்றோ,

"காக்கை குருவி எங்கள்சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்று உலகிலுள்ள எல்லா இனங்களையும் மனித இனத்தோடு ஒன்றாக வைத்து, எல்லா உயிர்களையும் போற்றிக் காக்கவேண்டும்; அதனால் விளையும் பயனை மக்களினம் பயன்படுத்தி வளமாக வாழ வேண்டும் என்று பாடினான் பாரதி. மரம் ஓரறிவுள்ளதாயினும் ஆறு அறிவுள்ள மனித இனத்திற்குப் பண்பாடு வேண்டும் என்பதை அது தன்னையே காட்டாக்கிக் காட்டகத்தில் நிற்கின்றது என்பதை மனித இனம் அறிந்து நடக்கவேண்டும்.

14. வெண்ணிற மலர்கள்

இசை மனித உள்ளத்தை ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தது. கல்நெஞ்சம் உடைய கள்வரும் இன்னிசையில் மயங்கி விடுவர். "பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா"[1] என்பது பாரதி இசையின் மேன்மைக்குத் தரும் நற்சான்றாகும். இசையைப் போல்தான் மலரும். அழகிய மலர்களைக் கண்டு மனத்தைப் பறிகொடுக்காதவர் உணர்ச்சியற்றவர்களே ஆவர். அழகும் மணமும் நிறைந்த மலர்கள் மனதுக்குப் பெருமகிழ்ச்சி தருவன. இதனை நன்கு உணர்ந்து உலகுக்கு உணர்த்த விரும்பிய கவிஞர் தாகூர். 'ஒரு தங்கக் கட்டியைக் காட்டிலும் ஒரு ரோசா மலர் அதிக மகிழ்ச்சியைத் தரவல்லது'[2] (A rose gives more delight than a piece of Gold - Tagore) என்று கூறியுள்ளார் எனின் மலரின் சிறப்பை நன்கு அறிந்து கொள்ளலாம்.

மலர்கள் மனித வாழ்வில் இன்றியமையாத ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவதைப் போல ஒவ்வொரு கட்டத்திலும் அவை காட்டும் பண்புகள் பின்பற்றப்பட வேண்டியவையாகும். காதல் வாழ்விலும் சமுதாயத்தோடு தொடர்பு கொள்ளும்போதும் இன்பத்திலும் துன்பத்திலும் இன்னும் பிற சூழ்நிலைகளிலும் அவை ஆசானாக இருந்து அறிவுரை வழங்குகின்றன. பண்பு கூறிப் பண்பட வைக்கின்றன.

இல்லறம் இனிது நடைபெறக் காதலர் இருவரும் கருத்தொருமித்து வாழவேண்டும். அவ்வாழ்வே இனிய இல்லற வாழ்வு[3]. அவ்வாழ்வு மலரைப் போன்றது; மகிழ்ச்சியும் இனி

மையும் நிறைந்ததாக இருக்கும். மலரின் பயனைத் துய்க்க அதனைக் கசக்காமல் நுகர்தல் வேண்டும். கசக்கி நுகர்ந்தால் அதன் அழகும் போய்விடும்; மணமும் மாறிவிடும். அதுபோல் இல்லறத்தையும் அன்பால் நடாத்திச் செல்ல வேண்டும். கடுமை புகுந்து விடுமாயின் அஃது இல்லற வாழ்வாக இராது; போர்க்களமாக, முடிவில்லாப் போராட்டமாக முடிந்து விடும். ஆதலின், வாழ்வை மலரினும் மென்மையானதாகக் கருதி நன்கு அமைத்துக் கொண்டு வாழவேண்டும். இத்தகைய வாழ்வு சிலருக்கே அமைகின்றது. பலரும் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கம்.

மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

குறள். 452

காமம் அல்லது காதல் என்பது ஒரு மனநிலைமையாகும்.

இல்லற வாழ்விலன்றி மக்களோடு மக்கள் பழகும் போதும் மலர் வழிகாட்டியாக விளங்குகின்றது. தனித்து வாழும் வாழ்க்கை துறவறவாழ்க்கை. அவ் வாழ்க்கை எல்லார்க்கும் ஏற்புடைத்தன்று. ஆனல் இல்லற வாழ்க்கை எல்லார்க்கும் ஏற்புடைத்தான வாழ்க்கை. அவ் வாழ்க்கை குடும்பத்தோடு சுற்றமும் நட்பும் விருந்தும் கலந்தது. ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பது. மனித உள்ளங்கள் ஒட்டி உறவாடும் தன்மை உடையது. இந்நிலையில் நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? என்று ஆராய்ந்து பழக வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றவர்களின் நட்பை, உறவைத் தவிர்க்க வேண்டும். துன்பத்திற்குத் துணையாகும் இனிய உள்ளங்களோடு உறவு கொள்ளவேண்டும். இத்தகைய உள்ளமுடைய நல்லவர்களே உலகம். அவர்களோடு கொள்ளும் பழக்கமே உலகத்தோடு பழகும் பழக்கமாகும். அப் பழக்கத்தில் எப்போதும் ஒரு தன்மையான நிலை இருத்தல் வேண்டும்.

நீரில் மலரும் மலர்கள் மலர்ந்து பின் குவியும் தன்மை உடையன. மரஞ் செடி கொடிகளில் மலரும் மலர்கள் ஒரு முறை மட்டுமே மலரும். மலர்ந்த நிலையிலேயே வாடி வதங்கி விழுந்து விடும். இரண்டாம் முறையாகக் குவிந்து மலரும் நிலை அதற்கில்லை. உலகத்தோடு நாம் கொள்ளும் பழக்கமும் நீர்ப்பூப் போல மலர்தல் குவிதல் என்ற இருவேறு நிலை இல்லாமல் எப்

போதும் மலர்ந்த நிலையிலேயே, அஃதாவது அறிவுசார்ந்த மனநிலை ஒரு தன்மையான நிலையிலேயே இருத்தல் வேண்டும். அதுவே வாழ்வைச் சுவையுடையதாக்கும் என்பதை மலர் மலரும் நிலை கொண்டு விளக்குகின்றார் வள்ளுவர்.

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

குறள் - *425*

உலகம் முழுமையும் ஆளும் மாமன்னனாக இருப்பினும், இரவும் பகலும் அயராது கண்விழித்துக் காவல் செய்யும் ஏவலனாக இருப்பினும் உண்பதும் உடுப்பதும் அடிப்படை அளவில் ஒன்றுதான். உயிர்வாழ, நாழி அளவு உணவும் மானங்காக்க இரண்டு ஆடைகளும் போதுமானவையே. பிற உணர்வுகளும் இருவர்க்கும் ஒரு தன்மைத்தானவையே. ஆதலின், மனிதர்கள் எல்லாரும் சமமானவர்களே. தாம் சேர்த்து வைத்துள்ள பொருள்களைத் தாமே உண்டு வாழ வேண்டும் என்று கருதுவார்களாயின் அவர்கள் நினைத்தபடி எல்லாம் நடப்பது அரிதே. அப்பொருட்கள் அவர்கட்கு உதவாமலும் போய்விடக்கூடும். ஆதலின், இருப்பவர்கள் இல்லாதவர்கட்குக் கொடுத்து உதவ வேண்டும். இதை அறிந்து வாழ்வோர் மிகச் சிலரே. அறியாது வாழ்வோரே பலராவர்.

தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

புறம் - *189.*

(வளாகம் - உலகம், ஒருமையோர்க்கும் - கொள்கை வழி நிற்போர்க்கும், கடுமா - வலிய காட்டு விலங்குகள், ஓரொக்கும்மே - ஒரே தன்மையுடையவை, தப்புந - தவறுவன)

அதியமான் நெடுமானஞ்சி என்னும் மன்னன் இதற்கு விதி விலக்கானவன். அவன் குடிமக்களைப் போற்றிப் பாதுகாப்பதில் தாய் போன்றவன். சிறிது உணவு இருந்தாலும், நிறைந்த அளவு உணவு இருந்தாலும் பகிர்ந்தே உண்பான். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாளன். புலவர்களைப் போற்றி வாழ்வதில் சிறந்தவன். பகைவர்களை அழிப்பதில் வல்லவன். இத்தகைய கொள்கையும் பண்பும் உடைய அவன் இன்று இல்லை. எனினும் அவனது கொடைநலமும் வீரமும் ஈரமும் பண்பு மேம்பாடும் பலரையும் நினைக்கச் செய்தன. அறிஞர்கள் பலர்கூடி அவனது நினைவைப் பகிர்ந்து கொண்டனர். நீர்த்துறையின் அருகிலுள்ள பகன்றை மலர்கள் மலர்ந்து நிறைந்துள்ளன. தேன் நிறைந்த பெரிய மலர்கள்தாம் எனினும், மணமின்மையால் அவற்றைச் சூடுவாரில்லை. மலர்ந்தும் பயனின்றியே தமது வாழ்வை முடித்துக் கொள்கின்றன. இம்மலர்கள் போலப் பலரிடம் செல்வம் நிறைந்துள்ளது. ஈர நெஞ்சமின்மையால், பிறர்க்கு ஈயாமலேயே அப் பொருள்கள் அழிந்து விடுகின்றன. அப்பொருட்களைச் சேர்த்தவர் களும் ஒருநாள் மாண்டு விடுகின்றனர். அதியமானுக்குப் பிறகு இனி இத்தகைய நிலைதான் நீடிக்கும் எனப் பாடுகின்றார் ஔவையார் எனும் அருந்தமிழ்ப்புலவர்.

இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன்று ஈகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே. புறம்-235.

(பகன்றை-ஒருவகை மலர், நறைக்கொள்-தேன் நிறைந்த, வைகியாங்கு - வீணைற்போல், வீயும்-இறந்துபடும், தவ-மிகுதி)

மலர்கள் மலர்ந்தால் மட்டும் போதா. அவை மணம் நிறைந்தும் விளங்க வேண்டும். அதுபோல் வாழ்க்கை மலரிலும் ஈகை எனும் பண்பு மணக்க வேண்டும் எனும் வாழ்வியல் பண்பாட்டைப் பகன்றை பகர்கின்றது.

வாழ்வில் இன்பநிலை எய்தியபோது பார்க்கின்ற பொருள்கள் எல்லாம் இன்பமுற்று மகிழ்வன போன்று தோன்றும். துன்பம் தொடர்ந்தபோது 'இன்னாது அம்ம இவ் வுலகம்' என்று பாடத் தோன்றும். இது புதியது அன்று; இவ்வுலகத்து இயற்கை. மன்னன் ஒருவன் செம்மையான ஆட்சிசெய்யும் திறனுடையவன். நாட்டை மட்டும் காத்துத் தன் வீட்டை மறந்தவனல்லன்; அகத்தி

லும் புறத்திலும் துறைபோயவன். ஒருநாள் மாலை வேளையில் தன் மனையாளுடன் மலர் வனம் புகுந்து மகிழ்ந்திருந்தான். 'பூவெல்லாம் தன்னிடத்தே பூத்திருக்கப் பார்த்திருந்தும் காவெல் லாம் சென்று சென்று கால்நோவப் பூவெடுத்தாள்' மன்னனின் நெஞ்சம் பிணித்திருந்த அம்மங்கை நல்லாள். அம்மலர்களை எல்லாம் நுகர்ந்து மகிழ்ந்தாள். மன்னன் அவைகளை அரசியின் கூந்தலுக்குச் சூட்டினான். அப்போது அம் மலர்களிலும் வேறு பட்ட நறுமணம் கூந்தலுக்கு இருப்பதாகக் கருதினான். அன்பின் நிறைவால் தோன்றிய மணம் அது; அன்றிக் கூந்தலுக்குத் தனி மணம் இல்லை என்பதை அவன் அறிவுகூறினும் உணர்வின் வழிப் பட்டு அவ்வாறு எண்ணத்தோன்றியது. அவ்வெண்ணம் அங் குள்ள தும்பிகளை நோக்கிப் பாட்டாக மலர்ந்தது.

'அழகிய வண்ணச் சிறகுகளை உடைய தும்பிகளே! நீங்கள் ஒவ்வொரு பூவிலும் தேன் குடித்து வாழும் உயரிய வாழ்க்கை யுடையீர்! இம் மலர்வனம் புக்க பிறகு எனக்கு ஓர் ஐயம் தோன்றி யுள்ளது. அழகும், தூய்மையும், ஆழ்ந்த நட்பும் உடைய பெண்ணின் கூந்தலைவிட நறுமணம் மிக்க மலர்கள் உலகில் இருக் கின்றனவா? என்பதே அவ்வையம். நான் உங்கள் காவலன் என்பதற்காக என்னுள்ளம் விரும்பும் விடையினைக் கூறவேண்டாம்; உண்மையை மொழிவீர்களாக என்று பாடினான்.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே?

குறுந்தொகை-2

(கொங்கு - தேன், பயலியது - பழகிய, கெழீஇய-ஒத்த, செறி யெயிற்று - நெருங்கிய எயிறுகள் உடைய)

பாடல் இதுதான். வண்டுகள் விடையிறுத்ததும் விடையிறுக் காததும் பற்றிய குறிப்புகள் பாடலில் இல்லை. ஆயினும் பாடலின் உள்ளார்ந்த கருத்து குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது. காதல் வாழ்விலும் உலகியல் வாழ் விலும் உண்மையை, உளம் நிறைந்ததை, பாராட்டுவது வாழ்வின் செழுமைக்கு நன்மை பயப்பதாகும் என்பதே. அரசி எல்லா

குணங்களாலும் நிறைந்தவள். அவளைப் பாராட்டுவது இல்லற மாண்பினைப் பாராட்டுவதாகும். இத்தகைய அன்புப் பிணைப்பு வாழ்விற்குத் தேவை என்பதை உணர்ந்து மலர்களோடு ஒப்பிட்டுத் தன் வாழ்க்கைத் துணைவியைப் போற்றுகின்றான். மலர்களைக் கருவியாக்கி வாழ்விற்குப் பாடம் நல்கும் காட்சி ஓர் இனிய காட்சியாகும்.

'இன்பத்தில் ஈயும் எறும்பும் கூடப் பங்கு கொள்ளும். துன்பத்தில் பங்கு கொள்வோர் மிகச் சிலரே'. 'அத்தகையோரே உயரிய அன்புடையவராவர். இயற்கைப் பொருள்கள் 'தோன்று கின்றன; வளர்கின்றன; மலர்கின்றன; காய்க்கின்றன; கனிகின்றன; இவை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். இந்நிகழ்ச்சி களில் தம் கருத்தை ஏற்றிப் பாடுவது கவிஞர்கள் இயல்பு. இக் கவிதைத் தொடர்பால் இயற்கை நம் வாழ்வோடு இணைந்துவிடு கின்றது.

குவளை, ஆம்பல், தாமரை முதலாய மலர்கள் தேன் சொட்டச் சொட்டக் காலை இளந்தென்றலில் மெது;வாக அசைந்து கொண்டு இருக்கின்றன. மலர்ந்த மலர்களின் தேனையுண்ண வண்டுகள் இசைபாடி வருகின்றன. அத்தகையதொரு வழியில் கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிச் சென்று கொண்டுள்ளனர். இக் காட்சியைக் கவிஞர் காவிய வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறார். இவர்கள் இருவர்க்கும் வரப்போகும் துன் பத்தை இம்மலர்கள் தெளிவாக உணர்ந்து விட்டனவாம். அதனால் அத்துன்பத்தை எண்ணிக் கண்ணீர் விடுகின்றனவாம்.

> **'கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்**
> **தையலும் கணவனும் தனித்துஉறு துயரம்**
> **ஐயம் இன்றி அறிந்தன போலப்**
> **பண்நீர் வண்டு பரிந்தினைந்து ஏங்கிக்**
> **கண்ணீர் கொண்டு கால்உற நடுங்க'**
>
> *சிலம்பு-13-184-88*

இதனை வண்டுகளும் உணர்ந்து வருந்திப் பாடுகின்றனவாம். மலர் கள் காற்றில் அசைவதும்,தேன் சொரிவதும்,வண்டுகள் பாடுவதும் இயல்பெனினும் அதனை வாழ்க்கையோடு இணைத்து, மலர்கள் மானிடர் துன்பத்தில் பங்கு கொள்கின்றன என்று கூறுவது கற்போர் இதயத்தைக் கனிய வைத்து, மலர்கள்போல் மக்களும்

மற்றவர்கள் துன்பத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்பதைக் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது.

மலர்கள் உள்ளத்தை இளகச்செய்து, உறுதியாகக் கைக் கொள்ள வேண்டிய வாழ்க்கை நெறிகளையும் விளக்குகின்றன. இரவில் மலரும் மலர்கள் மிகுந்த மணமும் வெள்ளை நிறமும் கொண்டவை. இரவில் மலரும் மலர்கட்கு இவை பெரும்பான்மையும் பொருந்தும். அப்பொழுதுதான் மலர்களின் வண்ணம் கண்டும், மணம் வீசும் திசை நோக்கியும் வண்டுகள் நாடி வந்து மகரந்தச் சேர்க்கைக்குத் துணைபுரியும். இல்லையேல் மலர்கள் காயாகிக் கனியாது.

.........................நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இட்டநா யகராம்
ஈயினம் அறிந்துவந்து எய்திடும்? அங்ஙனம்
மேவிடில் அன்றோ! காய்தரும் கருவாம்?

மனோன்மணீயம் 3-4-184

(நிசி-இரவு, இட்டநாயகர்-விருப்பத்திற்குரிய தேனீக்கள்)

மலர்களைப் போல் உலகம் நம்மைவிரும்பிச் சூழ்ந்து நிற்க வேண்டுமெனின் நம்மிடம் பிறர்போற்றும் பண்புகள் நிறைந்திருக்க வேண்டும். வெள்ளைநிற மலர்போல தூய மனம் வேண்டும். மலர்களின் மணம் போலப் புகழ்க்குரிய செயல்கள் பல செய்தல் வேண்டும். மலர்களின் மலர்ச்சி போல வாழ்க்கையை என்றும் மகிழ்ச்சிக்கு உரியதாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். வெண்ணிற மலர்கள் மக்களிடம் வேண்டி நிற்பவை இவைகள்தாம்.

மேற்கோள் விளக்கம்

1. பாரதியார் கவிதைகள், குயில்பாட்டு, 7.96
2. Rabindranath Tagore, 'My life' A lecture delivered in China in 1924, Representative English Essays, Diwan Chand Sharma, 1969.
3. கலித்தொகை. பாலைக்கலி, பாடல் 18. வரி - 11
   'ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை'

15. காயும் கனியும்

பாரத நாடு பழம்பெரும் நாடு. அதன் பெருமைக்கு அந் நாட்டின் மக்களேயன்றி அதன் இயற்கை வளமும் ஒரு காரண மாகும். விண்ணையளாவுகின்ற இமயமலே, வற்ருத வளங்கொழிக்கும் கங்கை, காவிரி முதலாய ஆறுகள், புலவர்பாடும் புகழுடைய தென்றல் தவழும் பொதிகைமலே, செந்நெல் வயல்கள், செழுங் கரும்புத் தோட்டங்கள் ஆகிய இவையனைத்தும் நாட்டிற்குப் பெருமை சேர்க்கின்றன. இவற்ருேடு பல்லாண்டுகள் பயன்தரும் பழமரங்களும் இப்பெருமையைப் பகிர்ந்து கொள்கின்றன.

பழங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதை அனைவரும் அறிவர். அவை பசியைப் போக்குவதோடல்லாமல் உடல் நலத் தையும் காக்கப் பயன்படும் அரிய இயற்கை உணவாகும். பண்டை நாளில் காடுகளில் வாழ்ந்த முனிவர்கள் காய், கனி, கிழங்குகளை உண்டு பல்லாண்டுகள் வாழ்ந்ததை வரலாறுகள் கூறுகின்றன. இக் காய், கனிகளைக் கொண்டு அறிஞர்கள் கூறிய கருத்துக்கள், பண்பாட்டு விளக்கங்கள் ஆகியவை என்றென்றும் மனங்கொள்ள வேண்டியனவாகும்.

நெடிய மரங்கள் நிறைந்துள்ள ஒரு பழத்தோட்டம். அதில் உள்ள பல்வேறு வகையான மரங்களில் சில பூத்திருந்தன; சில காய்த்திருந்தன; சில கனிந்திருந்தன. இயற்கையோடு இயற்கை யாக வாழும் வண்டுகள் மலர்களில் திளைத்து விளையாடின. வளைந்த மரக்கொம்புகளில் மயில்கள் மகிழ்ந்திருந்தன; குயில்களின் இசையும் தென்றலின் ஓசையும் நீரூற்றின் சலசலப்பும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்கவுண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் 1-6

இத்தகு பழத்தோட்டத்தில் கள்வன் ஒருவன் உள்ளே புகுந்தான். தோட்டத்திற்குரியவன் காண்பதற்கு முன்னர் அங்கிருந்து சென்றுவிட வேண்டுமென்பதால் கைக்கெட்டியதை விரைந்து பறித்துக் கொண்டு ஓடினான். அவன் பறித்து வந்ததைத் தின்னும்போதுதான், தான் காயைப்பறித்து வந்த உண்மை அவனுக்குத் தெரிந்தது. அத்திருடன் போல் ஆகி விட்டது என் நிலையும் என மனமுருகிப் பாடுகின்றார் துறவிகளில் புரட்சியாளராக விளங்கிய அப்பர் பெருமான்.

“கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ரானைக்
கையினால் தொழா தொழிந்து கனியிருப்பக்
காய்கவர்ந்த கள்வ னேனே’’.

அப்பர் தேவாரம், திரு. பதி. பாடல். 4.5.1

கனி இருக்கும் போது காயை உண்ண வேண்டுவதில்லை; பேசுவதற்கு இனிய சொற்கள் இருக்கும் போது கடிய சொற்களைப் பேச வேண்டுவதில்லை; வாழ்வதற்குப் பல நல்ல நெறிகள் இருக்கும் போது தீய நெறிகளில் செல்ல வேண்டுவதில்லை; உலக ஆக்கத்திற்குப் பல நேரிய வழிகள் இருக்கும் போது அழிவு வழிகளில் செல்ல வேண்டுவதில்லை என்பன போன்ற பல கருத்துக்களை அத் தொடர்கள் உணர்த்துகின்றன. நமக்குரிய பழத்தோட்டமாயின் பழுத்ததைத் தேர்ந்து உண்டு பயன்பெறலாம். நமக்கு உரியதல்லாத ஒன்றில் அடிஎடுத்து வைக்கும் போது அச்சமும் தடுமாற்றமும் ஏற்பட்டுத் துன்பமே விஞ்சும். கனியை விட்டுக் காயையும் பிஞ்சையும் உண்ண வேண்டிய நிலை வரும். மயிலும் குயிலும் மகிழ்ந்து ஆடிப்பாடும் போது ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் ஏன் கனியிருப்பக் காய் கவரும் திருடர்களாக வேண்டும்? என்ற உணர்வைத் தட்டி எழுப்பும் உயர்ந்த கருத்துப் பெட்டகமாக இப்பாடல் விளங்குவதைக் காணலாம்.

இத்தகையதொரு சோலை ஒருபோது பெருங்காற்றால் தாக்குண்டது. காற்றுச் சுழன்று சுழன்று அடித்தது. மரக்கிளைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. அவ்வாறு மோதியதில் கனிகள் பல வீழ்ந்து விட்டன. காற்று ஓய்ந்த பிறகு பார்த்தபோது கீழே விழுந்தவை கனிகள் மட்டுமல்ல; சில காய்களும் சில பிஞ்சுகளும் கூட வீழ்ந்து விட்டது தெரிய வந்தது. காற்றின் தாக்குதல் மிகுதியாகப் பட்ட இடங்களில் இருந்தவை எல்லாம் வீழ்ந்து விட்டன. இக்காட்சி வாழ்வியலை விளக்கும் பாட்டாக மலர்ந்தது.

மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்;
முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.

நாலடியார்-19

இப்பாடல் எளிய நாலடிப் பாடலாக இருப்பினும் அதனுள் பொதிந்துள்ள கருத்துக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கைக் கொள்ள வேண்டியவையாகும். உலகில் பலர் தம்மால் இயலக் கூடிய பல நல்ல செயல்களைக் கூடச் செய்யாமல் தட்டிக் கழித்து விடுவதைக் காண்கிறோம். இதனை நாம் செய்ய வேண்டியதில்லை; வசதிபடைத்தவர்கள் செய்ய வேண்டியது என்றும், இவ்வொழுக்கத்தை நாம் இளமையுடைய இப்பொழுது கைக்கொள்ள வேண்டியதில்லை, வயதில் பெரியவர்கள் கைக்கொள்ள வேண்டியது என்றும், இத்தகைய தியாக மனப்பான்மையெல்லாம் நமக்குப் பொருந்தாதவை, காந்தியடிகள் போன்ற ஒரு சிலர்க்கே பொருந்துகின்றவை எனவும் ஒதுக்கிச் செல்வதை அறிகின்றோம். நற்செயல்களைச் செய்யாது ஒதுக்கிவிட்டு எங்கு செல்லினும் அவரனைவர்க்கும் முடிவு ஒன்றே. நேற்று இருந்தான், இன்று இல்லை என்ற பெருமை உடையது உலகம்[1]. ஆதலின் நாம் இளையவர்கள், நற்செயல்கட்கும் நமக்கும் தொடர்பில்லை, முதுமையில் பார்த்துக் கொள்வோம் என்ற எண்ணம் கொள்ளல் ஆகாது. பெருங்காற்றால் அற்று வீழ்ந்த பிஞ்சுகளையும் காய்களையும் போல வாழ்வு இடையில் முடிந்து விடுதலும் கூடும். ஆதலின் வாய்ப்பும் வசதியும் உள்ள பொழுதே நற்செயல்களைச் செய்துவிட வேண்டும் என்னும் உயர் பண்பை காய்களும் கனிகளும் காட்டாக நின்று உணர்த்துகின்றன.

இவ்வாறு கையில் உள்ள போதே கரவாது அறஞ்செய்தவர்களுள் தகடூர் அதியமானும் ஒருவன். நீண்ட உயிர்

வாழ்வைத் தரும் அமிழ்து விளை நெல்லிக்கனி பற்றிக் கேள்வியுற்று, அதனை அரிதின் முயன்று கொண்டு வந்தான். அதனை உண்ணத் தலைப்படும் நேரத்தில் ஔவையார் எனும் அருந்தமிழ்ப் புலவர் அம் மன்னனைக் காண வந்தார். தான் நீண்ட நாட்கள் வாழ்வதைக் காட்டிலும் தன்னினும் அறிவு மிக்க அறிஞர் வாழ்தல் நாட்டிற்கு நன்மையைத் தருவதாகும் என்று கருதினன். அதனால் கிடைத் தற்கரிய அந்நெல்லிக் கனியை ஔவைக்குக் கொடுத்துப் பெரும் புகழ் கொண்டான். அதன் சிறப்பை அறியாது உண்ட ஔவை பின்னர் அதன் பெருமையை அறிந்து அவனைச் சிவபெருமான் போல என்றும் வாழ்க என வாழ்த்தினர்.

‘நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே’.

புறம் - 91

[நிலமணிமிடற்று ஒருவன் - சிவபெருமான், விடரகம் - மலைப்பிளவு, ஆதல் - நன்மை]

புறவாழ்விலன்றி அகவாழ்விலும் கனிகள் காட்டாக நின்று கருத்தை விளக்குகின்றன. ஆண், பெண்களில் ஒருவர் மட்டும் விரும்பி மற்றொருவர் விரும்பாவிடின், அதனை ஒருதலைக்காமம் என்பர். வயது வேறுபாடு முதலியவை மிக்கிருந்தும் விரும்பு வதைப் பொருந்தாக் காமம் என்பர். உருவும், திருவும், கல்வியும், ஒழுக்கமும் ஒத்து, இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பின் அதனை அன்பின் தளைப்பட்ட காதல் என்பர். இக்காதல் வாழ்வே விதை யில்லாப் பழத்தை உண்பதைப் போன்ற சுவையுடையது. விதை யுள்ள பழங்களைச் சுவைக்கும் போது விதை இடையூறாக இருந்து அச்சுவையைக் குறைத்து விடக்கூடும். விதையில்லாப் பழமாயின் எவ்வித இடையூறு மின்றிப் பழத்தைச் சுவைத்து மகிழலாம். அன்பின் தளைப்பட்ட காதலும் அத்தகையதே. இவ்வின்ப வாழ்க்கையை விதையில்லாப் பழம் கொண்டு விளக்குகின்றார் வள்ளுவர்.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றுரே
காமத்துக் காழில் கனி. குறள் - *1191*

விதையில்லாப் பழம் போன்ற இனிய நட்பு பூண்டன இரு உள்ளங்கள். அவர்கள் அன்பில் குறைபாடு இல்லை எனினும் அம் முடிவைக் காலமும் சூழ்நிலையும் தகர்க்க முற்பட்டன. அத்தலைவன் குறிஞ்சி நிலத்துக்கு உரியவன். அவன் நாட்டிற்கு ஓங்கி வளர்ந்த நல்ல மூங்கில்களே வேலியாக அமைந்திருந்தன. மலையும் மலை சூழ்ந்த அப்பகுதியில் பலாமரங்கள் நிறைந்திருந்தன. அம்மரங் களிலும் வேர்ப்பலா மரங்களே அதிகம். வேரில் பழுத்துக் கிடக்கும் பழங்கள் பார்ப்பவர் கவனத்தை ஈர்க்கும் தன்மை யுடையன. அந்நாட்டைக் குறிக்கும் போதெல்லாம் வேர்ப்பலா மரங்கள் இடம் பெற்று விடும். அத்தகைய நாட்டை உடைய தலைவன், அண்டை நாட்டுப் பெண்ணிடத்தில் அன்பு பூண்டு அவளைக் காண, வந்து வந்து மீண்டான். திருமண நினைவு அவனுக்கு எழவில்லை. அப்பெண்ணின் நல்லாளைக் கண்டு செல்வதிலேயே அவன் காலத்தைக் கடத்தினன். அவனுக்குத் தன்னிலைமையை உணர்த்த விரும்பினள் தலைவி. தன்னிலை எவ்வளவு தொல்லைக் குரியதாயினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பதே பெண்கட்குப் பெருமை தருவதாகும். ஆதலின் தோழியை நாடி நிலையை விளக்கினள். தோழி தன் அறிவுக் கூர்மையால் தகுந்த முறையில் சூழ்நிலையைத் தலைவனுக்கு எடுத்து விளக்கினள்.

'உன் நாட்டில் வேர்ப்பலா மரங்கள் மிகுதி. அவை பழுத் துக்கிடக்கின்றன. காற்றடித்தால் பழங்கள் அற்று விழுமேயன்றி மரங்கட்குக் கேடில்லை. காற்றாலும் பாதிக்கப்படாதவாறு மூங்கில்கள் வேலியாக அமைந்துள்ளன. ஆனல் எங்கள் நாட்டில் கொம்பில் பழுக்கும் பலா மரங்களே உண்டு. சிறு காற்றடித் தாலும் பழத்தின் பாரம் தாங்க முடியாமல் கொம்பு ஒடிந்துவிடும். சிறிய கொம்பு ஒன்றில் பெரும் பழம் தொங்கினல் அதன்நிலை யாதோ, அதே நிலைதான் எம் தலைவிக்கும் வாய்த்திருக்கிறது. அவள் உயிர் கொம்பு போன்றது. அவ்வுயிராகிய கொம்பில் காதலாகிய பெரும்பழம் பழுத்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதையறிந்து செயல்படுகின்றவர் யார் உளர்'? என்று எடுத் துரைத்துக் குறிப்பால் நிலைமையை விளக்கி மணம் முடிக்க ஏற்பாடு செய்தாள்.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃது அறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

குறுந்தொகை - *18*

(வேரல் - மூங்கில், சாரல் - மலைச்சாரல், செவ்வியை ஆகுமதி - தகுதியை உடையவனாகுக, அறிந்திசினோர் - அறிந்தோர், தூங்கி- தொங்கி, தவ - மிகுதி, காமம் - காதல்)

இப்பாடல் குறிஞ்சி நிலத்தில் விளைகின்ற கனிகள் கொண்டு அரிய கருத்தினை விளக்கி நிற்கின்றது. காதலில் ஆண்களின் நிலை வேரில் பழுத்த பலாப் போன்றது என்பதைச் சுட்டி, காற்றால் தாக்குறும் போது வேரில் பழுத்த பழம் மட்டுமே அறுந்து விழும்; கொம்பில் பழுத்தது கொம்புடன் ஒடிந்து விடும். ஆதலின், பெண்கள் நிலை வருந்தற்குரியது என்பதை அக்கனிகள் உணர்த்துகின்றன.

இத்தகு அன்பின் வழிப்பட்ட காதல் கைகூடிய பிறகு வாழ்வைச் சுவைப்பட நடத்திச் செல்லவேண்டும். மிகுந்த அன்பினால் வாழ்வைச் சுவையிழக்கச் செய்து விடுவதோ, அன்புக் குறைபாட்டால் வாழ்வைக் குறையுடையதாக்கிக் கொள்வதோ கூடாது. இல்லற வாழ்வில் சிறிதும் பெரிதுமாகிய ஊடலாம் துனியும் புலவியும் வேண்டும். இல்லாவிடின் வாழ்வு மிகக் கனிந்த கனி போன்றும், மிகவும் பிஞ்சுக்காய் போன்றும் உண்ணப் பயன் படாமல் பயனற்று, சுவையற்றுப் போய்விடும். இதனை வள்ளுவர்,

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

குறள் *1306.*

எனக்கூறுகின்றார்.

இவ்வாறு கனியிருப்பக் காய்கவர்தல் கூடாது, இளமையில் நற்செயல்கள் பல புரிய வேண்டும், இல்வாழ்வை விதையில்லாப் பழம்போலச் சுவையுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற வாழ்வியல் பண்புகளைக் கனிகள் கனிவாகக் கூறுகின்றன.

மேற்கோள் விளக்கம்

1. குறள். 336

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

16. பால்வளம்

ஒவ்வோர் உயிருக்கும் ஒவ்வொரு சிறப்பான குணம் உண்டு. நாய் நன்றியுடையது; நரி தந்திரம் மிக்கது; காக்கை இனம் தழுவி வாழ்வது; கொக்கு கருமமே கண்ணுயது; தூக்கணங் குருவி வாழ்க்கைச்சீர் உடையது; தேனீ முயற்சி உடையது; எறும்பு வருமுன் காப்பது; இவற்றைப் போல எருமை பொறுமை உடையது என்பர் அறிஞர்.[1] பொறுமைக் குணத்தில் பெயர் பெற்று விளங்கும் எருமை ஒன்று விடியற்காலத்தே புல்லை மேய்ந்து வெய்யில் ஏறஏற வெப்பம் தாங்க முடியாமல் அருகில் உள்ள குளத்தில் இறங்கியது. அப்படியும் இப்படியுமாகப் படுத்துப் புரண்டது. நீர்நிலைகள் என்றால் எருமைகட்குப் பெரு விருப்பம் ஆதலின் நெடுநேரம் குளத்தில் கிடந்தது. குளத்தில் உள்ள வரால் மீன் ஒன்று எதிர்பாராத விதமாக அந்த எருமையின் மடியில் சென்று முட்டியது. அண்மையில் கன்று ஈன்ற எருமையாதலின் உடனே தனது கன்றின் நினைவு வரவே, குளத்தை விட்டுச் செல்ல மனமில்லாத எருமை, கன்றுள்ளி வீடு நோக்கிச் சென்றது. வரால் முட்டி மடியில் பால் சுரந்ததால் எருமை சென்ற வழியெல்லாம் பால் சொரிந்து கொண்டே சென்றது. வழியெல்லாம் பால். இத்தகைய வளம் பொருந்திய ஊர் திருவெண்ணெய்நல்லூர் என்பது கம்பரின் பாடலால் அறியப்படும் செய்தியாகும்.

'மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெய்யே'

கம்பர்

(மோடு - பெரிய கொம்புகளை உடைய, வாவி - குளம், வரால் - ஒருவகை மீன், வெண்ணெய் - திருவெண்ணெய்நல்லூர்)

இப்பாடல் எவ்விதமான கற்பனையுமின்றி உண்மையான நிலையை உணர்த்தக் கூடிய பாடலாகும். நல்ல வளம் பொருந்திய பண்ணைகளில் உள்ள எருமைகளும் பசுக்களும் கன்றுள்ளிப் பால் சொரிவதை இன்றுங் காணலாம். இஃது இயல்பானதே என்பதில் கால்நடை அறிஞர்களும் உடன்படுகின்றனர். இக்காட்சி வளஞ் சான்ற மருத நிலத்தில் காணும் காட்சியாகும். 'வாங்கக் குடம் நிறையும் வள்ளல் பெரும் பசுக்களையும்'[2] 'கன்றூர்த்திக் கலநிறை பொழிதரும் கறவைகளையும்'[3] வளர்த்துப் பால்வளம் பெருக்கித் தங்கள் வாழ்வையும் வளமாக்கிக் கொண்டார்கள் தமிழகத்து மக்கள். இது மருத நிலத்து நிலை.

முல்லை நிலத்தில், அஃதாவது நீர்வளமும் நிலவளமும் குறைந்த புன்செய் நிலப் பகுதியில், மக்கள் ஆடுமாடுகள் வளர்ப் பதையே பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். பசுக்களையே பெருஞ் செல்வமாகவும் கருதினர். ஓர் அரசன் மற்றோர் அரச னின் செல்வத்தைக் கவர்ந்து கொள்ள விரும்பின் முதன்முதலில் அவன் நாட்டம் பசுக்கள் மீதே விழும். அரசர்களும் விரும்பும் செல்வமாகப் பசுக்கள் விளங்கின என்பதை 'நிரை கவர்தல்'[4] என்னும் போர் முறையால் அறியலாம். முல்லை நிலத்து மக்களின் வாழ்க்கையையும் அதில் பெண்கள் கறவைகளை வைத்துக் காக்கும் திறன் பற்றியும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் இயல்பான முறையில் அழகிய ஓவியம் தீட்டிக் காட்டியுள்ளார்.

விடியற்காலம். இளங்கதிர் இன்னும் கிழக்கில் எழவில்லை. பறவைகளின் இன்னொலி அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்கின்றது. ஒரு வீட்டிலிருந்து மத்தொலி வருகின்றது. அவ் வொலி புலியின் உறுமலை நினைவூட்டுகிறது. நன்றாக உறைந் திருந்த தயிரைக் காந்தள் மெல் விரல்களால் கரைத்துக் கடை கின்றாள் ஒரு நங்கை. நீண்ட நேரத்திற்குப் பின் வெண்ணெய் திரண்டு வருகின்றது. வெண்ணெய்யைத் திரட்டி எடுத்து வேறு ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டாள். மோர்ப் பானையை மென்மையாகச் சும்மாட்டின் மீது வைத்துத் தலையில் சுமந்து சென்று அருகிலுள்ள ஊர்களில் அன்றாடம் விற்று வருகிறாள். இது அவளது தொழில்.

"நள்ளிருள் விடியல் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
....
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும்"

பெரும்பாண். 155 - 160.

(புள் - பறவை, உறையமை - கட்டித் தயிர், புகர்வாய் - மோர்த் துளி படிந்த புள்ளிகளை உடைய வாய், குழிசி - பானை, இரீஇ - வைத்து)

அவள் நல்ல நிறம் பொருந்தியவள். அவளது பணைத்த தோள்கள் மிக்க அழகுடையன. அவள் காதில் குழையணிந் திருந்தாள். அலைஅலையான தலைமயிரைக் கொண்ட அவள், மோரும் வெண்ணெய்யும் விற்ற பணத்தைக் கொண்டு தன்னை அழகு படுத்திக் கொள்ள அணிகலன்கள் வாங்கவில்லை. தன் குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்குகின்றாள். அவளது மோர் விற்ற வருவாயே அக்குடும்பத்தைத் தாங்கு கின்றது. தனது நெய் விற்ற பணத்தைச் சேர்த்துவைத்து அதைக்கொண்டு நல்ல பால் கொடுக்கும் பசுக்களையும், எருமை களையும் கன்றுக்குட்டிகளாகவே வாங்கித் தனது பால்பண்ணை யைப் பெருக்கிக் கொள்கிறாள்.

"...............................நல்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதில் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளவிலை உணவின் கிளையுடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்

பெரும்பாண் 165 - 170

(அளை - வெண்ணெய், அருந்தி - உண்பித்து, நல்லான் - நல்ல பசு கருநாகு - கன்றுக்குட்டிகள்)

புன்செய் நிலம் தானே, விதைத்து விட்டு வானத்தை நோக்கும் நிலைதானே, நாம் வேறு என்ன செய்ய முடியும் என்று வாளா இருக்கவில்லை அப்பகுதி மக்கள். பயிர் செய்வதில்

வருவாய் குறைந்த போது வேறுவகையில் வளந்தேடிக் கொண் டார்கள். இருப்பதைக் கொண்டு சிறக்க வாழும் இவ்வாழ்வே சிறப்புடைய வாழ்வாகும். இவ்வாறன்றி என்னிடத்தில் ஒன்று மில்லையே, எனது தோட்டத்தில் நீர்வளமில்லையே, நிலவள மில்லையே, நான் என்ன செய்வேன் என்று சோம்பி இருப்பவர் களைக் காணின் நிலம் என்னும் நல்லாள் சிரித்து, எள்ளி நகை யாடுவாள் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளது ஈண்டு நினைவு கூர் தற்குரியதாகும்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

குறள் - *1140*

ஆதலின் வினையாண்மை உடைய முல்லை நில மக்களாகிய கோவலர் வாழ்வு பிறர்க்கு ஒரு பாடமாகும். இச்சூழலில் வாழும் தலைவி ஒருத்திக்குக் காதல் அரும்பிப் போதாகி மலர்கின்றது. காளையொருவன் கொல்லேற்றை அடக்கி வீரம்மணக்க மணக் கின்றான். சில நாட்களுக்குப் பின்னர் பொருள் தேடப் பிரிந்து செல்கின்றான். வீட்டிலேயே இருந்து கொண்டு பெற்றோர் சேர்த்து வைத்த பொருள்களை உண்டு மகிழ்தல் ஆண் மக்கட்கு அழகல்ல. 'உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்'[4] என்பது பண்டையோர் கொள்கை. 'இல்லிருந்து வாழ்வோர்க்கு இல்லை யால் புகழ்'[5] என்பதும் அத்தலைவன் அறிந்த ஒன்றே. ஆதலின் வெளிநாடு செல்கிறான். (நாடு என்பது இன்றைய அண்டை மாநிலங்களைக் குறிக்கலாம்) புதிய பசுக்கள் வாங்கி வரவும், புதிய வளர்ப்பு முறைகளை அறிந்து வரவும், அதனால் பொருள் வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் விரும்பிக் காதலைச் சற்றே ஒதுக்கி விட்டுக் கடமையை முன்னிறுத்திச் செல்கின்றான்.

கடமையை மேற்கொண்ட கணவனைத் தடுத்து நிறுத்துவது 'மனைக்கு விளக்கமாக'[6] விளங்கும் மங்கையர்க்கு அழகல்ல. ஆதலின் தன்னால் இயன்ற அளவு பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்கிறாள். அவள் தன் பிரிவுத் துன்பத்தை எவ்வளவுதான் மறைத்தாலும் பசலை படர்ந்த மேனி அவளது ஆற்றாமையைப் பிறர்க்குப் புலப்படுத்தி விடுகின்றது. அவள் தனது இளமையும் அழகும் வீணாகக் கழிவதை எண்ணி ஏங்குகின்றாள். அவளுக்கு அவர்களுடைய வாழ்வில் இயல்பாக நடந்த நிகழ்ச்சி ஒன்று

நினைவுக்கு வருகின்றது. அவள் ஒருநாள் அவர்கள் வீட்டுப் பசுவின் பால் கறந்தாள். கறந்து முடித்த அவளுக்கு தன் காதலன் நினைவு எழ, பாத்திரம் கைநழுவி விட்டது. பால் முழுவதும் கீழே கொட்டிவிட்டது. எப்போதோ திருமணத்திற்கும் முன் நடந்த நிகழ்ச்சி, இன்று நினைவுக்கு வருகிறது.

கன்று ஊட்டி இருந்தாலும் அதன் வயிறுவது நிறைந் திருக்கும். பாத்திரத்திலேயே இருந்திருந்தாலும் யாருக்கேனும் பயன் பட்டிருக்கும். இரண்டுமின்றி நல்லபால் நிலத்தில் கொட்டி ஒருவருக்கும் பயன்படாது போய்விட்டது. அதுபோல என் இளமையும் அழகும் என்னோடும் நிலைக்காது என் தலைவருக்கும் பயன்படாது வீணே கழிகின்றது; அவர் பிரிவால் பசலை படர்ந்து என் அழகு அழிகிறதே என மனம் வருந்தி நோகின்றாள்.

கன்றும் உண்ணாது கலத்தினும் படா அது
நல்லான் தீம்பால் நிலத்து உக்காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீ இயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே.

குறுந் - 27

(உக்கா அங்கு - கொட்டியது போல, பசலை - தேமல், உணீ இயர் - படர்ந்து அழிகின்ற)

இவ்வாறு அன்றாட வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சி யையும் ஊன்றிக் கவனித்து அதனைத் தம் வாழ்வோடு இணைத்துப் பார்க்கும் தன்மை போற்றுவதற்குரியதாகும். கன்றும் வளர வேண்டும்; கலமும் நிறைய வேண்டும். அதுபோல என்னழகு என்னோடும் நிலைக்க வேண்டும்; அவருக்கும் இன்பம் நல்க வேண்டும். பொருளை எப்போது வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம்; இளமை மீண்டும் வருமா?[5] இதை மறந்து சென்றாரே! என ஒரு பெண் தனது காதலன்பை அடக்கவும் முடியாமல் வெளிப்படையாகச் சொல்லவும் முடியாமல் என்றோ கைதவறிக் கொட்டிய பாலை வைத்து இல்லறப் பண்பை எடுத் தியம்பும் பாங்கு உலக நாகரிகத்திற்கு ஓர் அறைகூவலாகும்.

ஆம்; பாலைக் கவனமாகக் கையாள்வது போல் வாழ்க்கை யையும் எச்சரிக்கையாக நடத்த வேண்டும். கொஞ்சம் தவறி னாலும் பால் பயனற்றுப் போவது போல வாழ்வும் பயனற்றுப்

போய்விடும். பயிர்களை விளைவிப்பது மட்டுமின்றிக் கால்நடைகளை வளர்ப்பதும் பயிர்த்தொழிலின் ஒரு கூறேயாகும். ஆதலின் பாலைக்கொண்டு வாழ்க்கைப் பண்பாட்டை உணர்த்தும் திறன் வியக்கத் தக்கதாக உள்ளது.

மேற்கோள் விளக்கம்

1. செகவீர பாண்டியனுர். கல்விநிலை, மதுரை 1957 பக்கம். 5
2. திருப்பாவை பாடல். 3 வரி. 4
3. மணிமேகலை. 12. 93
4. குறுந்தொகை, பாடல். 283, வரி-1
5. நற்றிணை, பாடல், 159 வரி. 9
6. நான்மணிக் கடிகை, பாடல். 105.
7. தொல்காப்பியம். பொருளதிகாரம். புறத்திணையியல்-2
8. கலித்தொகை. பாலைக்கலி. பாடல் 8

17. கடற்செல்வம்

அன்று முழுமதி நாள். மீனவர்கள் ஓய்வு கொள்ளும் நாள். இரவு நேரம். குடும்பம் குடும்பமாகக் கடற்கரையில் குழுமி உள்ளார்கள். சிறுவர்கள் கூட்டமாகச் சேர்ந்து விளையாடினார்கள். பெற்றோர்கள் குடும்பநிலை பற்றியும் வருங்காலத் திட்டம் பற்றியும் பேசிக்கொண்டார்கள். பருவம் வந்த இளைஞர்களும் மகளிரும் தங்கள் உள்ளங்களைப் பரிமாறிக் கொண்டனர். இளையரும் முதியரும் நிறைந்து வெண்ணிலவின் பயன் துய்க்கும் காட்சி கண்ணுக்கினிய விருந்தாக இருந்தது. பகல் முழுதும் கடலாடிக் களித்தார்கள்; மாலை வேளையில் சுறுமீனின் கொம்பை நட்டுக் கடவுள் வணக்கம் செய்தார்கள். தங்கட்கு வாழ்வு தரும் மீனையே கடவுளாகக் கருதி, இயற்கையாலும் செயற்கையாலும் தங்கட்கு இன்னல் வராது காக்க வேண்டினர். எத்தகைய தற்காப்பிற்கும் விஞ்சி அவர்களைத் துன்பம் தொடரக் கூடும். ஏனெனில் அவர்கள் வாழ்வு நீர்மேல் வாழும் வாழ்வு. தம் துன்பத்தைத் துடைக்க ஒரே விடிவு நம்பிக்கைதான். அந்நம்பிக்கையைக் கருத்தில் கொண்டோர் போக, எஞ்சியவர்கள் சுறுவின் கொம்பு வடிவில் இறைவனைக் கண்டார்கள். இரவில் ஓய்வு கொண்டனர். திங்கள் முழுவதும் கடலில் வேட்டையாடிய அவர்கள், அன்று ஒரு நாள் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வு தந்து தங்களை மறந்து மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இது பட்டினப்பாலை தரும் முழுமதிநாளின் கடற்கரைக் காட்சி.

சினைச் சுறவின் கோடு நட்டு

....

புன்தலை இரும்பரதவர்
பைந்தழை மாமகளிரோடு
பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உவவு மடிந்து உண்டு ஆடியும்

..

வெண்ணிலவின் பயன்துய்த்தும்

பட்டினப்பாலை. *85 - 114*

(சுறு - ஒருவகைமீன், கோடு - கொம்பு, புன்தலை - எண்ணெய் பூசாத தலை, வேட்டம் - வேட்டை, உவவுமடிந்து - முழுமதிநாளில் ஓய்வுகொண்டு)

கடலோரப் பகுதியில் வாழும் மக்கள் மீன்பிடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். இன்று மீன் வளம் பெருக்கி உணவுப் பற்றுக்குறையைப் போக்க வேளாண் அறிஞர்கள் முயன்ற வண்ணம் இருக்கின்றனர். பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மக்கள் இயற்கையில் கிடைக்கும் கடல் செல்வ மாகிய மீனினைப் பிடித்து விற்றும் உணக்கியும் வாழ்ந்தார்கள் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். தாம் செய்யும் தொழிலை வாழ்க்கையோடு இணைத்துக் காணும் பண்புடையவர்கள் ஆதலின் மீனவர்கள் பண்பாடு மீன்பிடிப்பில் வெளியாகின்றது.

மீன் பிடிக்கும் வேலை நடந்துகொண்டிருக்கின்றது. வலையில் ஏராளமான மீன்கள் சிக்கிக் கொண்டன. அவைகளைக் கரைக்கு இழுக்க முடியாமல் இழுக்கின்றார்கள். இளைஞரும் முதியோரும் ஆடவரும் மகளிரும் சேர்ந்து பெரிய ஆரவாரம் செய்துகொண்டு இழுக்கின்றார்கள். உப்பு மூட்டைகளை ஏற்றிச்செல்லும் வண்டி மணலில் சென்று அழுந்திக்கொண்டால் அவ்வண்டியைச் சிலர் பின்னிருந்து தள்ளுவர்; சிலர் சக்கரத்தை நொடித்துவிடுவர். எல்லோரும் சேர்ந்து உரக்க ஒலி எழுப்பி எருதுகட்கு ஆர்வ மூட்டி வண்டியை இழுக்கச் செய்வர். அப்போது ஏற்படும் பேரொலிபோல மீனவர்கள் ஆரவாரம் செய்து இழுக்கின்றார்கள். கயிற்றால் பின்னப்பட்ட நீண்ட பெரிய வலை அது. அவ்வலை நிறைய பல்வேறு இன மீன்கள். கடலின் வளமெல்லாம்

அவ்வலேக்குள் வந்துவிட்டதோ என்று கருதுமளவிற்கு நல்ல வேட்டை. இழுக்க முடியாமல் இழுத்துக் கரையில் போட்டு விட்டனர்.

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலேக்
கடல்பாடு அவிய இனமீன் முகந்து
துணேபுணர் உவகையர் பரத மக்கள்
இளேயரும் முதியரும் கிளேயுடன் துவன்றி
உப்புஒய் உமணர் அருந்துறை போக்கு•
ஒழுகை நோன்பகடு ஒப்புக் குழீஇ
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கி

(வலந்த - பின்னப்பட்ட, துவன்றி - நெருங்கி, உப்புஒய்-உப்பைக் கொண்டு செல்லும், உமணர் - உப்புவணிகர், ஒழுகை - வரிசை, நோன்பகடு - வலிய எருது, குழீஇ - கூடி, அயிர்திணி - நுண் மணல் நிறைந்த)

மீன்கள் பெருங்குவியலாகக் குவிந்து விட்டன. அக்காட்சி மருதநிலத்து உழவர்கள் தங்கள் களத்தில் குவித்துள்ள நெற் பொலி போன்று காட்சியளிக்கின்றது. உழவர்கட்கு நெல்போல், பரதவர்கட்கு மீன். உழவர்கள், தாங்கள் உழைத்த பயன் களத் திற்கு வந்ததும், வறியவர்களுக்கு வழங்கி எஞ்சியதை இல்லத் திற்கு எடுத்துச் செல்லும் பண்புடையவர்கள். அவ்வுழவர்களேப் போல, தம முயற்சியால் கிடைத்ததை வறியவர்க்கு வழங்கும் பண்பை இந் நெய்தல் உழவர்களும் பெற்றிருந்தனர். குவியலாகக் குவிக்கப்பட்ட மீன்களே வறியோர்க்கு வழங்கி, அவற்றைப் பெற்றவர்கள் மகிழ்ச்சி கண்டு பேருவகை எய்தினர். 'ஈத்துவக்கும் இன்பம்'[1] அறிந்தவர்கள் ஆதலின், கொடையன்பால் உயர்ந்து நின்று, எல்லோரும் வாழவேண்டும் என்ற உயரிய பண்பிற்கு இலக்கியமாயினர். அன்ருடம் மீன்பிடித்து வாழும் எளிய வாழ் விலும் ஈகை அரும்பி மலர்வது சிறப்பன்ருே? எஞ்சியதைக் கூறுகளாக்கி உரக்க விலேகூறி விற்கின்றனர்.

பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி
பாடுபல அமைத்துக் கொள்ளே சாற்றி

அகம் - 30

(பாடுபல - பலகூறுகள், கொள்ளே - விலே, சாற்றி - கூறி)

இத்தகைய கடற்கரைத் துறைக்கு உரிய தலைவன் ஒருவன் மீன் உணக்கிக் கொண்டிருந்த மங்கை யொருத்தியைக் கண்டான். அவள் தந்தை கொடுங்கண் வலையால் மீன்களைக் கொல்கின்றவன். அவளோ தன் நெடுங் கண்ணாலேயே கண்டார் உயிரைக்கொன்று விடும் தன்மை உடையவளாக இருந்தாள். அவளது தோள்களும் மார்பும் அவளது கள்ளங்கபடமற்ற இளமையின் செழுமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அவளது கொடியிடையோ அவளது வனப்பை மேலும் மிகுதிப் படுத்திக் காட்டியது.

கொடுங்கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை
நெடுங்கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும்
வடம்கொள் முலையான் மழைமின்னுப் போல
நுடங்கி உகும்மென் நுசுப்பு இழவல் கண்டாய்.

சிலம்பு. கானல் - 18

இளமையும் எழிலும் ஒன்றை ஒன்று ஈர்த்தன. உள்ளங்கள் இணைந்தன. அவள் மீன் உணக்குவாள். இவன் அவளைக் காண வருவான். இது நாள் தோறும் நடக்கின்ற நிகழ்ச்சி. அங்கொருவர் இங்கொருவராக அதனைக் கண்டு விட்டனர். இந்நிகழ்ச்சி கரும்பல்லவா பெண்டிர்க்கு? மெல்லத் தொடங்கி விட்டனர். ஊரே அறிந்தாயிற்று. இனி யாரும் அறிய வேண்டிய நிலை இல்லை. இந்நிலையை அறிந்தான் தலைவன். திருமணத்திற்கு ஏற்பாடு செய்து நாளும் குறித்து விட்டான். தலைவிக்குச் செய்தி கிடைத்தது. பிறர் ஏச்சையும் பேச்சையும் கேட்டு நாணிக் கூசிய காதுகட்கு இச் செய்தி தேன் வந்து பாய்ந்தது போலிருந்தது. தனக்குத் திருமணம் என்பதில் அவள் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும், இனிப் பேச்செல்லாம் ஓய்ந்து விடும், பெண்கள் வாய் அடைபட்டு விடும் என்பதில் அடைந்த மகிழ்ச்சியே பெரிதாக இருந்தது. இந்நிலை உளவியலுக்கும் ஒத்ததே. இராமன் அரக்கர்களை வெல்ல வானரப் படைகளுடன் ஓர் ஆலமரத்தடியில் தங்கியிருந்த போது, அம்மரத்திலிருந்த பறவைகள் ஒலிசெய்ய, அவன் அதனைத் தன் மாய அம்பால் அடக்கினன் என்பர். அதுபோல் இத்திருமணச் செய்தியால் ஊரவர் தூற்றலாகிய பேச்சொலி நின்றுவிடும் எனக் கருது கின்றாள் தலைவி. பொறுமையாம் பண்பால் அப் பேச்சுக்களைப் பொறுத்திருந்து தன் காதலில் வெற்றி பெறுகின்றாள்.

..............................துறைவன்,
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே! இனியே
வதுவை கூடிய பின்றை
....
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்று இவ்வழுங்கல் ஊரே.

அகம் - 70

[அலர் - பலரும் அறியப் பழிதூற்றுதல், அம்பல் - பழித்துப் பேசுதல், வதுவை - திருமணம், ஒலிஅவிதல் - ஒலியடங்குவது]

கடலில் வலையால் மீன்வேட்டையாடுவது போல் சிறிய நீர்நிலைகளிலும் தூண்டில் போட்டு மீன்பிடிப்பது உண்டு. கரையோரமாக இருந்து கொண்டு தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் காட்சி ஒரு பெண்ணுக்கு தன் தலைவனை நினைவூட்டுகிறது. தலைவி ஒரூரிலும் தலைவன் ஒரூரிலும் வாழ்கின்றார்கள். தலைவன் இன்மையால் தலைவியினுடைய அழகெல்லாம் பாழாகின்றது. அவனோ வினைமுடியும்வரைத் திரும்புவதாக இல்லை. ஒரு பெருங்காடு; யானை ஒன்று பசியால் மூங்கிலை வளைத்துத் தின்கின்றது. திடீரென்று காட்டில் தினைப்புனம் காக்க வந்தவர்கள் கவண்கல் எறிகின்றார்கள். அக்கல் தன்மீது பட்டுவிடுமே என்ற அச்சம் யானைக்கு. அவ்வொலி கேட்டதும் தான் வளைத்திருந்த மூங்கிலை யானை விட்டுவிடுகின்றது. அம்மூங்கில் மிக வேகமாக மேலே செல்கின்றது. தூண்டில் போட்டு மீன் பிடிக்கும்போது மீன் மாட்டிக் கொள்ள மீன் பிடிப்பவன் இழுத்தால் கையிலுள்ள மூங்கில் எவ்வாறு மேலே நிமிருமோ அதுபோல யானை விட்ட மூங்கில் மேல் நோக்கிச் சென்றது. இத்தகைய யானைகள் வாழும் காட்டுக்குரிய குறிஞ்சித் தலைவன் வாராதிருக்கின்றான் என வருந்தி, தனக்குத் தெரிந்த செய்தியை உவமையாக்கிப் பாடுகின்றாள், ஒரு குறிஞ்சி நிலத் தலைவி. பெண்களும் மீன்பிடிக்கும் காட்சியை உவமையாக்கிப் பாடுகிறார்கள் எனின் அத் தொழில் உழவுத் தொழில் போல பரந்து பட்ட தொழிலாக இருந்தமை புலனாகும். இவ்வழகிய பாடலைப் பாடியவர் பெயர் கிடைக்கப் பெறாமையின் 'மீன் எறி தூண்டிலார்' என்ற இவ்வுவமையே அப்புலவர்க்குப் பெயராக அமைந்தது.

யானே ஈண்டை யேனே என்நலனே
ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டு ஒழிந்தன்றே.

குறுந்தொகை - 54

(ஏனல் - தினைப்புனம், வெரீஇ - அஞ்சி, நிவக்கும் - நிமிரும்)

உவமையாகி உள்ளத்தைப் பிணித்த தூண்டில், வாழ்வில் கற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாத அறிவுரை ஒன்றையும் நல்குகிறது. மனிதர்கள் எல்லோரும் நல்லவர்களே; சூழ்நிலையாலும் வளர்ப்பாலும் தன்னிலைமாறித் தவறான வழியில் சென்று விடுகின்றனர். அதனால் பெரும் பாவங்களைச் செய்யவும் துணிந்து விடுகின்றனர். அவற்றுள் ஒன்று சூது. ஒன்று வருமானால் நூறு இழக்க நேரிடும்.[2] தருமன் சூதாடியதால் நாட்டை இழந்தான். இந்நானிலம் உள்ள அளவும் நீங்காப் பழிகொண்டான். "சீ சீ சிறியர் செய்கை செய்தான்"[3] என்று பாரதியால் பழிக்கப் பட்டான்.

மக்களுக்குச் சூதின் கொடுமையை உணர்த்த எண்ணிய வள்ளுவர் மீன்பிடிக்கும் காட்சியைச் சூதாடுபவர்க்கு நினைவூட்டு கின்றார். தூண்டிலில் உள்ள சிறு புழுவை விரும்பித் தனது உடம்பையே மாட்ட வைத்து உயிரையும் இழந்து விடுகின்றது மீன். அதுபோலச் சிறிய ஊதியத்தை எண்ணிப் பெரும் பொருளை இழக்க வேண்டாம், ஒருவேளை தொடர்ந்த வெற்றியாக இருப்பினும் அதனை விரும்பாதீர்கள், முடிவு நல்லதாக இருக்காது என வேண்டுகோள் விடுக்கின்றார் வள்ளுவர்.

வேண்டற்க வென்றிடினும் சூதினைத் தூண்டில்
பொன்மீன் விழுங்கி யற்று.

குறள் - 931

மேற்கோள் விளக்கம்

1. குறள் - 228
ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் அவர்.

2. குறள் - 932
ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.

3. பாரதியார் பாடல்கள், பாஞ்சாலி சபதம்,
மெர்க்குரி வெளியீடு, கோவை, 1969.

18. மாண்புள்ள மரங்கள்

மனிதன் பகுத்தறிவுடையவன். மற்ற உயிர்கள் பகுத்தறியும் ஆற்றல் அற்றவை. எனினும் அவ்வுயிர்கள் தமக்கெனச் சில சிறப்புக் குணங்களைக் கொண்டுள்ளன. மற்ற உயிர்களிடமுள்ள நற்பண்புகளையெல்லாம் மனிதன் தன் பகுத்தறிவின் துணை கொண்டு கற்றுக்கொள்கிறான். அதனால் அவன் மற்ற உயிர்களைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறான். மனிதர்களிலும் பகுத்தறிவற்றவர்கள் உண்டு. அவர்கள் உருவ அளவில் மனிதர்களோடு ஒப்புமை உடையவர்களாயினும், உண்மையில் அவர்கள் மனிதர்கள் அல்லர்; விலங்குகளோடு வைத்து எண்ணக் கூடியவர்களே. ஏனெனில் அவர்களின் செயல்கள் மனிதத் தன்மையற்றவையாய் இருப்பதுதான் காரணம். அவர்களை மாக்கள் என்று கூறுவார் தொல்காப்பியர்.

'மாவும் மாக்களும் ஐயறி வினவே'
'மக்கள் தாமே ஆறறி வுயிரே'

தொல் - பொருள் - மரபு 32, 33.

மாக்கள் மக்களாக உயரவும், மக்கள் மேலும் சிறப்புற்று விளங்கவும், அஃதாவது ஐந்தறிவு ஆறறிவாக உயரவும், ஆறறிவு மேலும் விளக்கம் பெறவும், மனிதன் பிற உயிர்களிடத்திலுள்ள சிறப்புக் குணங்களைக்கற்றுக் கொள்வதோடு, உலகில் காணும் இயற்கையினைக் கூர்ந்து நோக்கியும் அறிவு பெற வேண்டும். 'புல்லும் மரனும் ஓரறிவுடையவை'[1] என்றாலும் அவற்றின் இயல்பு, புறத்தோற்றம் முதலியவை நமக்கு அறிவு கொளுத்தும் திறன் பெற்றவையாகும். மரஞ்செடி கொடிகளில், மலர், காய், கனி

களில் பெறும் அறிவுதான் எத்தனை! எத்தனை! அவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் மலர்ச்சியும் காட்டும் பண்பாடுதான் எண்ணில் அடங்குமோ?

முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படர்வதற்கு நல்ல மரங்கள் எதுவும் அருகில் இல்லை. எட்டி மரமே அதன் அருகில் வளர்ந்தோங்கி நின்றது. அதன் மீது படர்ந்தது அம்முல்லைக்கொடி. இதனை ஒரு நாள் கவிஞர் கண்டார். தான் ஒரு காவியம் படைக்கும்போது அவர்க்கு அக்காட்சி நினைவுக்கு வந்தது. நல்ல பண்புகளுடைய பருவப்பெண். அவள் பழகுவதற்கு பண்புள்ள ஆடவர்கள் யாரும் கிடைத்திலர். எட்டி போன்ற இளைஞன் ஒருவன் மட்டுமே அவளோடு பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தான். அவள் பருவமோ இளமையும் அழகும் பூத்துக் குலுங்கும் எழிலார்ந்த பருவம். அவளுக்குத் துணை வேண்டிய நிலை. அவள் ஒரு முல்லைக்கொடி. முடிந்த அளவுக்குக் கீழே நின்று படர்ந்தாயிற்று. அளவுக்கு விஞ்சி வளர்ந்து விட்டபோது அருகில் இருப்பது எட்டியே ஆயினும் அதன் மீது படர வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அதுபோல, பருவப்பெண்களைப் பண்புள்ளவர்கள் வாழும் சூழ்நிலையில் வளர்க்க வேண்டும். பண்பற்றவர்கள் அருகில் இருப்பார்களாயின் அவர்களைத் தவிர்த்துவிட வேண்டும். இல்லையேல் கொடி மரத்தில் படர்ந்தே தீரும் என்ற கருத்தை எட்டி மரத்தில் படர்ந்த முல்லைக்கொடி நமக்கு அறிவுறுத்துகின்றது.

"அருகில் உள்ளது எட்டியே ஆயினும்
முல்லைப் படர்கொடி படரும்"

மனோன்மணீயம் *1-5-22*

இது போலவே எத்தனையோ இயற்கைக் காட்சிகள் நமக்கு அறிவுரை வழங்கிப் பண்பாட்டை வளர்த்தவண்ணம் இருக்கின்றன.

கடுமையான கோடை காலம். வற்றாத ஆறுகளும் வற்றிப் போய் விட்டன. தண்ணீர் இல்லாமையால் கண்ணீரை விட்டு நாவை நனைத்துக்கொள்ளும் வெம்மை நிலவுகின்றது.[2] மிகப்பெரிய மரம்; ஆயினும் அதன் கிளைகள் எல்லாம் வாடிப்போய் விட்டன. இலை, தழைகள் எல்லாம் வெம்மை தாங்க முடியாமல் வெம்பிப் பழுத்துப் போய் விட்டன. பழுத்த இலைகளும் உதிர்ந்து மரம்

மொட்டையாக நிற்கின்றது. கோடை தொடர்ந்து நீடித்ததால் மரமும் வேர்களும் கூட வெம்பிப் போய்விட்டன. வேர்கள் காய்ந்த பின்னர் என்ன மிஞ்சும்? மரம் காய்ந்து போய் நின்ருல் அதனைப் பார்க்கும் நம்போன்றோர்க்கு என்ன தோன்றும்? எத்தனை டன் விறகாகும்? அது நமக்கு எவ்வளவு நாட்களுக்கு வரும்? என்பன போன்ற எண்ணங்கள் தாம் தோன்றும். ஆனல் கவிஞர்கள் நம்மிலும் மேம்பட்டவர்கள் அல்லரோ? இம்மரத்தின் காட்சியை உலக நிகழ்ச்சிகளோடு ஒட்டிப் பார்க்கிறது அவர் உள்ளம்.

ஒருவருக்குத் துன்பத்திலும் துன்பமானது இல்லாமை யாகிய வறுமையே[3]. அதிலும் இளமையில் வறுமைவரின் அது மிகவும் கொடுமையாகும். ஒருவன் இளமையில் வறுமை அடை யின் அவன்நிலை யாதாயிருக்குமோ, அதுபோல் இம் மரக்கிளை களெல்லாம் வாடிப்போய் விட்டன.

வறுமையை எண்ணிய மனம் வளத்தையும் எண்ணிப் பார்க்கிறது. நல்லவர்களிடம் செல்வம் சேர்வது ஊர் நடுவில் நல்ல மரம் பழுப்பதைப் போன்றது.[4] யார் வேண்டுமானலும் பழத்தை எடுத்துச் செல்லலாம். கெட்டவர்களிடம் பொருள் சேர்வது ஊர் நடுவில் எட்டிமரம் பழுப்பதைப் போன்றது.[5] சிறுமைக் குணம் உடைய சிலர் நிறைய பொருள் வைத்திருப் பார்கள். அவர்களைச் சார்ந்தவர்கள் துன்பத்திலும் துயரத்திலும் உழல்வார்கள். எனினும் அவர்கட்குச் சிறிதும் உதவ மாட்டார் கள். அது போல் மரம் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழல் தர இயலாதவாறு காய்ந்து போய் நிற்கிறது.

உலகம் பலவிதம் என்பார்கள். உலகிலுள்ள மனிதர்கள் பல்வேறு நிலையினர், பல்வேறு தரத்தினர், பல்வேறு தகுதியினர், என்பதும் உண்மையே. சிலர் யாரிடத்தும் அளவு கடந்து சென்று வரம்பு மீறிய செய்கையால் தங்கள் புகழையும் பெருமை யையும் இழந்து விடுவார்கள். அத்தகையவர்கட்கு இறுதி நேரு வது என்பது வெளிப்படை. அளவுக்கு விஞ்சிய வெப்பத்தால் வேரும் மரமும் வெம்பிப் போய்விட்டன. யாரிடத்தும் எல்லை கடந்து நடந்து கொள்பவர்களின் நிலையும் இதுதான் என்பதை இக்காட்சி அறிவுறுத்துகின்றது.

'வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப'

[சிறியவன் - கீழ்மகன், இசை-புகழ், இகந்து - எல்லைகடந்து.]

அடுத்த நிலையில் மரம் சுக்காகக் காய்ந்தே போய்விட்டது. இனி மழை பெய்தாலும், தண்ணீர் விட்டாலும் தழைக்கப் போவதில்லை, முளிந்த மரமாகி விட்டது. இக்காட்சி ஆட்சியை நினைவூட்டுகிறது கவிஞர்க்கு. கொடுங்கோலாட்சி நடக்கும் நாட்டில் மக்கள் நிலை இப்படிக் காய்ந்து போன மரம் போன்றுதான் இருக்கும். அந்நாட்டின் கொடிய அலுவலர்களை வைத்து, நெறியற்ற முறையில் குடிகள் வருந்தும்படி வரிகள் வாங்கி, மக்களைத் துன்பத்திற்குள்ளாக்குவர்; அக் கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் குடும்பமோ நாளடைவில், சினைவாடி, நிழலின்றி, வேர் வெம்பி, மரம் காய்ந்ததுபோல் அழிந்து விடும். இத்தகைய உலகியல் காட்சிகளை அறிவுறுத்துகின்றது உலறிக் காய்ந்த மரம்.

'.........விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்'

- கலித்தொகை - 10

[தெறுதல் - காய்தல், அலவுற்று-வருந்தி, ஆறின்றி - முறையின்றி, வெஃகி-கொள்ளை கொண்டு].

கோடை தீர்ந்து கார் காலம் வருகின்றது. மழை பெய்கின்றது. ஆறுகளில் நீர் நிறைந்து செல்கின்றது. மரங்கள் எல்லாம் தளிர்த்து விட்டன. எங்கு நோக்கினும் அழகுக் கோலம் கொண்டிருக்கிறது. வாடிக் கிடந்த செடிகள் வடிவழகு பெற்று விட்டன. நிலமகள் பச்சைப்பட்டுடை பூண்டது போல் தரைகள் பசுமையாய் விட்டன. நிலமகளின் அணிகலன்களாம் மரங்களும் தளிர்த்து விட்டன. மரம் தளிர்த்துக் குலுங்குகின்ற காட்சி நல்ல மனமுடைய செல்வரை நினைவூட்டுகின்றது. நல்ல மனம் படைத்தவர்களிடம் செல்வம் சேர்ந்தால் அதை அவர்களே வைத்து அனுபவிக்க மாட்டார்கள். எல்லார்க்கும் கொடுப்பார்கள்.

கொடுப்பதிலும் பண்பாடு விளங்க நடந்துகொள்ளமாட்டார்கள். அறச்செயல்களைச் செய்கின்ற நல்லோர் செல்வமும், முயற்சி உடையவர்கள் செல்வமும் நாளும் வளரும். அதுபோல மரங்கள் நாளும் தளிர்த்து வளர்கின்றன.

தளிர்த்து முகைவிட்ட மரத்தின் மலர்களை நாடிவந்த வண்டுகள் ஒலி செய்து தேனை உண்டு களிக்கின்றன. நல்லவர்களின் செல்வத்தை அவர்களைச் சார்ந்தவர்கள் எல்லாரும் உண்டு களிப்பார்கள். வண்டுகளின் ஒலி இவ்வெண்ணத்தை நினைவூட்டுகின்றது. ஆற்று ஓரங்களிலுள்ள மரங்களில் மலர்ந்த மலர்களில் சில உதிர்கின்றன. அம்மலர்களை ஆடைபோல் பூண்டு ஆறு அணிநடை இட்டுச் செல்கின்றது. கோடைகாலத்தில் ஆற்றின் தண்ணீர் மிகவும் குறைந்திருந்தது. அத்தண்ணீரால் இருமருங்கிலும் இருந்த மரங்கள் உயிர் பெற்று இருந்தன. முன்பு தமக்கு ஒருவர் செய்த உதவிக்குப் பின்பு ஒரு வாய்ப்பு ஏற்பட்டபோது உதவி பெற்றவர் கைம்மாறு செய்வது நல்லதோர் இயல்பு; இந்நன்றி மறவாமை என்னும் நற்பண்பை இம்மரங்கள் கடைப்பிடிக்கின்றன. முன்பு நிறைந்த நீரால் தம்மைக் காத்த ஆற்றிற்கு நன்றியாக இப்பொழுது தனது மலர்களை ஆடையாக அதற்குக் கொடுக்கின்றன.

> **"ஈதலின் குறைகாட்டாது அறன்அறிந்து ஒழுகிய**
> **தீதுஇலான் செல்வம்போல் தீம்கரை மரம்நந்த"**
> **"மடியிலான் செல்வம்போல் மரம்நந்த அச்செல்வம்**
> **படிஉண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுஆர்ப்ப"**
> **"முன்ஞன்று தமக்காற்றி முயன்றவர் இறுதிக்கண்**
> **பின்ஞன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர்போல்**
> **பன்மலர் சினைஉக"**

கலித்தொகை 27, 65, 34

இவ்வாறு கோடை காலத்தில் காய்ந்தும் கார் காலத்தில் தழைத்தும் நிற்கின்ற மரங்கள் பல்வேறு பண்பாடுகளை அறிவுறுத்துகின்றன. இவை இயற்கையாகத் தோன்றியவை. இயற்கையின் தாக்குதலுக்கு ஆட்பட்டவை. இவை அறிவுறுத்தும் பண்புகள் போல் மக்களால் பயன்பெறும் பொருட்டுப் பயிரிட்ட

மரம் செடி கொடிகள் நமக்கு அறிவுறுத்தும் பண்புகள் பலப்பல. புல்லும் மரமும் ஓரறிவுடையன என்ருலும், அவ்வோரறிவுயிர் காட்டும் பண்புகள் ஆறறிவுடைய மனிதர்களும் கற்றுக்கொள்ள வேண்டியவையாய் உள்ளன. ஆதலின் எதனையும் எளியது என்று ஒதுக்கிவிடக்கூடாது.

ஆதலின் ஓரறிவுயிர்கள் உணர்த்தும் அரிய கருத்துக்களை உணர்ந்து அவற்றைப் போற்றுதல் வளர்ச்சிக்கு வழியாகும். இவ்வாறு மக்களை நோக்கிக் கேட்டுக் கொள்வதை விட "மாண்புள்ள மரங்களே" நீங்கள் எவ்வகையிலேனும் மக்களைப் பண்படுத்துங்கள் என்று விண்ணப்பித்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

மேற்கோள் விளக்கம்

1. தொல்காப்பியம். பொருளதிகாரம், மரபியல், நூற்பா. 28.
2. கலித்தொகை, பாலைக்கலி, பாடல். 5.

   'தண்ணீர் பெருஅத் தடுமாற்றத் தருந்துயரம்
   கண்ணீர் நனைக்கும் கடுமைய காடென்ருல்'

3. குறள் : 1041

   இன்மையின் இன்னுதது யாதுஎனின் இன்மையின்
   இன்மையே இன்னு தது.

4. குறள் : 216

   பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருல் செல்வம்
   நயனுடை யான்கண் படின்.

5. குறள் : 1008

   நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
   நச்சு மரம்பழுத் தற்று.

19. சிலப்பதிகாரம்

'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்'

- இளங்கோவடிகள்

'கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடிமக்கள்' தமிழ்மக்கள். அவர்தம் மொழி திங்களொடும், செழும் பரிதி தன்னேடும், விண்ணேடும் உடுக்க ளோடும் மங்குல் கடல் இவற்ருேடும் பிறந்த' இயற்கை மொழி. அவர்தம் நாடு தென்குமரி முதல் வடவேங்கடம் வரை பரவி யிருந்தது. கீழைக்கடலும் மேலைக்கடலும் அவர்தம் நாட்டின் எல்லைகளைத் தழுவிக் கொண்டிருந்தன. இத்தமிழ் கூறும் நல்லுலகை,

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை-வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு [1]

எனப்பாடி மகிழ்ந்தார் பாரதியார்.

இத்தகு சிறப்புமிக்க நீண்ட நெடும் பரப்பைச் சுமார் 1800 ஆண்டுகட்கு முன்னர் சேர, சோழ, பாண்டிய மன்னராம் முடி யுடை மூவேந்தர் ஆண்டு வந்தனர்.[2] அவர்தம் நாட்டு வளத்தை, ஆட்சிச் சிறப்பை, மக்கள் மாண்பை, சேரன் தம்பி தெள்ளிய தமிழில் சீரியு காவியமாக்கினர். அது செந்தமிழுக்கு ஒரு முழு முதல் காப்பியமாகி, 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக' மலர்ந்தது.

அக்காவியத்தில். அனுபவ வெளியீடாக, தலைமை சான்ற மூன்று கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார் இளங்கோவடிகள். நாட்டில் ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டும்; இல்லையேல் அறமே அவ் வாட்சியை அழித்துவிடும்; அதற்குக் குற்றவாளி அல்லாத கோவலனைக் கொன்ற பாண்டியனே சான்று என்பது ஒன்று. ஒழுக்கத்தாலும் பண்பாட்டாலும் உயர்ந்தவர்கள் போற்றப்பட வேண்டும்; அதுவே நாட்டு மாந்தர்களை நல்லவர்க ளாக்கும் முயற்சியாகும். இன்றேல் நாட்டில் பண்பாடற்ற மக்கள் பெருகி விடுவார்கள்; இதற்குப் பொறுமையின் சின்னமாக விளங்கிய கண்ணகியின் வாழ்வே சான்று என்பது மற்றொன்று. அவரவர்கள் செய்கின்ற செயல்களின் நன்மை தீமைகள் அவ ரவர்களையே வந்தடையும் என்பதை, அக்காவியத்தில் வரும் பாத்திரங்கள் வாயிலாக விளக்கி, அதனால் மக்களுக்கு அறத்தில் நம்பிக்கை வேண்டும் என்பதற்குப் பல நிகழ்ச்சிகளைச் சான்று காட்டி வலியுறுத்துவது பிறிதொன்று.[3] இம்மூன்று கருத்துக் களும் ஒரு நாட்டில் உயிர் பெற்றுத் திகழ வேண்டுமாயின், மன்னன் ஆட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற்று விளங்க வேண்டும். வேளாண் பெருமக்கள் அவர்தம் தொழிலைச் செம்மையாக, முறையறிந்து செய்ய வேண்டும். மன்னனும் மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பது இளங்கோ வடிகளின் தெளிவார்ந்த கருத்தாகும். இதனை,

> **'புரப்போர் கொற்றமும் இரப்போர் சுற்றமும்**
> **உழவிடை விளைப்போர்'**[4] எனத் தெளிவுறுத்துகிறார்.

ஆதலின், தமது காவியத்தில் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் மிகுந்த இன்றியமையாமை கொடுக்காமல், 1,800 ஆண்டுகட்கு முன்பு சேர, சோழ, பாண்டிய நாடுகளில் நடந்த வேளாண்மை பற்றியும் அதன் நுட்பங்கள் பற்றியும் வேண்டுமிடங்களில் விளக்கிச் சென்றுள்ளார். அவர்தம் காவிய வழி நின்று நுணுகி ஆராயின் பண்டைய வேளாண்மையை ஒருவாறு அறிந்து பயன் பெறலாம்.

'நீரின்று அமையாது உலகம்' என்பது வள்ளுவம்.[5] உண்ப தற்கும் உணவாகி, உணவுப் பொருள்களையும் உண்டாக்கும் நீரின்றி விளைவுமில்லை; வேளாண்மையுமில்லை. 'மாமழை போற்

றுதும், மாமழை போற்றுதும்' எனச் சிலம்பு இயற்கையைக் கடவுள் வாழ்த்தாகக் கொண்டு சிறப்பித்தமையே அதன் பெருமையை விளக்கும். 'மாமழை போற்றுதும்' என்பதற்கு மழையை வணங்குவோம் என்று பொருள் கூறுவதை விட, மழைநீரை நன்கு சேமித்துப் பாதுகாத்துப் பயன்படுத்துவோம் என்பதே அன்றும் இன்றும் கொள்ள வேண்டிய பொருளாகும். 'பொருள் தனைப் போற்றி வாழ்' என்பதற்குப் 'பொருளைப் பாதுகாத்துச் சரியான முறையில் பயன்படுத்தி வாழவேண்டும்' என்று பொருள் இருப்பது முன்னைய கருத்தை அரண் செய்வதாகும். பிற கவிஞர்கள் இறைவனது பெருமைகளைக் கடவுள் வாழ்த்தாகப் பாடும் நிலை இருந்த அக்காலத்தில் இளங்கோவடிகள் அதனை விடுத்து இயற்கையை வழிபடு பொருளாகக் கொண்டு வாழ்த்திப் பாடியுள்ளமை ஆழ்ந்து உணர்தற்கொன்றாகும். ஞாயிற்றின் வெம்மையும், திங்களின் தண்மையும், மழைதரும் நீரும், நாட்டின் வளமும் ஆகிய இயற்கை வளத்தினை (Natural resources) வீணாக்காமல் போற்றித் தக்க வழியில் பயன்படுத்த வேண்டும் என்பது இளங்கோவின் கருத்து என்பதை அறிதல் வேண்டும். மேலை நாடுகளில் சூரியனின் வெம்மையைச் சேமித்துப் பயன்படுத்தும் நிலை வளர்ந்துள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மற்ற வளங்களையும் பயன்படுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை. இந்தியப் பெருநாட்டில் கற்பனை என்று கருதுவது எல்லாம் மேலை நாடுகளில் செயலாக மலர்வதை உணர்ந்தேனும் நம் முன்னோர்கள் கூறிய கருத்துக்களைப் போற்றிப் பயன்படுத்த வேண்டும். பண்டைய கருத்துக்களில் புதைந்துள்ள ஆழமான உண்மைகளை அறிய அவற்றில் அறிவியல் முறையில் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

சோழநாடானது இன்றுள்ள தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் சேர்ந்த பகுதியாகும். இந்நாட்டினை வற்றாத வளம் சுரக்கும் நாடாக்கிய பெருமை காவிரியாற்றிற்கு உண்டு. மேற்கு மலையிலே பிறந்து, கடலை நோக்கி, இருமருங்கும் வண்டுகள் சிறந்தார்ப்ப, பூவாடை போர்த்து, கரை தொட்டு மீன் விளையாட, தரைமுட்டிப் பொன்கொழித்து, வற்றாது ஓடி, வளம் சேர்க்கும் பெருமை கொண்டது. குழந்தைக்குப் பால் நினைந்து ஊட்டும் தாயைப் போல், சோழ நாடாம் குழந்தையைக் காவிரி அன்னை பேணி வளர்த்தாள்.

'வாழி அவன்தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி

எனக் காவிரி செய்துவரும் உதவிக்கு வாழ்த்துக் கூறுகிறார் இளங்கோ அடிகள்.

காவிரி பாய்வதால் சோழ நாட்டின் வளவயல்கள் வண்டல் நிறைந்து வளஞ்சான்று விளங்கின. வற்றாத நீர் வளத்தால் அந்நாட்டில் முப்போகமும் பொருள்கள் விளைந்தன. ஒரு பகுதியில் உழவு நடைபெறும்; இன்னொரு பகுதியில் நாற்று நடுகின்ற காட்சி; மற்றோர் ஊரில் பெண்கள் களை எடுக்கின்ற காட்சி; விளைந்து முற்றிய நெற்கதிர்களை அறுவடை செய்கின்ற காட்சி; நெல்லைப் பொலி விட்டுக் களத்திற்கு வருகின்ற எளியோர்க்கு வழங்குகின்ற பண்பாட்டுக் காட்சி; வைக்கோல் புரியிட்டுக் குதிர் போலக் கட்டிவைத்த கூட்டில் எருமை உராய, அதிலுள்ள நெல்லானது விளைந்த வயல்களில் கொட்டுகின்ற காட்சி, இவ்வாறு பல்வேறு காட்சிகளை 300 கல் நீளமுள்ள சோழ நாட்டின் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைவரை செல்பவர்கள் காணலாம்.[7] ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம், விதைப்பதுவும் அறுப்பதுவும் மாறுபட்டு இருந்தது என்பது இதனால் அறியப்படுகின்றது. அன்றியும் நீர்வளம் மிகுந்திருந்ததால் ஆண்டு முழுமையும் விதைப்பதுவும் விளைப்பதுவும் அறுப்பதுவுமாகத் தொடர்ந்து தொழில் செய்துவந்துள்ளார்கள். நீர்வளம் மிகுந்துள்ள பகுதிகளில் உரிய பருவத்தில் உரிய பயிரைப் பயிரிட்டுக் காலத்தை வீணாக்காமல் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது தெளிவாகின்றது.

சோழநாட்டில் நீர்வளம் மிகுந்திருந்ததால் நெல்லை மட்டுமே மக்கள் பயிர் செய்தார்கள் என்று கொள்வதற்கில்லை. கரும்பு, இஞ்சி, மஞ்சள் முதலாய பணப்பயிர்களையும் (Commercial crops) பயிர் செய்தார்கள். இன்றைய முறையில் கூறின், பயிர்ச் சுழற்சி முறையை (crop rotation) மேற்கொண்டு இருந்தார்கள் என்பது பொருந்துவதாகும். சோழநாட்டில் விளைவிக்கப்பட்ட கரும்புகள் நீண்டு உயர்ந்து திரண்டிருந்தன. செழிப்பு மிக்க கரும்புத் தோட்டத்தில் தேனீக்கள் கூடுகட்டி இருந்தன என்பது

கரும்பின் செழுமைக்குச் சான்ருகும். கரும்பில் சாறு பிழிந்து கட்டி செய்யும் வேலை இடையருது நடந்து கொண்டிருந்தது. ஆலையின் அடுப்பிலிருந்து வெளிக்கிளம்பும் புகை உழவர் வாழும் ஊரைச் சூழ்ந்து கொள்ளும். அவை மலையைச் சூழ்ந்த மேகம் போல் தோன்றும்.[8] இக்குறிப்பு அந்நாட்டு உழவர் பெருமக்க ளுக்கு ஆண்டு முழுமையும் ஏதேனும் ஒருவகையில் தொழில் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது என்பதை உணர்த்து கின்றது.

சோழநாடு முழுமையும் நீர்வளம் பெற்றிருப்பினும் சிற்சில பகுதிகளில் பிற பயிர்களும் விளைவிக்கப்பட்டன. தோட்டக்கால் நிலங்களில் சர்க்கரைவள்ளிக்கிழங்கு பயிரிட்டனர். இஞ்சியும் மஞ்சளும் செழித்து வளர்ந்து பின்னிப் பிணைந்து கிடந்த காட்சி கண்ணுக்கினிய காட்சியாகும். தென்னை மரங்களும் பலாமரங்களும் சண்பக மரங்களும் சோழநாட்டுச் சோலைகளை அணிசெய்தன. அச் சோலைகளின் நிலங்களையும் வீணுக்காமல் அவற்றில் வளரத் தகுந்த பயிர்களாகிய மஞ்சள் முதலியவற்றைப் பயிரிட்டுப் பய னுடையதாக்கிக் கொண்ட பண்டையோர் வேளாண்மை நுட்பம் போற்றற்குரியதாகும். இன்று இத்தகைய முறையினை ஊடுபயிர் முறை (inter - cropping) என்று குறிக்கின்ரேம். இக்கருத்துக்களை நோக்க, பயிர் செய்வதற்கென்று திருத்தப்பட்ட நிலங்களைச் சிறிதும் வீணுக்காமல் பயன்படுத்தியுள்ளமை புலனுகின்றது.

சோழநாடு வற்ருத காவிரியைப் பெற்றிருப்பினும் எல்லா இடங்களுக்கும் சென்று அந்நீர் பாய்வதில்லை. சிறுபான்மை ஆற்று நீர் பாயாத இடங்களுக்குஆம்பி, கிழார், ஏத்தம், பிழா முதலியகருவி களையும் பல்வேறு முறைகளையும் மேற்கொண்டு நீர் இறைத்துப் பயி ரிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.[9] இவற்றுள் ஆம்பி, கிழார், ஏத்தம் என்னும் மூன்றும் சிறுசிறு வேறுபாடுகள் கொண்ட ஏற்றம் இறைத்து நீர்பாய்ச்சும் முறைகளாகும். பிழா என்பது கையால் கூடையைக் கொண்டு நீர் இறைப்பது. இன்று இதனை இறைகூடை என்று வழங்குவர். இக்கருவிகளால் உண்டாகும் ஓசையைச் சோழநாட்டில் கேட்பது அரிதேயாகும். மாருக, புது நீரைக் கண்ட உழவர்களின் ஆரவாரம், மதகிலிருந்து தண்ணீர் வெளிவரும் ஓசை, உடைத்துக் கொண்டு போகும் நீரைத்தடுத்துக் கட்டுவதால் ஏற்படும் ஓசை, ஆகிய இத்தகைய ஒலிகளையே

கேட்கலாம். இவ்வாறு சோழநாட்டு வேளாண்மை நீர்வளத்தால் சிறப்புற்று விளங்கியது.

பாண்டிய நாடென்பது இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்நாடு பெரும்பான்மையும் முல்லை நிலப்பரப் பாகும். சிறுபான்மை மலையும் மலைசார்ந்த குறிஞ்சி வளமும், வையை பாய்வதால் மருதவளமும் உண்டு. முல்லையில் வறட்சி யைத் தாங்கும் ஐவனம் என்ற ஒரு வகை நெல்லும், தோகைகள் குறைந்த கரும்பும் பயரிடுவர். இவை, நீர்வளத்திற்கேற்ப அவர்கள் மேற்கொண்ட பயிர்வகைகள் ஆகும். தினையும், வரகும் பாண்டிய நாட்டின் மானுவாரிப் பயிர்களாகும். வெள்ளை வெங் காயமும், கவலைக்கிழங்கும் அவர்தம் தோட்டக்கால் பயிர்கள். நீர் வளஞ்சான்ற வையையாறு பாயும் பகுதிகளில் மஞ்சளும் வாழையும் தென்னையும் பயிர்செய்தனர். மாவும் பலாவும் அந் நாட்டின் கனி மரங்கள்.

> **''ஐவன வெண்ணெலும், அறைக்கண் கரும்பும்,**
> **கொய்பூந் தினையும், கொழும்புன வரகும்,**
> **காயமும், மஞ்சளும், ஆய்கொடிக் கவலையும்,**
> **வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்**
> **மாவும் பலாவும்''**

எனக் கவிதை நயம் தோன்ற விளைபொருள்களை அடுக்கிக் கூறு கின்றார் இளங்கோ வடிகள். மேலும் வேளாண்மைத் துணைத் தொழிலாக விளங்கும் பால்பண்ணைகள் பாண்டிய நாட்டில் மிகுந் திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாண்டிய நாடு முல்லை நில அமைப்புடையதாயினும் வையையாறு பாய்ந்து நாட்டின் பல பாகங்களையும் வளமுறச் செய்தது. வையையின் வளமார்ந்த பகுதிகளில் நெல்லும், கரும்பும், தெங்கும், கமுகும், வாழையும் பயிரிடப்பட்டன. வையை யாற்றின் இரு மருங்கும் வானளாவ வளர்ந்தோங்கிய மரங் களைக் கூறும் முகத்தான் ஆற்றங்கரையில் வளர்க்க வேண்டிய மரங்களை இனங்கண்டு கூறுகின்றார் இளங்கோ அடிகள். குரவமும், மஞ்சாடியும், மருதும், செருந்தியும், சண்பகமும் ஆற்றங்கரையில் வளர்ப்பதற் கேற்றனவாகும். இவை ஆற்றங்கரைகளில் அரிப்பு

ஏற்படாமல் காத்ததோடு பல்வகை மரச் சாமான்கள் செய்தற் கேற்ற பயனுள்ள மரங்களாக விளங்கியமையும் குறிப்பிடத் தக்கது.[10]

மதுரைப் பெருநகரில் பல்வேறு வகையான பொருள்களை விற்கும் அங்காடிகள் இருந்தன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று கூல அங்காடியாகும். அவ்வங்காடி ஒரு தனித் தெருவாகவே அமைந்திருந்தது. அது தானியங்கள் விற்பதற் கென்றே அமைந்த சிறப்பு அங்காடித் தெருவாகும். அதில் பதினறு வகைத் தானியங்கள் விற்கப்பட்டன. நெல், புல் (புல்லரிசி) வரகு, தினை, சாமை, இறுங்கு (சோளம்), தோரை (குளநெல்) இராகி, ஆகிய எட்டுவகை உணவுத் தானியங்களும், எள், கொள்ளு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, முதிரை (தட்டைப்பயறு) ஆகிய பயறு வகைகளும் அவ்வங் காடியில் விலையாயின. இவற்றைக் 'கூலங் குவித்த கூலவீதியும்' என்று குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள்.[11] இவை அனைத்தும் பாண்டிய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விளைந்த விளை பொருள்கள் என்பதைச் சுட்டவே மதுரை மாநகரத் தெருக்களில் தானியங்கள் விற்ற செய்தியையும் குறிப்பிட்டுள்ளார் என்று கருத லாம். இதனால், குறிப்பாகப் பாண்டிய நாட்டில் விளைந்த பல்வேறு பொருள்களையும், பொதுவாகத் தமிழக விளைபொருள்களையும அறிய முடிகின்றது.

பாண்டிய நாட்டில் கறவைகளை வைத்துப் பால் கறந்து விற்று வாழ்ந்த செய்தி சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களில் ஆயர் எனப்படும் ஓர் இனத்தினர் ஆடு மாடுகளைப் போற்றி வளர்த்தனர். பால்பண்ணை என்று குறிப்பிடும் அளவிற்கு ஒவ்வோர் இல்லத்திலும் ஏராளமான கறவைகளை வைத்திருந் தனர். பாலைக்கறந்து காய்ச்சிப் பெரிய குடத்திலிட்டுப் பிறை விட்டுத் தயிராக்குவதும், பின்னர் அவற்றைக் கடைந்து வெண் ணெய்யும் மோரும் விற்பதும் அவர்கள் மேற்கொண்ட வாழ்க்கைத் தொழிலாகும். இதனைக் 'குடப்பால்', 'உறிநாறு வெண்ணெய்'[12] என்பன போன்ற சொற்களால் அறியலாம். அன்றியும் கறவைக்கும் கன்றுக்கும் ஏதேனும் நோய் ஏற்படினும் கடவுளை வணங்கி அவற்றின் துன்பத்தைப் போக்க வேண்டுவதும் உண்டு.

**'குரவை யாடுதும் யாம் என்ருள்
கறவை கன்றுதுயர் நீங்குக எனவே'** [13]

எனப் பெற்ற பிள்ளைகளைப் போல் பசுக்களைப் போற்றினர். இச் செயல் அவர்கள் கால்நடைகளைப் பேணி வளர்த்த பண்பினைக் காட்டுவதாக உள்ளது.

நீர் வளங்குன்றி உழவுத்தொழில் செய்ய முடியாத பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சிற்சில வேளைகளில் வேறு வழியின்றி வழிப்பறிக் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்த செய்தி சொல்லப்படுகின்றது. பாண்டிய நாட்டின் சிலபகுதிகளில் மழையுமின்றி, நீர் வளமும் குன்றிக் காய்ந்து போன காலமும் உண்டு. ஓராண்டு ஈராண்டன்றிப் பல்லாண்டுகள் காய்ந்து போன முல்லை நிலமோ குறிஞ்சி நிலமோ பாலை எனப் பெயர் பெறும்.

**'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'** [14]

அந்நிலம் வெம்மையைத் தாங்க முடியாமல் பாளம் பாளமாகப் பிளந்து போவதுண்டு. அந்நிலத்திலுள்ள மரங்கள் வெம்பிக் காய்ந்துவிடும். அங்குள்ள மக்கள் தொழில் ஏதுமின்றி வேட்டையாடத் தொடங்கி இறுதியில் எதுவும் முடியாமையால் வருவோர் போவோரிடம் வன்தொழிலில் ஈடுபடும் நிலை ஏற்படுவதுண்டு. வேளாண்மைத் தொழில் செழுமையாக நடைபெறுகின்ற பகுதிகளில் இத்தகைய தீமைகள் நிகழ்வதில்லை. இந்நிலை மருதநிலத்தில் வாழ்வோருக்கும் நெய்தல் நிலத்தில் வாழ்வோருக்கும் ஏற்படவில்லை. ஏற்பட்டதாக வரலாறும் இல்லை. இத்தகைய நிலைக்கு ஆளாகியவர்களை 'மாரி வளம்பெரு வில்லேர் உழவர்' [15] என்று குறிப்பிடுகின்ருர் இளங்கோவடிகள். ஆதலின் பண்பாடு நிலைக்கப் பயிர்த்தொழில் செழிக்க வேண்டும்; அதற்கு நீர்வளமும் நில வளமும் ஒருங்கே அமையப் பெற வேண்டும் என்பதைச் சிலம்பு வலியுறுத்துகின்றது. இவை பாண்டிய நாட்டில் நிகழ்ந்த வேளாண்மை பற்றிய குறிப்புகளாகும்.

பண்டைத் தமிழ்மக்கள் மலர்களைப் பெரிதும் போற்றினர். மலர்களைப் பயன்படுத்தும் வாழ்வு மகிழ்ச்சி நிறைந்த பண்பட்ட வாழ்வாகும். கடற்கரைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்

திலும் வையையாற்றங்கரையிலும் பூத்துக்குலுங்கி மணங்கமழ்ந்த மலர்களை இளங்கோ கவின்படக் கூறுகின்றார், செங்கழுநீரும், ஆம்பலும், குவளையும், தாமரையும், நெய்தலும், தாழிக்குவளையும், இல்வளர் முல்லையும் காவிரிப்பூம்பட்டினத்தில் மணம் பரப்பின. குருக்கத்தியும், செம்முல்லையும், மோசிமல்லிகையும், வெள்ளை நறுந் தாளியும், வெட்பாலையும், குட்டிப்பிடவமும், இருவாட்சியும், மல்லிகையும், முல்லையும் வையைக் கரையில் அரும்பி மலர்ந்தன.

மாதவி கோவலனுக்கு எழுதிய 'மலர்க்கீடிதம்' இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. சண்பகம், மாதவி, பச்சிலை, பித்திகை, மல்லிகை, செங்கழுநீர் ஆகிய பன்மலர்களால் தொடுத்த மாலையின் இடையில் தாழை மடல் விரித்து, செம்பஞ்சுக் குழம்பு தோய்த்த பித்திகைக் கொழுமுகையாம் ஆணி கொண்டு விவரிக்க முடியாத தனது அன்பு மொழிகளை விரித்து எழுதினாள்:

'சண்பகம், மாதவி, தாமலம், கருமுகை,
வெண்பூ மல்லிகை, வேரொடு மிடைந்த
அஞ்செங் கழுநீர், ஆயிதழ்க் கத்திகை
..
முதிர்பூந் தாழை முடங்கல் வெண்தோட்டு
..
பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு
..
விரியா மழலையின் விரித்துரை எழுதி'

எனவரும் சிலம்பின் அடிகள் கொண்டு செல்வச் செழிப்புமிக்க இல் லங்களில் மலர்கள் பயன்படுத்தப்பட்ட முறையினை அறியலாம்.

சேர நாடு என்பது இன்றுள்ள கொச்சி, திருவிதாங்கூர், மலையாள மாவட்டம் ஆகிய பகுதிகள் சேர்ந்த மேலைக்கடற்கரை நாடாகும். மேகஞ்சூழ்ந்த மலைத் தொடர்களும் குன்றுகளும் சோலைகளும் நிறைந்த சேரநாடு குறிஞ்சி வளம் நிறைந்ததாகும். இயற்கைச்சூழலுக்கு ஏற்ப அந்நாட்டு மக்கள் மலைபடு பொருள் களை மிகுதியும் விளைவித்தார்கள். நீர்வளமும் நிலவளமும் பொருந் திய மலைகளிலும் மலைசார்ந்த பகுதிகளிலும் மலைபடுபொருள்கள் நன்றாக விளைந்தன. பேரியாறு பாய்ந்தும் சேரநாட்டைச் செல்வ மிகு நாடாக ஆக்கியது. சேரன் செங்குட்டுவன் தன் மனையா ளொடு மலைவளம் காணச் சென்ற பொழுது, அம் மலைவாழ் மக்கள்

அங்கு விளைந்த பொருள்களை அரசனுக்குக் காணிக்கையாக்கி மகிழ்ந்தனர்.

காணிக்கைப் பொருள்களில் ஏலக்கொடி, மிளகுக்கொடி, கூவைக் கிழங்கின் கொடி, கவலைக்கொடி, பல்வேறு வகையான பூங்கொடிகள் முதலிய கொடி வகைகளும், தேங்காய் நெற்று, மா, பலா, வாழை முதலிய கனிவகைகளும், பாக்குக்குலை, வெங்காயம், கரும்பு, முதலிய பல்வேறுபட்டவைகளும் குறிப்பிடத் தகுந்தவை யாகும். அவற்றை,

"ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்"

என ஓவியமாக்கிக் காட்டுகிறது சிலம்பு. இத்தகு பொருள் களையும் கொடிகளையும் காணிக்கையாக வைத்ததில் ஒரு குறிப்பு உண்டு. இவை அப்பகுதியின் விளைபொருள்களுள் மிகவும் உயர்ந்தவை என்பதோடன்றி, இவைகளைப் பேரியாறு பாயும் வளஞ்சான்ற பகுதிகளிலும் பயிரிட வேண்டும் என்னும் கருத்தை உள்ளடக்கியதாகக் கொள்ள இடமுண்டு. உள்ளதைக் கொண்டு அதிகம் விளைவிக்கும் **பசுமைப்புரட்சித் திட்டம்** போல் அக்கால மக்கள் இயற்கை வளத்தைப் பயனுடையதாக்கி வாழ்ந்தார்கள் என்பதை இந்நிகழ்ச்சி வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம். உணவுப் பொருள் வகைகளேயன்றி மலைவாழ் விலங்கினங்களையும் பறவைகளையும் பிடித்துப் பயன்பெற்றும் சந்தனமரம் முதலிய மர வகைகளைப் பேணியும் கான்வளம் போற்றினர் என்பதும் அறியக் கிடக்கின்றது.

சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றும் கடல் சார்ந்த நாடுகளாகும். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வளத்தில் சிறந்தி ருந்ததெனினும் கடல்வளம் மூன்று நாட்டிற்கும் பொதுவாக அமைந்த சிறப்புக்கூறாகும். சேர நாட்டிற்குத் தொண்டியும், சோழ நாட்டிற்குக் காவிரிப்பூம்பட்டினமும், பாண்டிய நாட்டிற்

குக் கொற்கையும், துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. வரலாற்றுச் சிறப்புமிக்க அத்துறைமுகப் பட்டினங்களில் கடல் வாணிகம் சிறப்புற்று விளங்கியதோடு, அக்கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மீன் பிடிப்பதையும், அவற்றைப் பக்குவப் படுத்துவதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். தலைவன் ஒருவன் தன்தலைவியின் அழகில் ஈடுபட்டு, அவள் அழகு தன்னை வருத்துவதாகப் பாடும் பகுதியில், அம்மக்கள் கடலில் சென்று மீன் பிடிப்பதையும் அதற்குப் பெரிய வலைகளையும் படகுகளையும் பயன்படுத்தியதையும் குறிப்பிடுகின்றான்.

'கடல் புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல் புக்கு உயிர் கொன்று வாழ்வை மன் நீயும்'

'கொடுங்கண் வலையால் உயிர் கொள்வான் நுந்தை
நெடுங்கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும்'

'ஓடும்திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்
கோடும் புருவத்துயிர் கொல்வை மன் நீயும்'

எனும் வரிகள் அத்தலைவனின் வருத்தம் தோய்ந்த அன்பின் மொழிகளாகும்.

ஆடவர்கள் கடலின் நெடுந்தொலைவில் சென்று மீன்பிடித்துவர, அவற்றை விலைகூறி விற்பதும், எஞ்சியவற்றைப் பக்குவப் படுத்தி வைப்பதும், பெண்டிரின் கடமையாக இருந்தது. மீனை உலரவைத்துப் பக்குவப் படுத்துவதை; 'மீன் உணக்கல்'[16] என்று குறிப்பிடுகின்றது சிலம்பு. இன்று மீன்வளம் பெருக்கப் பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொள்வதைப் போன்றநிலை அன்று இல்லையெனினும், தமிழகத்தின் கடல் சார்ந்த பகுதிகளிலும் மருதநில நீர்நிலைகளிலும் மீன்பிடித்துப் பயன்கொண்ட செய்தி அறிந்து மகிழ்தற்குரிய தொன்றாகும். நீலப்புரட்சி சிலப்பதிகார காலத்திலேயே கால்கொண்டது எனின் அது மிகவும் பொருந்துவதாகும். நெய்தல் திணைக்கு உரிப்பொருள் இரங்கல் என்பதாகும். நீர்மேல் வாழ்க்கை நடாத்தும் மீனவர் நிலை இன்னும் இரங்கத்தக்கதாகவே உள்ளது. அறிவியல் முறையில் அதற்கோர் தீர்வுகாண வேண்டுவது வேளாண் அறிவியலார் கடமையாகும்.

தொழில் அடிப்படையில் சமுதாயப் பிரிவு என்ற நிலை பண்டைக்காலந்தொட்டே இருந்து வருவதொன்றாகும். சிலப்பதிகார காலத்திலும் இந்நிலை நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பது தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இன்றைய நாளில் ஊதிய அடிப்படையில் குடியிருப்புகள் அமைக்கப்படுவதைப் போல் அந்நாளில் பல்வேறு தொழில் செய்வோர் வாழும் தொழிலாளர் பகுதி ஒன்றாகவும், அரசனும் அரசனைச் சார்ந்த அமைச்சர் முதலாயினோர் வாழும் பகுதி வேறொன்றாகவும் இருந்தன. இவ்விருவேறு பகுதிகளில் உழவர்கள் குடியிருப்பு அரசர் வாழும் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. உழவர்களிலும் இரு நிலையினர் இருந்துள்ளனர். அவர்களுள், நிலக்கிழார்கள் எனப்படும் நிலவுரிமை உடையோர் ஒரு சாரார். அவர்கள் அரசனால் போற்றப்படும் தகுதியுடையோராய் விளங்கினர். அவர்களைப் பலரும் விரும்பும் உழவர் பெருங்குடி மக்கள் என்னும் பொருளில் 'வீழ்குடி உழவர்' எனவும் சிறப்பித்துப் பாடுகிறது சிலப்பதிகாரம்.[17] மற்றொரு சாரார் 'களமர்' எனப்படுவோர் ஆவர்.[18] அவர்கள் பல்வேறு தொழிலாளர் வாழும் பகுதியில் வாழ்ந்தனர். அவர்களும், அவர்தம் பெண்டிரும் வயல்வேலைகளில் முழுமையாக ஈடுபட்டு உழைத்தனர்.

இவ் விருவேறு நிலை, சமுதாயத்தில் மாற்றியமைக்க முடியாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. எத்தகைய மாற்றங்கள் வாய்த்தாலும் அறிவாற்றல் வாய்ந்தவர்கள் உயர்ந்தும், அவ்வாற்றல் குறைந்தவர்கள் தாழ்ந்தும் போய் விடுதல் கண்கூடு. இவ் வேறுபாடுகளிடையேயும் பண்டை நாளில் ஓர் ஒருமைப்பாடு இருந்துள்ளது. எல்லோரும் மன்னர்க்காக உழைக்கின்றோம், மன்னர் நாட்டைக் காக்கின்றார் என்ற பொது உணர்வாம் மனவொருமைப்பாடு இருந்தது. ஆதலின், இவ் வேறுபாடுகளை மனதில் கொள்ளாமல் செய்யும் தொழிலைத் தெய்வம் எனப் போற்றினர். ஆற்றில் புதுவெள்ளம் வந்தபோதும், உழவு செய்யும் போதும், நடவு நடும்போதும், அறுவடையின் போதும் மகிழ்ச்சியாகத் தொழில் செய்தனர். செய்யும் தொழிலில் ஒரு மனநிறைவைக் கண்டனர். அவர்கள் உலகிற்கு அச்சாணியாக விளங்கியமையின் மக்களால் போற்றப்பட்டனர்.

நாடு முழுமையும் உழவுத் தொழிலே பெரும்பான்மை யானதாக விளங்கியதால் புலவர்கள் பாடும் கவிதைகளிலும் உவமையாகவும் உருவகமாகவும் அத்தொழிலின் கூறுபாடுகள் வெளிப்பட்டன. 'மனிதர்கள் தாங்கள் செய்யும் செயலுக்கு ஏற்ப, நன்மை தீமைகள் வந்தடையும் என்பதை 'இட்டவித்தின் எதிர் வந்து எய்தி' என விதையைச் செயலுக்கு உவமையாக்கிக் கூறி மகிழ்கின்றார் இளங்கோவடிகள். 'மறையோன் ஒருவன் தன் நாவாகிய ஏரால், அரசன் செவியாகிய வயலில் உழுது, வேதக் கருத்துக்களாகிய விதையை விளைவித்தான். அது பெரும்பயனை அளித்தது' எனக் கூறியிருப்பது உழவுத் தொழிலுக்கு இலக்கியம் தரும் ஏற்றமாகும்.

'மறையோன் மறைநா உழுது வான்பொருள்
இறையோன் செவிசெறு வாக வித்தலின்
வித்திய பெரும்பதம் விளைந்து பயன்மிகுத்து'
சிலம்பு - வஞ்சி - நடுகல் - *187 - 189*

இவ்வாறு மூவேந்தர் ஆண்ட பரந்து பட்ட தமிழகத்தில் வேளாண்மை சிறப்புற்று விளங்கியதையும், மற்ற பிற நிலைகளையும் அறிந்து பண்டைய நடைமுறைகளில் இன்றைக்கு ஏற்பனவற்றை மேற்கொண்டு வளரும் வேளாண்மைக்கு வழி கோலுவதே பண்டைய பெருமைகளை நினைவு கூர்வதன் நோக்கமாகும்.

மேற்கோள் விளக்கம்

1. பாரதியார் கவிதைகள், செந்தமிழ்நாடு, பாடல். 5
2. 1800 ஆண்டுகள் என்றது சிலப்பதிகார காலத்தை. (கி. பி. 176-193)
   தமிழ் இன்பம், சிலம்பின் காலம், பக்கம். 54
   டாக்டர் சேதுப்பிள்ளை. 1948.
3. அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதும்
   உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
   ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்'
   சிலம்பு - பதிகம் -55-57
4. சிலம்பு, நாடுகாண் காதை, வரி. 149—150.
5. திருக்குறள். 20
6. சிலம்பு, நாடுகாண்காதை, வரி 106—108
7. ,, ,, வரி 120—135
8. ,, ,, வரி 151—52
9. ,, ,, வரி 110—111
10. சிலம்பு புறஞ்சேரியிருத்த காதை, வரி 151—154
11. ,, ஊர்காண் காதை, வரி. 211.
12. ,, ஆய்ச்சியர் குரவை, பாடல். 2, 3
13. ,, ஆய்ச்சியர் குரவை, கருப்பம். 5.
14. சிலம்பு காடு காண் காதை, வரி. 65—67.
15. ,, காடுகாண் காதை, வரி. 210.
16. ,, கானல் வரி, பாடல். 10.
17. ,, இந்திரவிழவு ஊர் எடுத்தகாதை, வரி. 44
18. ,, நாடு காண் காதை, வரி. 125.

20. ஏர் எழுபது

ஏர் எழுபது என்பது பயிர்த்தொழில் பற்றிக்கூறும் 70 செய்யுட்களைக் கொண்ட நூல் என்று பொருள்படும். கம்பரால் இயற்றப்பட்ட இந் நூல் பாயிரப் பகுதியில் பத்து செய்யுட் களையும், நூற்பகுதியில் 69 செய்யுட்களையும் உடையது. கம்பர் இராமாயணம் எனும் காவியமேயன்றி சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, சிலை எழுபது, திருக்கை வழக்கம் ஆகிய சிறு நூல்களையும் இயற்றினர் என்பது ஒரு வழக்கு. இவரது காலம் 9 ஆம் நூற்றாண்டு என்றும் 12 ஆம் நூற்றாண்டு என்றும் இருவேறு கருத்துக்கள் இருப்பினும் 12 ஆம் நூற்றாண்டு என்பதே பெரும்பான்மையான ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட கருத்தாகும்.[1]

தொல்காப்பியத்தில் வரும் 'இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்'[2] எனும் நூற்பாவிற்கு வேதம் ஒழிந்தன ஓதலும், ஈதலும், உழவும், நிரையோம்பலும், வாணிகமும், வழிபாடும் ஆகிய அறுவகை இலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்[3] என உரை வகுக்கப்பட்டுள்ளது. வேளாளர் அறுவகைப்பட்ட இலக்கணமுடையரேனும்

> "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"[4]

என்ற மற்றொரு நூற்பா உழவர்க்கு உரியது உழுதொழில் என் பதை வரையறுத்துக் கூறுகின்றது. ஐயனரிதனரின் புறப்பொருள்

வெண்பாமாலையிலும் இக்குறிப்பு காணப்படுகிறது.[5] இவ்விலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டதே ஏர் எழுபது. தன்னைப்புரந்த சடையப்ப வள்ளலைப் பெருமைப்படுத்து தற்பொருட்டு பாடப்பட்டு அவர் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகின்றது.[6]

இலக்கை (குறிக்கோளை) உடையது இலக்கியம். ஏதேனும் ஒரு குறிக்கோளைத் தாங்கி நிற்காத இலக்கியம் நிலைபேறுடையதாகாது. ஏர் எழுபது ஒப்பற்ற குறிக்கோளைக்கொண்டுள்ளது. உழவுத் தொழிலின் மேன்மையையும் உழவரின் சிறப்பையும் எடுத்து இயம்புகிறது. உழவியல் முறைகள், கருவிகள் முதலியவற்றையும் விளக்கி ஒவ்வொருவரும் தொழிலில் கொள்ள வேண்டிய ஈடுபாட்டை வற்புறுத்துகின்றது. இவ்வகையில் இந்நூல் பயன் இலக்கியத்தைச் (applied literature) சார்ந்ததாகின்றது.

உழவுத்தொழில் உடலை வருத்திச் செய்ய வேண்டிய தொழில். எனினும் அது மக்களின் உயிர்த்தொழிலாக விளங்குகின்றது. மன்னர் ஆட்சியும் மக்கள் வாழ்வும் உழுதொழிலைச் சார்ந்தே நடைபெறுகின்றது. கலையும், பண்பாடும் விளங்க உழுதொழிலே காரணமாகின்றது. உலக விளக்கத்துக்கு ஒளியாக விளங்குவதும் உழவுத்தொழிலே. இக்கருத்துக்களை 'செங்கோலை நடத்தும்கோல் ஏரடிக்கும் சிறுகோலே' 'ஏர் நடக்குமெனில் புகழ்சால் இயலிசை நாடகம் நடக்கும்', 'உலகெலாம் ஒளி விளங்கும் உழவருழும் உழவாலே'[7] என்ற தொடர்களால் வலியுறுத்துகின்றார் கம்பர்.

உழவர்களின் சிறப்பு அளவிடற்குரியதன்று. அது தொகுப்பின் எஞ்சும்; விரிப்பின் பெருகும். உலகுக்கு உயிர் கொடுப்போர் உழவரே. அத்தகையோரைப் போற்றுவது உலகின் கடமையாகும். அவர்கள் மன்னர்க்கும் மன்பதைக்கும் எவ்வெவ்வகையில் பயனாய் விளங்குகின்றார்கள் என்பதை விளக்குகின்றார் கம்பர். 'நிலமும், நீரும் வாய்த்திருப்பினும் உழவர் உழுதாலன்றி உலகு வளம் பெறாது. மேழியால் விளைவதன்றி வேறொன்றால் விளையாது. ஏர் விழா இல்லையாயின் மன்னர்தம் போர்விழா

இல்லை. உழவரின் நாற்றுமுடியே மன்னரின் மணிமுடியைக் காக்கின்றது. இவ்வளவும் ஏன்? உலகுக்கு அறிவுரை வழங்கும் புலவரும் மற்றையோரும் உழவரை எதிர்நோக்கியே வாழவேண்டியுள்ளது[8], என உழவரின் சிறப்பைப் பலபட விரித்துரைக்கின்றார்.

உழவர்கள் பண்பாடு மிக்கவர்கள். உலகின் ஓட்டம் தங்களால் நடைபெறுகிறது என்றபோதும் அதுபற்றித் தன்முனைப்புக் கொள்ளாதவர்கள், கடமையை மறவாது போற்றுபவர். 'மழை வளம் குன்றிய காலத்தும் ஏற்றம் வைத்து இறைத்து உலகைக் காக்கும் பண்பாளர். வேண்டுவோர் வேண்டாதோர் என்ற பாகுபாடு இன்றிப் பகைவரையும் தாங்கும் பரந்துபட்ட மனம் உடையவர். மேகங்கள் பொழிவதை மறந்தாலும், மறுத்தாலும் உழவர்கள் உழுவதை மறுக்கவும் மறக்கவும் மாட்டார்கள். உலகு மாறினும் உழவர்கள் சொன்ன சொல் மாறாதவர்கள். உலகைக் காப்பதில் தாயனையர். மன்னர்தம் போர்க்களத்தில் வெற்றி தோல்விகள் உண்டு. உழவர்தம் போர்க்களத்தில் தோல்வி என்பதே கிடையாது. ஏனெனில் உழவர்கள் பிறர்க்கு வழங்குவதில் என்றும் தவறியதே இல்லை. அத்தகு பண்பு நலம் பெற்றவர்கள் உழவர்கள்.

தேர்வேந்தர் போர்க்களத்தில் சிலர்வெல்வர், சிலர் தோற்பர்
ஏர் வேந்தர் போர்க்களத்தில் இரப்பவரும் தோலாரே'.[9]

என அவர்கள் பண்பாட்டை விளக்கி, சமுதாயத்தில் அவர்களின் இடத்தை மதிப்பீடு செய்கின்றார் கம்பர்.

செய்யும் தொழிலைச் செம்மையாகச் செய்தல் வேண்டும். அதுவே தொழிலில் மேன்மை பெறுவதற்குரிய வழியாகும். உழு தொழில் ஐந்து கூறுகளை உடையது.[10] உழுதல், உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், களை கட்டல், காப்பு என்பன அக்கூறுகள். இதனை முறையாக நூல் முழுதும் விளக்கிச் செல்கிறார் கம்பர். 'பருவம் பார்த்துப் பயிர் செய்வது, இன்றியமையாததாகும். நிலத்தை நன்றாக உழுது புற்களை அழித்துச் சேற்றைக் கலக்குவர். எருவிட்டு, மேடு பள்ளம் நீங்கப்பரம்படித்து வரப்பு அமைப்பர். நாற்றங்கால் தயாராகிவிடுகிறது. விதை விதைத்து முளைதோன்றி வளர்கின்றது.

குறித்த நாளில் நாற்றைப்பிடுங்கி முடி முடியாகக் கட்டுவர். நடவேண்டிய இடத்திற்கு எடுத்துச் சென்று வயலில் முடியை விளம்பி நடுவர். ஆற்றுவளம் குறைந்துவிடின் ஏற்றம் வைத்து நீர்பாய்ச்சுவர். உரிய காலத்தில் களை களையப்படும். பால் பிடித்துக் கதிர்முற்றி விளைந்து வளைந்து நிற்கின்றன கதிர்கள். பறவைகளும் விலங்குகளும் பயிர்களை அழிக்காவண்ணம் காவல் காக்கின்றனர். நெல்லறுத்துக் கட்டடித்துத் தாம்புவிடப் படுகின்றது. நெல்தாளைப் போரிடுகின்றனர். நெல்லைத்தூற்றி வந்தவர்க்கு வழங்கி விதைக்கென கோட்டைகள் கட்டி வைக்கின்றனர். உழவர் உண்பது போரடி நெல்லே. நன்செய் உழவே அன்றி காடு வெட்டி நிலத்தைத் திருத்தும் புன்செய் உழவும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[11]

உழவுத்தொழிலில் கருவிகளின் இன்றியமையாமையைப் புலப்படுத்தும் வகையில் கருவிகள் பலவற்றின் ஒவ்வொரு பகுதியையும் சுட்டிக் கூறியுள்ளார் கம்பர். 'கலப்பையும் மேழியும், கொழுவும் நுகமும் இடம் பெறுகின்றன'. நுகத்தாணியும், நுகத்தை வைத்து எருதின் கழுத்தில் பூட்டும் பூட்டாங்கயிறும், எருதை அடித்து ஓட்டும் தார்க்குச்சியும் சிறப்பிக்கப்படுகின்றன. கொட்டு, (மண்வெட்டி) எருக்கூடை, பரம்பு, அரிவாள் முதலிய கருவிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.[12] இக்கருவிகள் கொண்டு அக்கால மக்கள் வேளாண் தொழில் துறையில் பெற்றிருந்த முன்னேற்றத்தை அறிந்து கொள்ளலாம்.

அன்றைய மக்கட் சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பாகுபாடும், சமுதாயத்திற்குத் துணையாய் நின்று தொழில் புரிந்தோரின் பாகுபாடும் இருந்ததைக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். பின்னையோரை 'பற்றுடைய பதினெண்மர்' என்று கூறுகிறது ஏர் எழுபது. உழவர்கட்கு வேளாளர், காராளர், மேழித்தேவர்' பெருக்காளர் என்ற பெயர்கள் வழங்கப்பட்டன. இவர்கள் கழனியில் பணிபுரிய கூலி ஆட்களை வைத்திருந்தனர். அவர்கள் ஏவலோர் என அழைக்கப்பட்டனர். சமுதாயத்தில் அரசரும் அந்தணரும் வணிகரும் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட போதும் அனைவரையும் உணவூட்டி

வாழ்விக்கின்றமையின் 'உழுங்குலத்தில் பிறந்தோரே உலகுய்யப் பிறந்தார்' என்றும், 'சாதிவளம் படைத்துடையதாயனைய காராளர்' என்றும் உழவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். நாட்பொருத்தம், நாண் பொருத்தம் பார்க்கும் பழக்கமும், மீன ராசியில் சனி என்னும் கோள் புகுவதும் வெள்ளி என்னும் கோள் தென்புறம் செல்வதும் நாட்டில் பஞ்சம் வருவதற்குரிய குறிப்பு என்ற கருத்தும் கொண்டிருந்தனர். வேளாண் தொழில் சிறப்புற்று விளங்கியதால் நாட்டில் இயல், இசை, நாட்கங்கள் வளர்ந்தோங்கின.[13]

செய்யுட்கு அழகூட்டுவது அணி. அணியமைத்துப்பாடி கருத்துக்களைக் கற்போர் உளங்கொளச் செய்கின்றார் கம்பர். சிவபெருமான் விடம் உண்ட கண்டத்துக் கறையால் தேவர்கள் பிழைத்தார்கள் என்பது பண்டைய கருத்து. உழுவதால் ஏற்பட்ட எருத்தின் கழுத்துக்கறை மண்ணுலக மக்களையும் காத்து, சிறப்பொடு பூசனைகள் நடாத்த உதவி விண்ணுலகத் தேவர்களையும் காக்கின்றது. ஆதலின் சிவனது கண்டத்துக் கறையினும் எருத்தின் கழுத்துத் தழும்பே பெருஞ்சிறப்புடையது என வேற்றுமையணியால் விளக்குகின்றார். ஞாயிறும் திங்களும் கதிர்களை உடையவை எனினும் அக்கதிர்கள் உயிர்களை வளர்ப்பதில்லை. ஆனல் நெற்கதிர்களோ உயிரை வளர்த்து உயர்வு பெறுகின்றன. கதிர் எனும் வகையில் பெயரால் இரண்டும் ஒரு தன்மைத்து எனினும் செயலால் முன்னதைவிடப் பின்னது உயர்வு பெறுகிறது. இக்கருத்தும் வேற்றுமையணியால் வீறு பெறுகின்றது. நுகத்தடியை எருத்தின் கழுத்தில் வைத்துப் பூட்டுகின்ற கயிறு கவிஞர் கண்ணுக்கு மணமகளாம் மண்மகளின் மங்கலக் கயிருகக் காட்சியளிக்கின்றது.

தீட்டு புகழ்ப் பெருக்காளர் செழுநுகத்தோடு உழும்பகடு
பூட்டுகின்ற கயிறிரண்டும் புவிமகள் மங்கலக்கயிறே.[14]

என்று பூட்டாங்கயிற்றை மங்கலக் கயிருக உருவகம் செய்து மகிழ்கின்றார் கவிஞர். இவ்வாறு அணிநலத்தோடு அழகு பெற்றுச் சிறக்கின்றது நூல்.

மனிதனுக்கு உடலின் ஒவ்வொரு உறுப்பும் இன்றியமையாததே. எந்த ஒரு சிறு உறுப்பு இல்லாதிருப்பினும் அவன் குறையுடையவனே. ஆயினும் சில உறுப்புக்கள் இல்லையாயினும்

உயிர்வாழ முடியும். கையில்லாமல் கால் இல்லாமல் இருப்பவர் களைக்காண முடியும். ஆனால் தலையில்லா மனிதனைக் காண முடியாது. தலையிருந்தும் இதய ஓட்டம் நின்றுவிடின் அவன் மனிதன் அல்லன்; பிணம். அதைப்போல் கையும் காலும் கண்ணும் காதுமாகப் பல பாடல்கள் நூலுள் இருப்பினும் எல்லா வற்றிற்கும் மேலாக, இதயமாக ஒரு பாடல் விளங்குகின்றது

மழை தவறாது பெய்ய வேண்டுமாயின், உழவர்கள் தங்கள் ஒழுக்கமாம் கடமையில் தவறாது நின்று ஏரை நடத்த வேண்டும். பசியை ஒழிக்க அவர்கள் பசுமைப்புரட்சியை மேற்கொள்வார் களாயின், மொழி வளம் பெறும்; முத்தமிழ் தழைத்தோங்கும். நாட்டிற்கு நல்ல பல சிறப்புக்கள் வந்தெய்தும்; அறிவாற்றல் பெருகும். கொள்வாரும் கொடுப்பாருமின்றி எல்லார்க்கும் எல் லாம் என்ற சமநிலை ஏற்படும். உலக அறங்கள் செவ்வனே நடை பெறும். நாட்டு மக்கள் நலமும் நற்காப்பும் பெறுவர். இன்பம் விளையும். இக்கருத்துக்களைக் கவிதையில் வடித்து நூலுக்கு உயிர் ஊட்டுகின்றார் கம்பர்.

'கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில்புகழ்சால் இயலிசை நாடகம்நடக்கும்
சீர்நடக்கும் திறம்நடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே.[15]

ஏர் எழுபது கம்பரின் மா காவியமான இராமாயணத்தைப் போல் அத்தகு கவிதைச் சுவையும் கற்பனை வளமும் உடையது அன்று எனினும் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ப உழுதொழி லின் சிறப்பை மக்கள் மனதில் பதிய வைப்பதில் வெற்றி பெற்று விளங்குகின்றது. உழவியல் குறிப்புகளையும் அத்தொழில் பண் பையும் அதன்வழி அறியக்கிடக்கும் பண்பாடுகளையும் எடுத்துக் கூறி அவற்றை உணர்ந்து தொழில் செய்வோர் மக்களிடை மாண்புறுவர் என்ற கருத்தை வெளிப்படுத்தி வீறுநடை போடு கின்றது.

மேற்கோள் விளக்கம்

1. கலைக் களஞ்சியம், தொகுதி 5, பக்கம்—466
2. தொல், பொருள், புறத்திணை, நூற்பா—74
3. " " " நச்சர் உரை—74
4. தொல், பொருள், மரபு, நச்சர் உரை—81
5. தண்பணைவயல் உழவனைத்
   தெண்கிணைவன் இருந்து புகழ்ந்தன்று
   புறப்பொருள் வெண்பா, வாகை, கிணைநிலை, 31
6. குணங்கொள் சடையன் புதுச்சேரி கொடையான் சேதிராயன் முதல்
   கணங்கொள் பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூற
   இணங்கும் பரிசலீந்து புவியேழும் புகழேர் எழுபதுடன்
   மணங்கொள் திருக்கை வழக்கநூல் வைத்தார் சோழமண்டலமே
   ஏர் எழுபது, வை.மு.கோ. உரை, சென்னை, 1967. முன்னுரை, பக்கம். 4
7. ஏர் எழுபது, பாடல் —13, 18, 20
8. ஏர் எழுபது, பாடல், 4, 1, 32, 11
9. ஏர் எழுபது, பாடல், 39, 43, 51, 4, 10, 58.
10. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
    நீரினும் நன்றதன் காப்பு. குறள்—1038.
11. ஏர் எழுபது, பாடல், 1, 25, 26, 29, 32, 39, 50, 66
12. ஏர் எழுபது, பாடல், 3—14
13. ஏர் எழுபது, பாடல், 8, 59, 9
14. ஏர் எழுபது, பாடல், 15, 48, 9
15. ஏர் எழுபது, பாடல், 18

21. முக்கூடற் பள்ளு

முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை, சிற்ருறு, கோதண்டராமநதி ஆகிய மூன்று ஆறுகள் கூடு கின்ற ஓர் ஊராகும். பள்ளர் என்னும் பெயர் உழவுத்தொழில் செய்யும் ஓர் இனத்தைக் குறிக்கும் பெயர். முக்கூடலில் உள்ள பள்ளர்தம் வாழ்வை நாடகப் போக்கில் விளக்கும் நூலாதலின் இந்நூல் முக்கூடற்பள்ளு எனப்பட்டது.

பள்ளுநூல்கள் தமிழகத்தில் ஏராளமானவை உள்ளன. திருவாரூர்ப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, சீர்காழிப்பள்ளு, சேற்றூர்ப்பள்ளு, தஞ்சைப்பள்ளு, தென்காசிப்பள்ளு, திருச்செந் தில்பள்ளு என்பன அவற்றுள் சிலவாகும். பெயர்களில் மாற்றமே ஒழிய நாடகப் பாங்கிலும் கருத்தோட்டத்திலும் கற்பனை வளத் திலும் பெரும்பான்மையும் இந்நூல்கள் அனைத்தும் ஒத்த தன்மை யுடையன. பள்ளன் ஒருவன், அவனுக்கு இரண்டு மனைவியர், ஒரு பண்ணையார், இவர்களைக்கொண்டே இந்நாடக இலக்கியங் கள் நடையிட்டுச் செல்கின்றன.

17 ஆம் நூற்றுண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு ஒரு சுவை மிகுந்த நாடக நூலாகும். இந்நூலின் வாயிலாக, சமு தாயத்தில் உழவர்கள் பெற்ற இடம், அவர்தம் அகவாழ்வு, புற வாழ்வு, பயிர்த்தொழிலின் உயர்வு, அத்தொழிலின் நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். இந்நூலை வேளாண்மைக் கண்ணேட்டத்தில் நோக்குவதால், காலந்தோறும் வேளாண்மை யில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றை அறிந்து கொள்வதுடன் அம்மக்களின் பண்பாட்டையும் தெரிந்து கொள்ள

வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வகையில் முக்கூடற்பள்ளு ஒரு காலக் கண்ணாடியாக விளங்குகிறது.

இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர், இவ்விலக்கியம் தோன்றிய காலத்தில் நிலத்திற்கு உரிமை உடையோர் ஒருசிலராகவும் அதில் உழுது வாழ்வோர் பலராகவும் இருந்தனர். நிலத்துக்கு உரிமையுடையோர் நிலக்கிழார் எனப்பட்டனர். அவர்கள் தங்கள் பண்ணையத்தைக் கவனிக்க மேலாட்களை அமர்த்தியிருந்தனர். அம்மேலாட்கள் பண்ணையார் எனப்பட்டனர். இப் பண்ணையார்கள் பல ஆட்களை வைத்துக் கொண்டு வேளாண்மை செய்தனர். அவ்வாட்களே உழவர்கள் எனப்பட்டனர். அவர்கள் சமுதாயத்தில் மிகவும் பின் தள்ளப்பட்டுக் கடைநிலையினராகக் கருதப்பட்டனர். உழைப்பதும் உண்பதும் அவ்வப்போது ஏற்படும் உணர்வுகளை நிறைவு செய்து கொள்வதுமே அவர்களின் வாழ்க்கை நிலையாக இருந்தது. அவர்கட்கு உயர்ந்த குறிக்கோளோ, சிறந்த வாழ்க்கை முறையோ, எதிர்காலத் திட்டமோ இருந்ததாகச் சிறிய குறிப்பேனும் காணப்படவில்லை. இத்தனைக்கும் மேலாக அவர்கள் சமுதாயத்தில் தீண்டப்படாதவர்களாகவே கருதப்பட்டனர். அவர்கள் உழுது விளைத்த நெல்லை உலகம் உண்டு வாழ்ந்த போதிலும், அவர்கள் அருகில் வருவதும் அவர்களைத் தொடுவதும் இழிவு என்று கருதினர் மக்கள். அதனை,

பக்கமே தூரப் போயும்
தக்கசோறு என்வெள் ளாண்மை
பள்ளா பள்ளா என்பர்
மெய்கொள் ளாதவர்

முக்கூடற்பள்ளு - *15*

என முக்கூடற்பள்ளு எடுத்து இயம்புகின்றது.

இவ்வுழவர்கள் தாம் செய்யும் தொழிலில் தெளிந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்தனர். பருவ மழையை எதிர்நோக்கியும் ஆற்றுநீர், குளத்து நீரைப் பயன்படுத்தியும் பயிரிட்டனர். பருவம் வர, மழை வேண்டிக் கடவுளை வணங்குவதும், மழைபெய்து வெள்ளம் பெருகி வயல்களில் பாய்வதும், பயிரிடுவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளா

கும். நாற்று விட்டதும் வயல்களை நடவுக்கு அணியமாக்குவர். "ஆட்டெரு அவ்வருடம்; நல்ல மாட்டெரு மறுவருடம்'' என்பது பழமொழி. ஆட்டெரு செயற்கை உரம்போல பயிர்கட்கு உடனடியாகப் பயன்படும். மாட்டெரு மக்கி ஓராண்டு காலத்திற்குப் பின்னர்தான் பயிர்கட்குப் பயன்படும். இவ்வுண்மையை நன்றாக உணர்ந்திருந்த அவர்கள் வயல்களுக்கு ஆட்டுக்கிடை வைத்தனர்.

பெரும் கட்டிகள் சிறுசிறு கட்டிகளாகும் வரை உழுதால் எருவும் இடவேண்டுவதில்லை என்ற வள்ளுவத்தின் வாய்மொழிக் கேற்ப

முந்தித் தரிசை அடித்து மறுத்து
முச்சாலடித்திட்டு உழவுநாலும்
முழுதும் உழுது திருந்தப் பரப்பு
மூன்றும் தடவியே.

முக்கூடற்பள்ளு - *125.*

என தரிசு உழவு, மீண்டும் மூன்று உழவு, பின்னர் நான்கு உழவு, பின்னர் பரம்படித்தல் எனப் பலமுறை உழுது வயல்களை நிரவினர். வயல்களில் சேறு நிறைந்திருப்பின் தண்ணீர் விரைவில் வற்றாமல் நிற்கும் என்ற வேளாண்மை நுட்பத்தை நன்கு உணர்ந்து உழவு செய்தனர். நாற்று நடுபவர்கள் வரிசை வரிசையாக நின்று பாடலோடு பயிர் நட்டனர். பயிர் மிகவும் நெருங்காமல், வரிசை மாறிக் கலந்து போகாமல் அளவாக நட்டனர். 'நெருக்கி நட்டு நெல்லைப் பெருக்கு' என்னும் புதுமொழி அவர்கட்குப் பழமொழியாகும். ஏனெனில் 'தென்னைக்குத் தேரோட, வாழைக்கு வண்டியோட, நெல்லுக்கு நண்டோட' இடைவெளி விட்டு நடவேண்டும் என்பது அவர்கள் வழிவந்த பழமொழியாகும். பயிர்கள் நடவேறித் தழைத்து, புடைவிட்டு, அன்னம் பிடித்து, கதிர் காய்ந்து பழுத்து நிற்கின்றன. அறுத்து, கட்டடித்துச் கடாவிட்டு, வைக்கோலைப் பிரித்தெடுத்துப் பொலி தூற்றுவர். அளந்து அளவு கூறுவான் உழுதவன். மூட்டைகளை வண்டியிலேற்றி வீட்டிற்கு எடுத்துச் செல்வார் பண்ணையார். விளைந்த நெல்லின் ஒரு பகுதியைக் கோயில் பணிக்காகக் கொடுப்பதும் அந்நாளில் இருந்து வந்த ஒரு வழக்கமாகும்.

முக்கூடற்பள்ளில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன. முத்துச்சம்பா, பூஞ்சாலி, பூம்பாளை, மச்சு முறித்தான், சொறிக்குரும்பை, வெள்ளச்சம்பா, மறுவல்லிச் சம்பா, நீலச்சம்பா, வில்லூன்றிச்சம்பா, கடுக்கன்சம்பா, இராச வாணன், கதலிவாழை, சித்திரக்காலி, வாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்த நெல், மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், மூங்கிற்சம்பா, கத்தூரிச்சம்பா, வாணன்நெல், காடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, வெள்ளைச்சம்பா, புத்தநெல், கருங் குறுவை, புனுகுச்சம்பா, செந்தாழை, பெருவெள்ளை, முத்து வெள்ளை, பச்சை, மூவன், இட்டமலை, முண்டன் என்பன அவற்றுள் சில.

இந் நெற் பெயர்களில் பெரும்பாலானவை நெல்லின் தன்மையை ஒட்டி அமைந்த பெயர்களாக உள்ளன. மிகுந்த நீர்ப் பெருக்கிலும், வெள்ளத்திலும் விளைவது வெள்ளச்சம்பா, காதில் அணியும் கடுக்கன் போல் இருப்பது கடுக்கன் சம்பா, காடையின் கழுத்து நிறம்போன்று இருப்பது காடைக்கழுத்தன், ஊசி போன்று இருப்பது வாலான், சீரகம் போல் இருப்பது சீரகச் சம்பா, மூக்கு நீண்ட நெல் மூக்கன், வாழைக்குலை போல் மணிகள் நிறைந்திருப்பது குலைவாழை என்ற விளக்கம் அவ்வப் பெயர்களிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். இப்பெயர்கள் கொண்டு அம்மக்கள் நெற்பயிரிடுவதில் பெற்றிருந்த அறிவின் நுட்பத்தை அறியலாம்.

இன்றுபோல் எந்திரக்கலப்பை இல்லாத காலமாதலின் அன்று உழவுக்கு எருதுகள் இன்றியமையாதவையாய் இருந்தன. நெல்லிற்குப் பெயரிட்டது போலவே இவ்வெருதுகட்கும் அவற்றின் தரம், அவை வாங்கப்பட்ட இடம், அவற்றின் இனம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டிருந்தனர். குடை போன்று வளைந்த கொம்புள்ளது குடைக்கொம்பன், செம்புள்ளி களையுடையது செம்மறையன், வளர்ந்தகன்ற குளம்புகளுடையது குளத்துக்குளம்பன், குற்றாலத்தில் வாங்கியது குற்றாலன், மங்க லான நிறமுடையது மடப்புல்லை, கருந்தோல்மேல் வெண்ணிறம் கொண்டது மயிலை, கொம்பில்லாதது மோழை, கழற்சிக்காய் போன்ற கண்ணுடையது கழற்சிக்கண்ணன், ஒரு கொம்புடையது ஒற்றைக்கொம்பன் என்பன எருதுகட் கிடப்பட்டிருந்த பெயர் களுள் சிலவாகும். ஒரு பண்ணையத்திலுள்ள எருதுகள் ஒவ்

வொன்றிற்கும் இவ்வாறு பெயர் வைத்திருப்பது, அவர்கள் அவற்றைத் தனிக் கவனம் செலுத்திப் பேணிக் காத்தமையைப் புலப்படுத்துகின்றது. ஏனெனில் கால்நடைகள் உழவர்க்குப் பெருஞ் செல்வமன்றோ?

அன்றைய உழவுக் கருவிகளின் பெயர்களும் நூலுள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. பெரும் பண்ணையங்களில் கருவிகள் ஒவ்வொன்றிலும் எண்ணிக்கை மிகுந்தவை இருந்தன. கலப்பைகள், மேழிகள், நிலத்திற்குத் தகுந்தாற்போல் உழவு செய்யச் சிறியதும் பெரியதுமாய கொழுக்கள், எருதின் கழுத்தில் பூட்டும் நுகங்கள், கலப்பையையும் நுகத்தையும் இணைக்கும் வடக் கயிறுகள், கலப்பை சேறு நிறைந்துவிடின் அதைக் குத்தித் தள்ளக் 'குத்தி', உழுத சேற்றை நிரவப் பரம்புகள், பரம்பையும் நுகத் தையும் இணைக்கும் நீண்ட மரமாகிய வள்ளக்கை முதலியன சில உழுகருவிகளாகும். இவை அக்கால மக்களால் சீர்திருத்தி யமைக்கப்பட்ட வேளாண் கருவிகள். இக்கருவிகள் தனிமனித உழைப்பிற்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன.

நூலில் வரும் அழகிய கற்பனைகளை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பம் பயக்கின்றனவாக உள்ளன. முக் கூடற்பள்ளின் காவியத் தலைவனுடைய இரண்டு மனைவியரும் ஆசூரின் வடகரையிலும் தென்கரையிலும் பிறந்து வளர்ந்தவர்கள். தங்கள் நாட்டுப் பெருமையை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் கூறிக்கொள்கின்றனர். வடகரைப் பகுதியில் மரங்கள் மிக்கிருந்தன. தென்னையின் குலைகளைப் பாக்குமரங்கள் தாங்கி நின்றன. பாக்கு மரக்குலைகளை மாமரங்கள் தாங்கின. மாங்கனிகளைப் பலா மரங்கள் தாங்கின. பலாப் பழங்களை வாழை மரங்கள் தாங்க முடியாமல் தாங்கி வளைந்துவிட்டன. அவ்வாழை மரங்களை மாதுளைக் கொம்புகள் தாங்கி நின்றன.

'மீது உயர்ந்திடும் தெங்கிள நீரை
    மிடைந்த பூகம் சுமந்துதன் காயை
சூதம் ஒன்றிச் சுமக்கக் கொடுக்கும்
    சூதம் தன்கனி தூங்கும் பலாவின்
ஓதும் அந்தப் பலாக்கனி வாழை
    உளுக்கவே சுமந்து ஒண்குலை சாய்க்கும்
மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்
    வளமை ஆசூர் வடகரை நாடே.

முக்கூடற்பள்ளு, பாடல். 25

(பூகம் - *பாக்குமரம், மிடைந்த - நெருங்கிய, சூதம் - மாமரம்*)

தென்கரைப் பகுதியில் செடிகொடிகள் அதிகம். தாமரை தன் இலைகளை நீட்டி இஞ்சியைத் தொட்டது. இஞ்சியோ மஞ்சள் இலைகளைத் தொட்டிழுத்தது. மஞ்சள் நெல் அளவிற்கு வளர்ந்து நெல்லோடு அளவளாவியது. நெல் கரும்பென வளர்ந்து கரும் போடு இணைந்து நின்றது.

பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்
பச்சை இஞ்சியில் பார்சடை தீண்டும்
தங்கும் இஞ்சியும் மஞ்சள் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும்அந்த மஞ்சள்
அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்கும்அச் செந்நெலும் அப்பால்
செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே.

முக்கூடற்பள்ளு, பாடல்—26

(பங்கயம் - தாமரை, குரம்பு—வயல், பார்சடை—நீண்ட இலை)

நாட்டின் வளம் மிகுதி என்பதையும், மரங்கள் ஒன்றை ஒன்று தாங்குவது போல மக்கள் ஒருவரை ஒருவர் தாங்கிக் கொள்கிறார்கள் என்பதையும் இவ்வழகிய கற்பனை காட்டுகிறது என்பதைக் காட்டிலும் பொருள் வளத்தால் வளர்ந்தவர்கள் வளராதவர்களை அழுத்திக் கொண்டே இருந்திருக்கின்றார்கள் என்பதை இக்கற்பனை எண்ணத் தூண்டுகிறது என்றும் கூற லாம். அதே போல் இஞ்சியும் மஞ்சளும் பிறவும் அளாவுவது போல் மக்கள் ஒருவரோடு ஒருவர் அந்நாட்டில் இணைந்து வாழுகிறார்கள். என்பதைக் காட்டிலும் சமுதாயத்தில் அழுந்திக் கிடக்கும் மக்கள் வளர்ந்தவர்களுக்கு இணையாக நாமும் வளர வேண்டும் என்ற துடிப்போடு எட்டிப் பிடிக்க முயலுகிறார்கள் என்ற குறிப்பு உள்ளதாகவும் கருதலாம்.

17 ஆம் நூற்றாண்டில் உழுபவர்கள் வாழ்க்கை சீர்பட்ட நிலையில் அமையவில்லை. நிலம் உடையவர்களுக்கும் நிலத்தை உழுபவர்களுக்கும் பெரியதோர் இடைவெளி இருந்து வந்துள் ளது. உடையவர்கள் அவ்வாறு இருப்பது தங்கள் உரிமை என்றும், உழைப்பவர்கள் காலமெல்லாம் உழைக்க வேண்டியது அவர்கள் கடமையென்றும் கருதினார்கள். நிலக்கிழாருக்கும் உழு

பவர்க்கும் இடையே திரையாகப் பண்ணையார்கள் இருந்து வந்துள்ளனர். அவர்கள் நிலக்கிழாரின் அன்பையும் உதவியை யும் பெற உழவர்களை உயரவிடாமல் வைத்திருந்தனர். அவர்கள் இவ்விருவர்க்கும் இடையே நிரந்தரமானதொரு இடைவெளியை ஏற்படுத்தி விட்டனர். அவ்விடைவெளியைப் போக்கும் ஆற்றல் உழைப்போர்க்கு இல்லை. இடைவெளியே வேண்டாம் என்ற எண்ணம் உயர்ந்தோர்க்கும் எழவில்லை. 2000 ஆண்டுகட்கு முற் பட்ட சங்ககாலத்திலும் கம்பர் வாழ்ந்த 12 ஆம் நூற்றாண்டிலும் உழவுத்தொழில் போற்றப்பட்ட அளவிற்குப் பிற்காலத்தில் போற்றப்படவில்லை. இன்று நிலை மாறிவிட்டது என்றாலும் முற்காலம்போல உழைப்பைப் போற்றும் காலம் இன்னும் வர வில்லை என்பது மிகையன்று. உழைப்பைப் போற்றுங் காலமே உயரிய பண்பாடு நிலவும் காலமாகும்.

22. உழுவோரும் உலகோரும்

தேவை ஏற்படும் பொழுதுதான் ஒன்றைப்பற்றிச் சிந்திக்கின்றோம். இது தேவைப்படுகின்றதே இதனை எப்படித் தேடுவது? எப்படிப் பெறுவது? இது நமக்குக் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் இதற்கு மாறாக வேறு எதையேனும் வைத்துச் சரி செய்ய முடியுமா? என்றெல்லாம் சிந்தனை விரிவடைகின்றது. சிந்தனை வலுப்பெற்றால் புதுப்பொருள்கள் தோன்றுகின்றன, வலுப்பெறாவிடின் வாழ்வில் சோர்வு தலைகாட்டுகின்றது. இது மனித இயல்பு. தேவையில்லாத பொழுதும் வருங்காலத் தேவையை உணர்ந்து ஒன்றைப்பற்றி சிந்திப்பதும், அதன் சிறப்பைப்பற்றி எடுத்து விளக்கி அதன் இன்றியமையாமையை உணரச்செய்வதும் அறிஞரின் இயல்பு. முன்பு நிகழ்ந்தவை, இன்று நிகழ்பவை, நாளை நிகழ இருப்பவை ஆகிய மூன்று காலத்தையும் உணர்ந்து, உணர்ச்சியில் நின்று கூறுவது கவிஞரின் இயல்பு. மனிதர்கள் மறைந்து விடுகிறார்கள். அறிஞர்களும் சிறிது காலத்திற்குப்பின் அவ்வாறுதான். ஆனால் நிலைத்த கருத்துக்களை, மனித சமுதாயத்திற்குத் தேவையான அடிப்படைக் கருத்துக்களைக் கூறும் கவிஞர்களோ என்றும் வாழ்கிறார்கள். அதனால் அன்றோ வள்ளுவரும் கம்பரும், மில்டனும், ஹோமரும், கதேயும் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

கவிஞர் ஒருவர் அழகிய பூஞ்சோலைக்குள் புகுந்தார். அதன் அழகில் ஈடுபட்டுத் தம்மை மறந்தார். மலர்களின் மணத்தை நுகர்ந்து இன்புற்றார். மலர்ந்து நிற்கும் தாமரை மலர்களும், அம்மலர்களைத் தாங்கி நிற்கும் தடாகமும் அவரது கண்களைக் கவர்ந்தன. அச்சோலையின் அமைப்பும், அதனை நேர்த்தியாக

வைத்து வளர்க்கப் பட்டிருக்கும் முறையும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. இத்தகைய மேலோட்டமான உணர்வு, அழகுணர்ச்சி, பொதுவாக எல்லார்க்கும் வாய்ப்பது இயல்பு. ஆனல் இவர் கவிஞர் அல்லரோ? இன்னும் ஒரு படி மேலே செல்கின்றார். இந்த அழகிய சோலையை அமைத்தவர் யரோ? இதனை இவ்வளவு அழகாக அமைக்க எத்தனைப் பாடுகள் பட்டிருப்பாரோ? இன்று இதனைக் காப்பவர் யாரோ? என்றெல்லாம் கவிஞருக்கு எண்ணங்கள் தோன்றலாயின.

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப்பாரினிலே — முன்னர்
எத்தனைத் தோழர்கள் இரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே — எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே

இத்தகைய எண்ணங்களோடு சோலையைக் கடந்து சென்றார். செந்நெல் வயல்களும் செழுங்கரும்புத் தோட்டங்களும் அவர் பார்வையில் தட்டுப்படுகின்றன. பூஞ்சோலையினும் இவ்வயல்கள் இன்றியமையாதனவன்றோ? இவை மக்களை வாழ்விக்கும் 'உயிர் ஊட்டங்கள் அல்லவா? இவைகளை அமைத்தவர் யார்? இவ் வமைப்புக்கு எத்தனை எத்தனைக் காலங்கள் ஆயினவோ? என எண்ணிப்பார்த்தார்.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே — உனக்கு
எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே

பாரதிதாசன் கவிதைகள் - 1 பக்கம் - 156

ஆம், இவை சோலைகளாகவும், தாமரைத் தடாகங்களாகவும், நெல் வயல்களாகவும் முன்பே தோன்றிடவில்லை. காடு மேடாக, கல்லும் முள்ளுமாகக் கிடந்த இடங்கள் இவை. இயற்கை தன்னிச்சைபோல் செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், மனிதன் காலடி எடுத்து வைக்க முடியாத நிலையில் இருந்தவை.

வானளாவிய நெடிய மரங்கள், மனிதர்கள் புகமுடியாத நெருக்கமான புதர்கள், நிலத்தைக் கிழித்துக் கொண்டு ஓடும் ஆறுகள், குகையில் வாழும் கொடிய விலங்குகள், நச்சுப் பாம்புகள் இவை யாவும் தன்னிச்சை போல் வளர்ந்தன; வாழ்ந்தன; திரிந்தன.

இக் காடுகளை அழித்து, மரங்களை வெட்டி, மண்ணைத் திருத்தி நிலமாக்கி, சிறிய சிறிய ஊர்களாக்கி வாழ்வதற்கு வசதியாகச் செய்து கொண்டனர் மனிதர். உறைவதற்கு மட்டும் இடம் கண்டால் போதுமா? உண்ண உணவு வேண்டுமன்றோ? வரப்பமைத்து வாய்க்கால் அமைத்து உழுது உழுது நிலத்தைப் பண்படுத்திக் காடுகளைக் கழனிகளாக மாற்றினர். அவர்களின் உழைப்பின் பயனன்றோ இன்று கழனிகளாக, கதிர்களாகக் காட்சியளிக்கின்றன? கதிர்களை அறுத்துக் கொள்கிறோம்; அவற்றை உருவாக்கியவர்களை மறந்து விடுகின்றோம்.

நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப் பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப் பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத் தைஅந் நாளில்
புதுக்கியவர் யார்?அழகு நகர்உண் டாக்கிச்
சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெல்சேர உழுதுஉழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்?

பாரதிதாசன்—புரட்சிக்கவி—பக்கம் 32

அவர்களை மறந்தால் மீண்டும் கதிர்கள் தோன்றுமா? கழனிகள் பெரிய காடாகவன்றோ மாறிவிடும்? இரவு பகல் என்றும் புனல் என்றும் அனல் என்றும் பாராமல், கடும்பசிக்கும் இடையறாத நோய்களுக்கும் பலியாகி, கைகால்கள் உடல்கள் சிந்தும் பச்சை ரத்தம் பரிமாறி, இந்த நாட்டைச் சலியாத வருவாய் உடையதாக ஆக்கித் தந்தார்கள். அவர்களின் இன்றைய நிலை என்ன? சமுதாயத்தில் உழுபவர்கள் பெறும் தகுதி யாது? அவர்கள் எலி போன்றும் முயல் போன்றும் மிகச் சாதாரணமானவர்

க்ளாக, வலியவர்கள் நினைத்தால் மிக எளிதில் அழிந்து விடக் கூடிய அளவிற்கு மிகவும் எளியவர்களாக இருக்கின்றார்கள்.

உழுபவர்களின் உழைப்பில் விளைந்தவைகளைப் பெற்று வாணிகம் செய்கின்றவர்கள் மாட மாளிகைகளில் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வில் செல்வம் கொழிக்கின்றது. ஆனால் உழைக் கின்ற உழவனோ இன்றும் அந்த ஓட்டைக் குடிசையில் தான் வாழ்கின்றான். அவன் பாட்டனும் தந்தையும் அதில்தான் வாழ்ந் தார்கள். அவனும் அவன் மகனும் கூட அக்குடிசையில்தான் வாழ்கிறார்கள். இனியும் அதில் தான் வாழ்வார்கள். அவர்கள் பெறுவது கூலிதானே? நடவுக்கும் அறுப்புக்கும் கூலி பெறுகி றார்கள். பல சமயங்களில் போரடி நெல்தான் அவர்களது பங்காக இருக்கும். போராடிக் கேட்டால் கொஞ்சம் கூடுதலாகக் கூட்டித் தருவார்கள். இதுதான் அவர்களது நிலை.

இந்த நடைமுறைக் காட்சிகளை எண்ணிப் பார்க்கின்றார் கவிஞர். தம்மையும் அறியாமல் 'இப்படிப் படைத்தானே அந்தப் படைப்புக் கடவுள்' என்று அவனைச் சாடுகின்றார். இதற்கெல்லாம் காரணமான மனிதர்களைச் சாடமுடியாத பொழுது எல்லார்க்கும் கிடைத்தவன் அந்த உலகு இயற்றியான் தானே?. அவனைப் பண்பில்லாதவன் என்றார் ஒரு பழம் புலவர்.[1] இவ்வாறு ஏற்றத் தாழ்வோடு உலகைப் படைத்த அவனை 'ஒழிக' என்றார் திருவள்ளுவர்.[2] ஆனால் இக்கவிஞரோ அவ்வாறு கூறவில்லை. உழைத்தும் உழவு செய்தும் அதனை அனுபவிக்க விடாமல் செய் கின்றவர்களைத் தட்டிக் கேட்க உழுபவர்களே உங்கள் கைகளை உயர்த்துங்கள் எனப் பாடுகின்றார். இவர் புரட்சிக் கவிஞர்.

நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பு இலாதசெல்வர்
உலகைஆண்டு உலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்!

பாரதிதாசன் கவிதைகள் 1-134

இயற்கைக் காட்சிகளைக் கண்டு மனம் மகிழ்ந்து வரச் சென்ற கவிஞருக்குச் சிந்தனைக் கனல் மூழ, அக்காட்சிகளால் உலகையே அளந்து பார்த்து, நெடுநேரம் ஆகவே வீடு திரும்பி ஞர். நிலவு காய்ந்தது. மன அமைதியை நாடிய புலவர் நிலவை நோக்கினர். சற்று நேரம் அதன் அழகில் ஈடுபட்டார். எந் நேரமும் மக்களின் வாழ்வைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக் கின்றவர்கட்கு எப்பொருளும் உலகின் இயல்பைக் காட்டும் கண் ணுடியாக விளங்குவது இயல்பு. நிலவும் உலகைக் காட்டும் கண் ணுடியாகக் காட்சி தருகின்றது. நிலவோடு விண்மீன்கள் தோன்றி யுள்ளன. கவிஞர் கண்களுக்கு அவை விண்மீன்களாகத் தோன்ற வில்லை. நீல வானத்தையே ஆடையாக அணிந்துள்ள நிலவுப் பெண்ணின் உடலில் தோன்றியுள்ள கொப்புளங்களாகத் தோன்றின. ஏன் அவளுக்குக் கொப்புளங்கள் தோன்றவேண்டும்? இந்த உலகில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு கண்டு உள்ளம் வெதும்பி, அதனுல் உடலும் வெதும்பிக் கொப்புளங்கள் போட்டு விட்டதாம்!

உழைக்கின்றவர்களெல்லாம் வறியராக இருக்கின்ருர்கள். உழைக்காதவர்கள் பிறர் உழைப்பால் செல்வராகிவிடுகின்றனர். 'நாங்கள்தானே உழைத்தோம் எங்கட்கும் கொஞ்சம் பங்கு கொடுக்கக் கூடாதா' என்ற உரிமைக்குரல் கொடுத்தால் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற கொடுமைகள்தாம் மிஞ்சு கின்றன. இதுபோன்ற பல நிகழ்ச்சிகளைப் பலநாள் பகலெல்லாம் கண்டு கண்டு அந்த மங்கை நல்லாள் மனங்கொதித்துப் போய் விட்டாள். அவள் உடலில் கொப்புளங்கள் தோன்றி விட்டன. மங்கையர் மனங்கொதித்தால் என்ன ஆகும்? கண்ணகி கொதித் தெழுந்தாள். என்ன ஆயிற்று?

மண்மீதில் உழைப்போ ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண்டு அந்திக் குப்பின்
விண்மீனய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

அழகின் சிரிப்பு-வானம்-1

மங்கை கொதிக்கின்ருள்! தம்பீ நீ மறத்தமிழன்! என்ன செய்கின்ருய்? என்பது போலப் பாராய் தம்பீ! எனப்பாடுகின்ருர்.

வேருக்கு நீர் இல்லாவிடின் செடி செத்து விடும். அச்சாணி முறிந்து விட்டால் தேர் ஓடாது. வேருக்கு நீர் போலவும் தேருக்கு அச்சாணி போலவும் உள்ள உழவர்களைப் பேணிக் காக்க வேண்டும். இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவு செய்வோர் கைகளில் அடங்கி உள்ளன. ஆதலின் உழைப்பவர்களை மதிக்கவேண்டும். உழைப்பவர்களை மறந்தால் நன்றி மறந்தவர்களாவோம். நன்றி மறந்த பின் பண்பாடு எங்கே? பழம் பெருமை எங்கே? எனவே நன்றி மறவாமை என்னும் பண்பாட்டை நிலை பெறச் செய்ய உழைப்போரை, உழுவோரைப் போற்றுதல் கடமை.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

பாரதி.

மேற்கோள் விளக்கம்

1. புறநானூறு பாடல். 194.
2. குறள்: 1092.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்.

23. தொலைநோக்கில் பண்பாடு

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்கள் இன்று இயற்கையை மறந்து செயற்கை வாழ்வை மேற்கொண்டு விட்டார்கள். பெரும்பாலும் உணர்வுகள் அற்றுப்போய் அறிவுமட்டும் மேலோங்கி நிற்கும்நிலை ஏற்பட்டு விட்டது. எதையும் அறிவுக்கண் கொண்டு பார்க்கும் நிலையே மிகுந்துள்ளது. பண்பாடு அறிவுச் சார்பானது மட்டுமன்று; அஃது உணர்வும் கலந்த ஒன்று. உணர்வும் அறிவும் சமஅளவில் கலந்த வாழ்க்கை வேண்டும். இரண்டில் ஒன்று குறைந்தாலும் மிகுந்தாலும் அவ்வாழ்க்கை குறைபாடு உடைய வாழ்க்கையே. இதனை,

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

குறள் - 997

என வள்ளுவர் குறிப்பிட்டிருப்பது கருதத் தக்கது.

மனிதன் தோன்றிய காலத்தில் உணர்வே மிகுந்து, அறிவுக்குச் சிறிதளவு இடமே இருந்திருக்கக் கூடும். இந்நிலையினைக் கற்காலம் எனில் அது பொருந்தும். அடுத்த நிலையில், சங்க காலத்தில் உணர்வும் அறிவும் பெரும்பான்மையும் சமஅளவில் இருந்து வந்துள்ளது. அதனாற்றான் அக்கால வாழ்வைப் பொற்கால வாழ்வு எனப்போற்றும் நிலையைக் காண்கிறோம். உயிர்களும் பயிர்களும்கூட தமது வாழ்விற்கு வழிகாட்டிகள் எனக் கொண்டனர் அக்காலமக்கள். இயற்கையின் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒன்றைக் கற்பிக்கும் ஆசான் என்று உணர்ந்தனர். உலக

அறங்களில் தலையாய அறமாகிய பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தன்மையை,[1] அஃதாவது தாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் தன்மையைப் பெற்றிருந்தனர்.

இன்று மக்களிடையே உணர்விலும் அறிவிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அம்மாற்றத்திற்குரிய காரணங்கள் பலவற்றுள் மக்கள் தொகைப் பெருக்கமும் ஒன்றாகும். ஒரு குடும்பத்தில் நால்வர் ஐவர் என்று இருந்தபோது ஒருநிலையும், அக்குடும்பமே பல்கிப் பெருகி 40,50 ஆக நிறைந்தபோது ஒருநிலையும் ஏற்பட்டு விடுகின்றது. உணவில், உடையில், உறையுளில் பற்றாக்குறை ஏற்படும்போது பண்பாட்டிலும் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகின்றது. ஒருநாள், இருநாள் பகிர்ந்துண்டு வாழலாம்; தொடர்ந்து பற்றாக்குறையே நீடிக்குமாயின் பகிர்ந்துண்டு வாழும் பண்பு குன்றிப் போய்விடுகின்றது.

> **"தனியொ ருவனுக்கு உணவில்லை எனில்**
> **சகத்தினை அழித்திடுவோம்"[2]**

என்று பாடிய பாரதியாலும் தானுரைத்த சூளுரையைக் காப்பாற்ற முடியாத நிலையே ஏற்பட்டுவிடும். மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்பப் பிற வளங்களும் பெருக வேண்டும். அவ்வாறு தேவைக்கேற்பப் பெருகாததால் பற்றாக்குறை பண்பாட்டையும் குறைத்துவிட்டது.

பண்டை நாளில் பொருள்களையே செல்வங்கள் எனப் போற்றினர். தானியங்களும், கால்நடைகளும் செல்வத்திற்குரிய பட்டியலில் இடம் பெற்றிருந்தன. அவற்றிற்கே முதலிடம் தரப்பட்டது. இன்றுபோல் நாணயங்கள் சிறப்பிடம் பெறவில்லை. ஒருவன் தான் விளைத்த பொருள்களைத் தன் வீட்டில் நெடுநாள் குவித்து வைத்திருக்க முடியாது; நீண்ட நாள் அவைகளைக் காப்பாற்றவும் முடியாது. ஆதலின் ஒவ்வொருவரும் பொருள்களைப் பரிமாறிக்கொள்ளும் நிலை இருந்தது. இன்று அந்நிலை மாறி நாணயங்கள் சிறப்பிடம் பெற்று விட்டன. பணமிருந்தால் எக்காலத்திலும் எப்பொருளையும் வாங்கி விடலாம் என்ற நிலையில் பணமே எல்லாவற்றிற்கும் மேலான தெய்வமாகிவிட்டது. ஆறுவது அறிவாகிய பகுத்தறிவு சிறப்பிழந்து ஏழாவது அறி

வாகிய பணம் உயர் நிலை பெற்றுவிட்டது. பணம் இல்லையாயின் ஆறறிவும் பயனற்றதாகி விடுகின்றது.

மக்களின் வசதிக்காகப் படைக்கப்பட்ட பணம் மக்களை ஆளத்தொடங்கி விட்டது. பொருளைப் பணமாக்கி அதை நாளைக்கு வேண்டும் எனத் தேவைக்கும் மேல் சேர்த்து வைக்கும் தன்மை யாகிய மிகுநிலை உள்ளவரை எல்லாரும் அவ்வொற்றைவழிப் பாதையில்தான் செல்வார்கள். அதனால் உலகை மறந்து தன் பிள்ளை, தன்பெண்டு, தன்சுற்றம் என்ற குறுகிய வட்டத்துக்குள் உலகை அடக்கி விடுகின்றனர்.

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டியாளினும்
கடல்மீதும் ஆணைசெலவே நினைப்பர்.[3]

என்றாற்போலப் பணம் ஆசையை வளர்த்துப் பண்பை மறக்கச் செய்துவிடுகின்றது. இதுபோன்ற பல காரணங்களால் பண்பாடு குன்றி வருகின்றது. இந்நிலையே தொடர்ந்து நீடித்தால் வருங் கால உலகம் எவ்வாறு இருக்குமோ என அஞ்சவேண்டியுள் ளது. 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் நிலை'[4] வந்தெய்தினும் வியத்தற்கில்லை. "பொய்தவழும் உலகநடை என்னென்பேன் என்னென்பேன்" எனப்பாடியவர்கள் வாக்கும் நாளடைவில் உண்மையாகிவிடவும் கூடும்.

இன்று, தான் வாழ வேண்டும், மற்றவர்களைப் பற்றிய கவலையில்லை என்றநிலை இருந்துவருகின்றது. நாளை, தான்மட்டும் தான் வாழவேண்டும், அதற்காகப் பிறர்வாழ்வை அழிக்கவேண் டும் என்றாலும் அதற்கும் அஞ்சாதநிலை உருவாயினும் வியத்தற்கில்லை. இன்று ஒரே நாட்டில் மாநிலத்திற்கு மாநிலம் ஒன்றைப்பற்றி மற்றொன்று கவலைப்படாத நிலையில் உள்ளது. ஒரு மாநிலத்தில் மக்கள் பட்டினியால் சாகிறார்கள் என்ற செய்தியை, உணவைச் சுவைத்துக் கொண்டே எவ்வித உணர்வு மாற்றமுமின்றிப் படித்தறிவதைக்காண்கின்றோம். வருங் காலத்தில் ஒரு வீட்டிற்குள்ளேயே இந்நிலை ஏற்படவும் கூடும்.

இன்றுள்ள எமது, எங்களது என்ற நிலைமாறி, நாளை நான், எனது என்ற நிலை வரவும் கூடும். இவ்வாறு வருமென்று கருதுவதும் மிகையன்று. நேற்று உள்ள நிலை இன்று இல்லை

இன்றுள்ள நிலை நாளை இருக்குமா? என்பது ஐயப்பாடே. ஆதலின் மிகவேகமாக மாறிவருகின்ற உலகில் அடிப்படைப் பண்புகள் மாறாதிருக்க, மனிதர்கள் மனிதர்களாக வாழ, சில கொள்கைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். அவற்றைப் பிறர் வற்புறுத்தலின்றி மனதார ஏற்கும் மனநிலை பெரிதும் வளர வேண்டும். அவை யாவை?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டும். ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற பாகுபாடின்றி அவரவர் பங்கிற்கேற்ப உழைக்க வேண்டும். உடல் உழைப்பு உடையோர் நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைக்க வேண்டும். அறிவாற்றல் உடையோர் 'நாம் வருவாய்க்கேற்ப உழைக்கின்றோம்; நாம்பெறும் ஊதியத்திற்கேற்ப உழைக்கின்றோம்' என்று உள்ளம் நிறைவு கொள்ளும் வகையில் உழைக்க வேண்டும். அவ்வாறு உழைப்பை மேற்கொண்டு செயல்களைச் செம்மையாக முடித்தவர்கள் மனத்தில் நிறைவு தோன்றும். அவர்தம் உள்ளத்தைச் 'செய்வினை முடித்த செம்மல் உள்ளம்'[5] என்று பண்டைய இலக்கியங்கள் பாராட்டுகின்றன. அவர்கள் கொள்ளும் துயில் "திருந்து துயில்"[6] எனப் போற்றப்படுகின்றது. செயல்களைச் செவ்வனே முடித்த மனநிறைவுடன் கொள்ளும் துயில் சிறப்புடையது; இடையீடு இல்லாதது. இன்று உறக்கம் வரவில்லையே என ஏங்குவோர்க்கும், உறக்கத்திற்காகப் பல்வேறு மருந்துகளை நாடுவோர்க்கும் 'செயலாண்மை' என்னும் மருந்து செலுத்தப்படுமாயின் பண்பாடு நிலைக்கும். அத்தகைய மருந்தைக் கவிதை வடிவிலே வடித்துத் தரும்கவிஞர் குலோத்துங்கன் என்பாரின் கருத்துக்கள் ஈண்டு கருதத்தக்கன.

எண்ணுவதும் படைப்பதும்எம் பணிகள்; யாங்கும்
எல்லோர்க்கும் சமவாய்ப்பு நிறைந்த தான
மண்ணுலகைச் சமைப்பதும் எம் குறிக்கோள்; நாளை
வருகின்ற தலைமுறையின் வாழ்வுக் காக
உண்ணுவதும் உறங்குவதும் தவிர்ந்தும், கூடி
உழைப்பதுவே யாம் மகிழும் இன்பம், மற்றும்
விண்ணுலகம் உண்டெனினும் விழைவோ மில்லை
மீளாத நரகெனினும் பயந்தோ மில்லை.[7]

உண்ணுவதையும் உறங்குவதையும் விடுத்துங்கூட உழைப்பதில்

இன்பங் கொள்ளும் உள்ளங்கள் பெருகவேண்டும். உழைப்பே பண்பை அடைதற்குரிய சிறந்த வழியாகும்.

உழைப்பதோடு மட்டுமன்றி அவரவர் கடமைகளையும் சரிவரச் செய்ய வேண்டும். உழைப்பு அனைவர்க்கும் பொதுவானது. கடமை அவரவர்க்கு உரியது; சிறப்பானது. "தாயின் கடமை குழந்தையைப் பெற்று வளர்த்தல்; தந்தையின் கடமை அக் குழந்தையைச் சான்றோன் ஆக்குதல்; மன்னனின் கடமை அவனை ஒழுக்கமுடையவனாக்குதல்; தொழிலாளர் கடமை அவனுக்குத் தேவையான கருவிகளை அமைத்துக்கொடுத்தல்; அக் காளையின் கடமை நாட்டில் பகைவர் புகுதாவண்ணம் பாதுகாத்தல்"[8] எனப் பழம் பாடல் ஒன்று ஒவ்வொருவருக்கும் உரிய கடமையை விளக்கி நிற்கின்றது. அவரவர்க்கு உரிய கடமை இன்னதென்று உணர்ந்து, வரையறை செய்துகொண்டு, அவற்றைச் செய்வதில் 'மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, பசிநோக்காது'[9] எடுத்த செயலை முடிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து கடமையை ஆற்றுதல் வேண்டும்.

பண்டை நாளில் புலவர் ஒருவர் தமக்கு அதிக வயதாகியும் நரை திரை தோன்றாமைக்குக் கூறிய காரணங்களை இங்கு நினைவு கூருவது பொருந்துவதாகும். 'என் மனைவி மாண்புடையவள், இல்லறக் கடமைகளை எல்லாம் செம்மையாக ஆற்றுகின்றாள். 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு அவளோர் இலக்கியம். எங்கள் இல்லத்தில் வாய்த்த செல்வங்களோ அறிவறிந்த மக்களாய் இருக்கின்றனர். 'ஏவா மக்கள் மூவா மருந்து'[10] என்றாற்போல நான் கருதுவதையே என் மக்களும் கருதுகிறார்கள். எனக்கு ஏவல் செய்வோரும் என்னுடை ஏவல் புரிவாரும் நான் நினைப்பதையே செய்கிறார்கள். எனது நாட்டை ஆட்சி செய்யும் மன்னன் கடமை மறவாதவன். நெறியறிந்து ஆட்சி செய்வதால் தீயன எம்நாட்டில் நிகழ்வதில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எம் ஊரில் இருப்பவர்கள் அனைவரும் சான்றோர்கள். நல்லவை எல்லாம் தங்கள் கடமை என மேற்கொள்பவர்கள். மக்கள் அனைவரும் அவரவர்கடமையைச்

செய்து கொள்கைவழி வாழ்கிறார்கள். வீடும் ஊரும் நாடும் சுற்றுச் சூழலும் எல்லாம் செம்மையாகக் கடமையாற்றி இருத்தலின் எனக்கு எவ்வித மனக்கவலையுமில்லை. ஆதலின் நான் இளமைப் பொலிவோடு இருக்கின்றேன்' எனக்கூறினர்.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியர் என வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

புறம் ... 191

(மாண்ட - மாட்சிமைப்பட்ட, நிரம்பினர் - அறிவு நிரம்பினர், இளைஞர் - ஏவலர், கண்டனையர் - கருதியதையே கருதுவர், அதன்தலை - அதற்குமேல், ஆன்று அவிந்து அடங்கிய - நற்பண்புகளால் நிறைந்து உயர்ந்த)

ஆதலின் கடமை உணர்வால் உந்தப்படுகின்றவர் அதனை ஆற்றுவதில் மனநலம் பெறுவர். மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும்.[11]

கடமையைச் செய்பவர்கள், அவ்வாறு செய்வது தங்களது கடமை என்று உணர்தல் வேண்டும். அதற்கான பயனைத் தகுதிக்கேற்ற அளவில் எதிர்பார்த்தல் வேண்டும். சிலர் தம் திறனை மதிப்பீடு செய்வதில் தவறி, தமக்கு அளவுகடந்த திறன் இருப்பதாக எண்ணி ஏமாற்றத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். ஏதோ சில விதிவிலக்குகளைக் காட்டாகக் கொண்டு, தம்மை அவற்றோடு ஒப்பிட்டு, 'அவர்கள் எல்லாம் மேலான வாழ்வு வாழவில்லையா? நாம் ஏன் அத்தகைய வாழ்வை எதிர்பார்க்கக்கூடாது?' என எண்ணி மயங்குகின்றனர். அதனால் இருக்கின்ற வாழ்வையும் சிலர் இழந்து விடுகின்றனர். தன் தகுதிக்கு இயலாதவற்றைக் கற்பனையில் எட்ட முயல்வதும், கூடாதவற்றை உண்டாக்க முயல்வதும் இறுதியில் ஏமாற்றத்தையே தரும். ஒருவன் தனது உண்மை நிலையை அறிவது, தன்னை ஏமாற்றத்திற்கு உள்ளாக்காத சமநிலை மனப்பான்மையை உருவாக்கும். சமநிலை மனப்பான்மை பண்பாட்டை நிலைநிறுத்தும், வளர்க்கும்.

மனிதர்க்குப் புலனடக்கம் வேண்டும். புலன்களை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கண் நல்லவைகளைப் பார்க்க வேண்டும். காது நல்லவைகளைக் கேட்க வேண்டும். நா நல்லவைகளைப் பேச வேண்டும். மூக்கு நல்லவைகளை நுகர வேண்டும். உடம்பு நேரிய சுகத்தை அனுபவிக்க வேண்டும். இவ்வாறு ஐம்பொறிகளையும் அளவான ஈடுபாட்டில் வைத்திருந்தால் எவ்வித குற்றங்குறைகளும் வாராது. குறையில்லா இடம் நிறைதானே. நிறைநிலைதானே உயரிய பண்பாடு. மக்களில் சிலர் ஏன் நாம் உடலை இவ்வாறு வருத்த வேண்டும் என்று எண்ணித் தவருன வழியில் சென்று விடுகின்றனர். அவர்கள் பொறிகளை அடக்கி ஆள்வதற்கும் அவற்றைத் துன்புறுத்துவதற்கும் வேறுபாடு அறியாதவர்கள் ஆவர். எடுத்துக்காட்டாக, நாம் பார்க்க வேண்டியதை, தேவையில்லாத காட்சிகளைப் பார்க்காமல் விட்டுவிடுவது, அல்லது பார்க்க வேண்டாம் என்று ஒதுக்கி விடுவது புலனடக்கமாகும். அதைவிடுத்துக் கண்களை மூடிக்கொள்ள வேண்டும், எதையும் பார்க்கக்கூடாது என்பது துன்புறுத்தலாகும். நாவடக்கம் என்பது அளவாக உண்ணுவதும் பயனுள்ளவைகளைப் பேசுவதுமாகும். அதைவிடுத்து உண்ணுமைலிருப்பதும், பேசாவிரதம் கொள்வதும் துன்புறுத்தலாகும். ஒவ்வொன்றும் இத்தகையதே. இவ்விரண்டின் வேறு பாட்டையும் நன்கு உணர்ந்து ஒவ்வொருவரும் புலனடக்கம் மேற்கொள்ளின் பண்பு நிலை பெறும். அதனைலன்ரே வள்ளுவர்,

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.' என்ருர்.

பரந்த மனமும் விரிந்த குறிக்கோளும் தன்னம்பிக்கையும் தளரா ஊக்கமும் மனிதனை மாண்புடையவனுக ஆக்கும் தன்மை உடையன. இத்தகு பண்புகள் உடையோர் உலகில் பலராக இருப்பினும் அவர்தம் அறிவும் ஆற்றலும் அறிவியல் வளர்ச்சியும் அழிவுப்பாதையில் செல்வதைக் காண்கின்ருேம். அதைவிடுத்து அவர்கள் ஆக்கத்திற்கு வழிவகுக்க வேண்டும். மானிட சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவேண்டும். உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் பசியாற வேண்டும். மனித இனம் மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. வயிற்றுப்பசி

6 . JUN 1978

தீரும் வரை மற்றவைகள் எல்லாம் வெறும் வாய்ப்பேச்சுக்களாகவும், வெற்று வேதாந்தங்களாகவுமே முடியும். ஆதலின் பண்பாடு நிலைபெற நிறைவாக இங்கே பாரதி கூறியதை நினைவு கூர்வது பொருந்தும்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதர்க்கு எல்லாம்"

—பாரதியார்.

மேற்கோள் விளக்கம்

1. குறள் : 322

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

2. பாரதியார் பாடல்கள், பாரத சமுதாயம், 2.
3. தாயுமானவர் பாடல்கள், பரிபூரணானந்தம், பாடல். 10
4. பாரதியார் பாடல்கள், பாரத சமுதாயம், 2.
5. நற்றிணை, பாடல். 45.
6. மதுரைக்காஞ்சி, வரி, 714.
7. குலோத்துங்கன் கவிதைகள், வ. செ. குழந்தைசாமி, கலைவாணி புத்தகாலயம், சென்னை, 1970, பக்கம், 21.
8. புறம் : 312, பொன்முடியார்.

ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

9. நீதிநெறி விளக்கம், பாடல், 55.
10. கொன்றை வேந்தன், வரி, 8.
11. குறள் : 457.